அஷ்-ஷெய்க் நாதிர் நூரி

# சமூக-அரசியல் மாற்றம்

## இஸ்லாமிய வரலாற்று அனுபவங்களின் அடிப்படையிலான சில சிந்தனைகள்

MMC

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

FAIZAL FAREED
AHATHTHIMURIPPU
140, Rasool Nagar, Nahavillu, Palavi 61280
T: 077 0352027, 032 2269077

இருபதாவது வெளியீடு

# சமூக-அரசியல் மாற்றம்

## இஸ்லாமிய வரலாற்று அனுபவங்களின் அடிப்படையிலான சில சிந்தனைகள்

கலாநிதி ஷெய்க் நாதிர் நூரி

தமிழில்:
உஸ்தாத் எம்.ஏ.எம். மன்ஸூர் (நளீமி)

MMC

**Meelparvai Media Centre**
194/2, Dematagoda Road, Colombo 09.
Tel / Fax: 0112 688341
Email: meelparvai@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தலைப்பு:** சமூக-அரசியல் மாற்றம்: இஸ்லாமிய வரலாற்று அனுபவங்களின் அடிப்படையிலான சில சிந்தனைகள்

**நூலாசிரியர்:** கலாநிதி ஷெய்க் நாதிர் நூரி

**தமிழாக்கம்:** உஸ்தாத் எம்.ஏ.எம். மன்ஸூர் (நளீமி)

**முதற் பதிப்பு:** 08 பெப்ரவரி 2008,

**பக்கம்:** 80

**விலை:** ரூபா 120.00

**கணனி வடிவமைப்பு:** எம்.டபிள்யூ.ஏ. அஸார்

**அட்டை வடிவமைப்பு:** அஹ்ஸன் ஆரிப்

**அச்சாக்கம்:** ஏ.ஜே. பிரின்ற்ஸ் (பிரைவேற்) லிமிட்டட்
44, ஸ்டேஷன் றோட், தெஹிவளை

**வெளியீடும் பதிப்புரிமையும்:**
மீள்பார்வை ஊடக மையம்
194/2, தெமட்டகொட றோட், கொழும்பு 09.

**Title:** Samooha-Arasiyal Maatram: Islamiya Varalaatru Anupavangalin Adippadayilana Sila Sinthanaihal
**Author:** Dr. Sheikh Nadir Noori
**Translator:** Usthath M.A.M. Mansoor (Naleemi),
**Type Setting and Layout:** M.W.A. Azar,
**Cover Design:** Ahsan Ariff,
**Printers:** A.J. Prints (Pvt) Ltd,
**Publishers:** MMC, 194/2 Dematagoda Road, Colombo 09,
**First Print:** 08 February 2008,
**Pages:** 80
**Price:** Rs. 120.00
**Copyright:** © MMC.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூலாசிரியர் பற்றி...

நாதிர் அப்துல் அஸீஸ் முஹம்மத் அல்-நூரீ என்ற முழுப் பெயர் கொண்ட இவர் 1954ம் ஆண்டு குவைத் நாட்டில் பிறந்தார். 1977இல் குவைத் பல்கலைக்கழகத்தில் சமூக நலத் துறையில் கலைமாணிப் பட்டத்தையும், இஸ்லாமியக் கற்கைகள் துறையில் முதுமாணி மற்றும் கலாநிதிப் பட்டங்களையும் பெற்றார்.

இஸ்லாமிய உலகில் பிரபலமான சமூக செயற்பாட்டாளராகவும் புத்திஜீவியாகவும் மதிக்கப்படும் இவர், சமூக நல செயற்பாட்டில் மிக நீண்ட அனுபவங்கள் கொண்டவர் என்பது மட்டுமன்றி, பல சமூக செயற்பாட்டு நிறுவனங்களின் பிதாமகனாகவும் உள்ளார்.

கடந்த முப்பது வருடங்களுக்கும் மேலாக இவர் ஆற்றி வந்துள்ள பணிகளுள் சில:

- குவைத் வணிகக் கல்லூரி மற்றும் பொலிஸ் பயிற்சிக் கல்லூரி என்பவற்றில் ஆசிரியர் *(1977-1979)*
- குவைத் அரசின் வக்ஃபு மற்றும் இஸ்லாமிய விவகார அமைச்சின் இஸ்லாமிய சட்டக் கலைக் களஞ்சிய ஆய்வாளர் *(1981-1982)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- வக்ஃபு மற்றும் இஸ்லாமிய நலன்புரி அமைப்பின் ஸ்தாபகராக இருந்ததுடன் அதில் பல்வேறு பதவிகளையும் வகித்தமை (1992-1995)

- பலஸ்தீன நலன்புரி அமைப்பின் தலைவர் (1988 முதல் இன்று வரை)

- 'லஜ்னது அல் தஃரீஃப் பி அல் இஸ்லாம்' எனும் மாற்று மதத்தவர் களுக்கான இஸ்லாமிய பிரச்சார நிறுவனத்தின் நிர்வாக சபை உறுப்பினராகவும், செயலாளர் நாயகமாகவும், நிர்வாக சபைத் தலைவராகவும் பல்வேறு பதவிகளை இன்றுவரை வகித்து வரு கின்றமை

- 'ஜம்இய்யது அஷ்ஷெய்க் அப்துல்லாஹ் அல்-நூரீ அல் கைரிய்யா' என்ற சமூக நலன்புரி அமைப்பின் செயலாளர் நாயகம் (1981 முதல் இன்று வரை)

- 'ஜம்இய்யது அல்-இஸ்லாஹ் அல் இஜ்திமாஇ' என்ற குவைத்தி லுள்ள மிகப் பிரபலமான சமூக சீர்திருத்த நிறுவனத்தின் அங்கத்தவ ராக இருப்பதுடன், அதன் 'லஜ்னது அல்-தஃவா அல்-இஸ்லா மியா' முதலிய பிரிவுகளை உருவாக்குவதிலும் பங்காற்றியவர்.

இவை தவிர, ஆசிய முஸ்லிம்களுக்கான அமைப்பு, ஆபிரிக்க முஸ்லிம்களுக்கான அமைப்பு, குவைத் பொது நிவாரண அமைப்பு, இஸ்லாமிய முதுசங்களைப் பாதுகாப்பதற்கான நிறுவனம், குவைத் பத்திரிகையாளர் சங்கம், பிரான்ஸிலுள்ள ஐரோப்பிய இஸ்லாமியக் கலாபீடம், பிரித்தானியாவிலுள்ள சர்வதேச இஸ்லாமிய நிவாரண அமைப்பு போன்ற பல்வேறு நிறுவனங்களின் ஸ்தாபகர்களில் ஒருவரா கவும், நிர்வாகிகளில் ஒருவராகவும் பல பதவிகளை இன்றுவரை இவர் வகித்து வருகிறார்.

வளைகுடாப் பிராந்தியத்திலும் இஸ்லாமிய உலகிலும் சில முக் கியமான நலன்புரிச் சங்கங்களை உருவாக்குவதிலும் இவர் பாரிய பங்களிப்பு வழங்கியுள்ளார். உலகிலுள்ள முஸ்லிம் சிறுபான்மை சமூகங்கள் பற்றிய ஆழ்ந்த பரிச்சயமும் இவருக்குண்டு.

இவையனைத்துக்கும் அப்பால் மிகச் சிறந்த இஸ்லாமிய அழைப் பாளராக விளங்கும் இவர், இலங்கையில் மேற்கொள்ளப்பட்டு வரும் இஸ்லாமியப் பிரச்சார முயற்சிகளோடு நீண்டகாலத் தொடர்பு கொண்டவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

அல்லாஹ் இறக்கிய இறுதி இறைத் தூது ஓர் உன்னதமான சமூகத்தை அமைத்தது. தத்துவஞானிகளும், சிந்தனையாளர்களும் கனவு கண்ட அந்த இலட்சிய சமூகம் அறபுப் பாலைவெளியில் தோன்றியது. மிகக் குறுகிய காலத்தில் அது சாம்ராஜ்யமொன்றை அமைத்தது. வெறும் பௌதீக எல்லையை மட்டுமல்ல, வெற்றி கொண்ட பெருந் தொகை மக்களையும் தன் கொள்கையினுள் அது ஈர்த்தது. இப்படித் தான் நாடுகளும் சமூகங்களும் அதனுள் ஈர்க்கப்பட்டன.

14 நூற்றாண்டுகளுக்குப் பின்னே நின்று அந்த சமூகத்தைப் பற்றிப் படிக்கும்போதே எமதுள்ளம் அதனால் ஆட்கொள்ளப்படுகிறது. மீண்டும் அப்படியொரு சமூகம் தோன்ற என்ன வழி என ஏங்குகிறது.

இந்நிலையில் மிக ஆரம்ப காலத்திலேயே அந்த சமூகம் தன் இலட்சிய நிலையிலிருந்து சற்று சரிந்தது. அதன் ஆட்சி நிலையின் ஒரு சரிவு இது. இலட்சிய சமூகத்தினுள் வாழ்ந்து அனுபவித்த அந்த மனிதர்கள் எப்படி இதனை சகித்துக் கொள்வார்கள்?

இந்த மனோநிலையின் பின்னணியில்தான் இறைதூதர் (ஸல்) அவர்களின் செல்வப் பேரன் ஹுஸைன் (ரழி) அவர்கள் மிகச் சொற்ப

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொகையினருடன் கர்பலாவில் மோதினார்கள். அந்தப் போரை யுத்த தந்திரோபாயங்கள் என்ற பின்னணியிலிருந்து நோக்குவது பொருத்த மற்றது. கருத்து, மன உணர்வுகளின் பாரத்திலிருந்தே அதை நோக்க வேண்டும்.

சிந்தனைக்காகவும் இலட்சியத்திற்காகவும் போரிடுபவர்கள் யுத்த தந்திரோபாயங்களை விட இலட்சியத்திற்கான தியாகத்திற்கு அழுத்தம் கொடுக்கிறார்கள். இது அவர்களின் பலவீனமா அல்லது பலமா என்பது ஒரு புறம் இருக்க, இந்தத் தியாகங்கள் ஏற்படுத்தும் தாக்கம் மிகப் பாரியது என்பதில் சந்தேகமில்லை.

இப்படி அந்த இலட்சிய சமூகத்தை நோக்கிய போராட்டங்களும் அதற்கான முயற்சிகளும் தொடர்பான இந்த ஆய்வு, அந்தப் போராட் டங்களையும் முயற்சிகளையும் பற்றிய ஆழ்ந்த விளக்கத்தைத் தரு கிறது. குறிப்பாக நான்கு பெரும் இமாம்களின் அது பற்றிய முயற்சி களையும் போராட்டங்களையும் ஆய்கிறது. பின்னர் நவீன கால சமூகப் மாற்றப் போராட்டங்களையும் அதனோடு தொடர்புபடுத்தி ஆய்கிறது. குறிப்பாக வன்முறை அடிப்படையிலான போராட்டத்தையும், வன்முறை தவிர்ந்த போராட்டத்தையும் அழுத்தி ஆராய்கிறது.

இந்த ஆய்வை வாசிக்கும்போது நாம் நான்கு இமாம்களின் இன் னொரு பக்கத்தைப் புரிந்து கொள்கிறோம். சட்ட அறிஞர்களாக மட்டு மல்ல. சமூக மாற்றத்திற்கான போராட்டத்திலும் அவர்கள் அர்த்தம் பொதிந்த ஆழிய சிந்தனைகளை முன்வைத்துள்ளமையையும் புரிகி றோம். இலட்சியவாதப் போக்கில் மட்டுமல்ல யதார்த்தபூர்வமாக அவர்கள் எப்படி இப்பிரச்சினையை அணுகியுள்ளார்கள் என்பதையும் புரிந்து கொள்கிறோம்.

இந்நூலை எழுதிய கலாநிதி ஷெய்க் நாதிர் நூரி ஆழ்ந்த இஸ்லாமிய ஆய்வாளர். சமூக மாற்றத் தளத்தில் நிற்கும் ஒரு போராளியும் கூட. எனவே, அறிவும் ஆய்வும் கள அனுபவமும் இங்கே சந்தித்துக் கொள் கின்றன; பின்னணியாக அமைகின்றன. என்னால் முடிந்தளவு முழு மையாக மூல நூலை மொழிபெயர்த்துள்ளேன். கருத்துப் போக்கு சிதையாமல் பார்த்துக் கொண்டுள்ளேன்.

நூல் எழுதப்பட்டுள்ள ஒழுங்கிலிருந்து பார்க்கும்போது தமிழ் உலகுக்கு இது ஒரு புதிய நூல். சமூக மாற்றத்திற்காக உழைப்போருக்கு நல்லதொரு சிந்தனை அடித்தளமொன்றை இந்த நூல் தரும்.

இனி இஸ்லாமிய உலகுக்கு வெளியே சிறுபான்மையாக நிற்கும் நாம் இப்பிரச்சினையை எப்படிப் பார்க்க வேண்டும்? இஸ்லாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவாக்கிய அந்த இலட்சிய சமூகத்தை நோக்கிய எம் கனவுகள் எப்படி அமைய வேண்டும்? யதார்த்தபூர்வமாக அதனை நோக்கி எப்படி நாம் அடியெடுத்து வைக்க வேண்டும்? அதற்கான திட்டங்களும் தந்திரோபாயங்களும் என்ன? இவை பற்றி சிந்திக்க இந்நூல் எம்மைத் தூண்ட வேண்டும் என்பதே எனது எதிர்பார்ப்பு.

நூலாசிரியர் மதிப்புக்குரிய அறிஞர் ஷெய்க் நாதிர் நூரி அவர்களுக்கு அல்லாஹ் நற்கூலி வழங்குவானாக. மென்மேலும் இத்தகைய ஆய்வுகளை அவரிடமிருந்து நாம் எதிர்பார்க்கிறோம்.

கீழைத்தேய சிறுபான்மை முஸ்லிம் சமூகத்தை நன்கறிந்த அறிஞர் ஒருவரின் நூல் இது. அந்த வகையில் சிறுபான்மை முஸ்லிம் சமூகம் அவருக்கு நன்றி செலுத்துகிறது. இந்நூலை மொழிபெயர்க்க அனுமதித்த ஷெய்க் அவர்களுக்கு எனது ஆழ்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நூல் வெளிவர உதவியாக இருந்த சகோதரர்கள் அனைவருக்கும் எனது நன்றி உரித்தாகட்டும்.

**இறையருளை யாசிக்கும்**
**எம்.ஏ.எம். மன்ஸூர்**
***08.02.2008***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

மாற்றம் ஒரு மாறாத சமூக விதி என்பர். இயங்கிக் கொண்டிருக் கின்ற எந்தவொரு சமூகத்தினதும் உயிர்த் துடிப்பு மாற்றத்தின் போக்குகளிலேயே தங்கியிருக்கிறது. சமூக அரசியல் போக்குகளில் ஏற்பட்டு வரும் மாற்றங்கள் தனி மனிதனையும் ஆழமாகப் பாதிக்கின் றன. இந்தப் பாதிப்புகள் சாதகமாகவோ அல்லது பாதகமாகவோ அமைய முடியும். இந்த வகையில் சமூக-அரசியல் மாற்றம் பற்றிய பிரக்ஞை, அறிவு, சிந்தனைத் தெளிவு என்பன அனைவருக்கும் அவ சியமாய் உள்ளன.

சமூக-அரசியல் மாற்றம் பற்றிய மிகத் தெளிவான கொள்கை ஒன்றின் அடிப்படையிலேயே முன்னோக்கிய சமூக-அரசியல் மாற் றத்தை அறுவடை செய்துகொள்ளலாம். இச்சிந்தனையின் அடுத்த கட்ட நகர்வாகவே சமூக அரசியல் செயற்பாடு அமைகிறது.

அந்த வகையில் முஸ்லிம் சமூகத்தை சரியான திசையில் வழிப் படுத்த இந்நூல் பெரிதும் உதவும் என்று நம்புகிறோம். ஆரம்பகால இஸ்லாமிய வரலாற்று அனுபவங்களின் அடியாக உருவான இமாம் களின் சிந்தனை மற்றும் செயற்பாடுகளின் தொடர்ச்சியில் நவீன காலத்தை பொருத்திப் பார்க்கும் ஒரு பெறுமதியான நூலாக இது விளங்குகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனை இலங்கை முஸ்லிம்கள் மட்டுமல்ல, சமூக மாற்றத்திற்காக உழைக்கும் அனைத்துத் தமிழ் பேசும் மக்களும் ஈடுபாட்டுடன் படிக்க வேண்டும்- அதனை செயற்பாடுகளாக மொழிபெயர்க்க வேண்டும் என்ற ஆழ்ந்த அவா எமக்குள்ளது.

இரத்தம் சிந்துவதே விதி என்றாகிப் போன இந்தக் காலத்தில், இந்த நூல் அதனைக் குறைப்பதற்குப் பங்களித்தால் எமக்கு ஆறுதலாக இருக்கும். சமூக மாற்றம் அர்த்தம் செறிந்ததாக காலப் பொருத்த முடையதாக அமைய வேண்டும் என்பதே எமது அடிப்படை எதிர் பார்ப்பாகும்.

முஸ்லிம் சமூகத்தின் இளைஞர்கள் அழிவின் முகவர்களாக அல் லாது, ஆக்கத்தின் தூதுவர்களாக இஸ்லாத்தின் செய்தியை முன் கொண்டு செல்வதற்கு நாம் அனைவரும் அயராது உழைப்போமாக. அந்த முயற்சியில் இந்த நூலும் இதன் சிந்தனைகளும் ஒரு சிறு பங்கையேனும் வழங்கினால் அது எமக்கு மிகுந்த திருப்தியைத் தரும்.

இந்நூலை எழுதிய ஷெய்க் நாதிர் நூரி அவர்களுக்கு அல்லாஹ் தனது அருளைப் பொழிவானாக. இதனை மொழிபெயர்க்க அனு மதித்த அவருக்கும் தமிழுக்கு மொழிமாற்றம் செய்து தந்த அன்புக்குரிய உஸ்தாத் எம்.ஏ.எம். மன்ஸூர் அவர்களுக்கும் மீள்பார்வை ஊடக மையத்தின் பணியாளர்களுக்கும் எமது ஆழ்ந்த நன்றிகள் உரித்தா கட்டும்.

***பதிப்பாசிரியர்***
***மீள்பார்வை ஊடக மையம்***
***08.02.2008***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்

01. இமாம் அபூ ஹனீபாவும் சமூக மாற்றமும் /11

02. இமாம் மாலிக்கும் சமூக மாற்றமும் /19

03. இமாம் ஷாபிஈயும் சமூக மாற்றமும் /23

04. இமாம் அஹ்மதும் சமூக மாற்றமும் /28

05. மாற்றத்திற்கான இன்னும் சில முயற்சிகள் /33

06. அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஆவின்
சமூக மாற்றத்திற்கான கொள்கை /38

07. கிலாப்த்தும் மன்னராட்சி முறையும் /44

08. அரசியல் சிந்தனைகள்: பகுதி ஒன்று /50

09. அரசியல் சிந்தனைகள்: பகுதி இரண்டு /56

10. அரசியல் சிந்தனைகள்: பகுதி மூன்று /61

11. களவு போன ஜிஹாத் /66

12. இஸ்லாமியவாதிகள் அரசில் பங்குகொள்ளல் /72

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 01

# இமாம் அபூ ஹனீபாவும் சமூக மாற்றமும்

கிலாபத்தோடு முஸ்லிம்கள் கொண்டிருந்த பற்று ஓர் இலட்சிய வாத மாதிரியோடு தொடர்புபட்டிருந்தது. நேர்வழி சென்ற கிலாபத் அமைப்பையே (கிலாபா ராஷிதா) இங்கு குறிப்பிடுகின்றோம். குறிப்பாக அவ்வுன்னத கிலாபத்தில் வாழ்ந்தவர்கள் மற்றும் அதனை தம் கண் முன்னே கண்டவர்களைப் பொறுத்தவரையில் இது தெளி வான உண்மையாக இருந்தது.

பின்னால் வந்த அதிகாரப் பற்று நிறைந்த முடியாட்சி முறை களையோ அல்லது சர்வாதிகாரப் போக்குக் கொண்ட ஆட்சி அமைப் புக்களையோ கண்டபோது இவர்களுக்கு கிலாபத் மீது கொண்ட பற்று அதிகரித்தது. கடும் கசப்புணர்வும் அவர்களைப் பீடித்தது. முன்பிருந்த உன்னத நிலை மீண்டும் திரும்ப வேண்டும் என்று அவர்கள் மிகுந்த அவாவுற்றனர். இந்த நிலைப்பாட்டிற்குள்தான் தங்கள் அவாவை சாதிக்க ஒன்றன் பின் ஒன்றாக பல இயக்கங்கள் தோன்றின. ஆனால், அவை அனைத்தும் தோல்வி கண்டன. ஏனெனில், அவ்வியக்கங்களை வழிநடாத்தியோர் கருதியதைவிட அன்றைய நிலைமை மிகக் கடுமை யாக இருந்தது. சமூக மாற்றங்கள் குறித்த அல்லாஹ்வின் நியதிகள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய தேவையும் காணப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“ஒரு சமூகத்திலுள்ள மனிதர்கள் தம் உள்ளங்களில் உள்ளவற்றை மாற்றாத வரையில் நிச்சயமாக அல்லாஹ் அச்சமூகத்தில் உள்ள நிலைகளை மாற்றுவதில்லை” (அர்ரஃத்:11). உமையா, அப்பாஸிய காலப் பிரிவின்போது தோன்றிய சில ஆட்சியாளர்களின் ஆட்சிமுறை சீராகவும்அருள் நிறைந்ததாகவும் இருந்தது உண்மையே. எனினும், முஸ்லிம்கள் இலகுவாக கிலாபா ராஷிதாவுக்கு மீண்டு விட முடியும் என நினைத்து விட்டார்கள். இலட்சிய மாதிரியைக் காட்டாத -ஆயினும் ஆழ வேரூன்றிப் பதிந்துவிட்ட பலமிக்க அந்த ஆட்சிகளை அகற்ற மிகப் பாரிய உழைப்பும் பெரும் தியாகங்களும் தேவைப்படும் என்பதை அவர்கள் உணரவில்லை. பாதுகாப்புக்கு பெரும் படைப் பிரிவுகளையும் பாரிய செல்வங்களையும் கொண்டியங்கி வரும் அவ்வாட்சிகளை வெற்று ஆசைகளாலும் இலட்சியக் கனவுகளாலும் சிதறுண்ட சில சிறிய முயற்சிகளாலும் அகற்றிவிடல் சாத்தியமானதல்ல.

இந்த நிலைகளிலிருந்து மாற்றத்தைக் கொண்டுவர பாரியளவு உயிரழிவும் சீர்கேடுகளும் தவிர்க்க முடியாதது என இஸ்லாமிய சட்ட நிபுணர்களும், அறிஞர்களும் கண்டனர். எனவே, அதனை தவிர்க்க முடியாத ஒரு யதார்த்தம் என்ற வகையில் வெறுப்புடனும் ஏற்க வேண்டியதாயிற்று.

பாரியளவு இரத்தம் சிந்தாமலும் பெரும் குழப்ப நிலைகளுக்கு வழி வகுக்காமலும் ஆட்சி மாற்றத்தை உருவாக்க பாரிய கூட்டமைப்பு இல்லா நிலையில் புரட்சி செய்வதால் வரும் தீமைகள் நன்மைகளை விட பாரியவையாக இருக்கும் என அந்த சட்ட நிபுணர்களும் அறிஞர்களும் கண்டனர். எனவே, அவர்கள் உள்ளிருந்தே சீர்திருத்த முயற்சிகளில் ஈடுபட முயன்றனர். இந்த வகையில் அவ்வறிஞர்களில் சிலருக்கு ஆட்சியாளர்களோடு நெருங்கிய தொடர்பிருந்தது. அவர்கள் அத்தொடர்பை ஆட்சியாளர்களுக்கு உபதேசிக்கப் பயன்படுத்தினர். ஏனெனில் அவ்வாட்சியாளர்கள் மூலம் சில அநியாயங்களும் சில வரம்பு மீறல்களும் நிகழ்ந்தபோதிலும் இஸ்லாமிய சட்டங்கள் மூலம் ஆட்சி புரியும் முஸ்லிம்களாகவே அவர்கள் இருந்தனர். உதாரணமாக, இமாம் ஸுஹ்ரி உமையாக்களுடன் சத்தியத்தில் நெகிழ்ந்து கொடுக்காத வகையில் நெருங்கிய தொடர்பு கொண்டவராக இருந்தார். எனினும், இமாம் ஸயீத் இப்னு அல் முஸய்யப், இப்னு அபீதிஃப் போன்றவர்களது ஆட்சியாளர்களைப் பொறுத்தவரையிலான நிலைப்பாடு சத்தியத்தைப் பொறுத்தவரையில் பலமாகவும் மிகுந்த உறுதி கொண்டதாகவும் இருந்தது என்பதில் சந்தேகமில்லை.

இமாம் அபூ ஹனீபாவைப் பொறுத்தவரையில் அவர் இரு ஆட்சிகளைக் கண்டார். உமையா ஆட்சியின் ஆரம்ப பலமிக்க காலப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரிவிலும் அது பலவீனமுற்று வீழ்ச்சியடைந்த காலப்பிரிவிலும் அவர் வாழ்ந்தார். அப்பாஸிய அரசை அதன் தோற்ற காலப்பிரிவிலும் சிறு சிறு இராச்சியப் பிரிவுகளாகப் பரவிவருகின்றபோதும் கண்டார். பின்னர் உமையாக்களுடன் போராடி அவர்களிடம் இருந்து ஆட்சியைக் கைப்பற்றி மக்கள் மீது அதிகாரம் செலுத்தியும், ஆசையூட்டியும் பயமுறுத்தியும் அவர்களைப் பணியவைக்கும்போதும் கண்டார். இவை அனைத்தையும் கண்ட இமாம் அபூ ஹனீபா அதனால் பாதிப் புறவும் செய்தார். எனினும், உமையாக்களுக்கு எதிரான புரட்சியாளர் களோடு அவரும் இருந்தார் என்பதற்கான ஆதாரங்கள் எதுவுமில்லை.

ஸைத் இப்னு அலி ஜைனுல் ஆபிதீன் (ரழி) உமையா கலீபா ஹிஷாம் இப்னு அப்துல் மலிக்கிற்கு எதிராக ஹிஜ்ரி 121இல் ஆயுதப் புரட்சி ஒன்றை மேற்கொண்டபோது இமாம் அபூ ஹனீபா "இறைதூதர் (ஸல்) அவர்கள் பத்ர் யுத்தத்திற்கு புறப்பட்டது போன்றே இவருடைய புறப்பாடும் உள்ளது" என்று கூறியதாக வரலாற்றுப் பதிவு இருக்கின் றது. அப்போது அபூ ஹனீபாவிடம் "அவ்வாறாயின் நீங்கள் ஏன் போரில் கலந்து கொள்ளாது பின்தங்குகிறீர்கள்?" என வினவப்பட்டது. இதற்கு இமாம் என்னிடம் மக்கள் அமானிதமாகத் தந்த பொருட்கள் உள்ளன. அவற்றைப் பாதுகாத்து வைத்துக் கொள்ளுமாறு இப்னு அபீ லைலாவிடம் கேட்டேன். அவர் ஏற்கவில்லை. அந்நிலையில் நான் யுத்தத்தில்இறந்தால் அநியாயம் இழைத்தவனாக மரணிக்க வருமோ எனப் பயப்படுகின்றேன் என்றார். அத்தோடு இமாம் அபூ ஹனீபா தான் போராட வராமைக்கு கீழ்வருமாறு நியாயம் கூறியதாகவும் வரலாற்றுப் பதிவு உண்டு:

"மக்கள் அவரது தந்தையை இடைநடுவே கைவிட்டது போல் இவரையும் கைவிட மாட்டார்கள் என்ற நம்பிக்கை எனக்கிருப்பின் அவரோடு நான் போராடச் சென்றிருப்பேன். ஏனெனில், அவர் சத்தி யத்தின் அடிப்படையில் எழுந்த இமாம். நான் நேரடிப் போரில் கலந்துகொள்ளாவிட்டாலும் செல்வத்தால் அவருக்கு உதவுகிறேன்." இந்தவகையில் பத்தாயிரம் திர்ஹம்களையும் இமாம் அபூ ஹனீபா அனுப்பி வைத்தார். தான் அனுப்பிய நபரைப் பார்த்து இமாம் ஜைனுல் ஆபிதீனிடம் தான் வராமைக்கான நியாயங்களை விளக்கிச் சொல்லு மாறும் கூறினார்.

இந்தவகையில் இமாம் அபூ ஹனீபா உமையா ஆட்சிக்கெதிராக புரட்சி செய்வதை ஷரீஅத் ரீதியாக ஆகுமானது எனக் கண்டார் என்பது தெளிவாகின்றது. அவர் முஜாஹித்களோடு வாள்தூக்கிப் போராடவும் விரும்பியுள்ளார் என்பதும் தெளிவு. எனினும், விளைவு வெற்றிகரமாக முடியும் என்ற நம்பிக்கை அவரிடம் இருக்கவில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜைனுல் ஆபிதீனின் ஆயுதப் போராட்டத்திற்கு போதுமான ஆதரவும் நல்ல விளைவைத் தரக் கூடிய பலமும், அவரது சிந்தனையை ஏற்றுப் பாதுகாக்கும் உள்ளங்களும் இல்லாவிட்டாலும், அது சத்தியத்தின் செயற்பாடே என்ற கருத்தை இமாம் கொண்டிருந்தார் என்பதும் இங்கு தெளிவாகின்றது. இந்த வகையில் போராட்டத்தின் பலவீனமான இந்நிலையிலும் அதனைத் தடுக்கும் ஒருவராக அவர் இருக்க விரும்பவில்லை. எனவேதான் தமது ஆதரவைக் காட்ட பெரும் தொகைப் பணத்தைக் கொடுத்துதவினார். செல்வம் ஒரு முக்கிய சக்தி என்பதில் சந்தேகமில்லை.

எனினும், இமாம் ஸைதின் புரட்சி 123இல் அவர் கொலை செய்யப்பட்டதோடு முடிவுற்றது. அவருக்கு பின்னர் அவரது மகன் யஹ்யா ஹிஜ்ரி 125இல் குராசானில் புரட்சியை ஆரம்பித்து அவரும் தந்தையைப் போல் கொலையுண்டார். பின்னர் அப்துல்லாஹ் இப்னு யஹ்யா தன் பெற்றோர்களின் உரிமையைக் கோரி போராட்டத்தை ஆரம்பித்தார். உமையா ஆட்சியின் இறுதிக் கலீபா மர்வான் இப்னு முஹம்மத் அனுப்பிய படைகளோடு இவர் யெமனில் மோதினார். எனினும், ஹிஜ்ரி 130இல் தனது பெற்றோர் போன்றே இவரும் ஷஹீதானார். அத்தோடு வேதனை மிக்க இந்த வரலாற்றுப் பக்கம் உண்மையாகவே மூடுண்டு போனது.

ஸைத் இப்னு அலி (ரழி) இமாம் அபூ ஹனீபாவின் உள்ளத்தில் பெற்றிருந்த உயர்ந்த அந்தஸ்தை மேலே விளக்கியவற்றிலிருந்து புரிந்து கொள்ள முடியும். இமாம் ஸைதின் போராட்டத்தை இறைதூதர் (ஸல்) அவர்களின் பத்ர் போருடன் ஒப்பிடும் அளவுக்கு இமாம் அபூ ஹனீபா சொன்னார்கள் என ஏற்கனவே கண்டோம்.

ஸைத் இப்னு அலியின் அறிவு, ஒழுக்கம், மார்க்க உணர்வு என்பவற்றை இமாம் அவர்கள் உணர்ந்து மதித்தார். ஸைதை தலைமைக்கு தகுதிமிக்க சத்திய இமாமாகவே அபூ ஹனீபா கருதினார். போரில் பங்குகொள்ளாதவன் என்ற பெயர் தனக்கு வரக் கூடாது என்பதற்காக செல்வத்தின் மூலம் போராட்டத்திற்கு உதவவும் செய்தார். எனினும், அவரும் அவருக்குப் பின்னால் அவரது மகனும் அவருக்குப் பின்னால் அவரது பேரனும் கொல்லப்பட்டமையை இமாம் பார்க்க வேண்டியதாயிற்று. இது அவர்களுக்கு மிகுந்த ஆத்திரத்தைக் கொடுத்தது. எனவே நடந்த இவ்வநியாயங்கள் குறித்து அவரது நாவு பேசியது. கோபங் கொண்ட அறிஞர்களது நாவுகள் கொடுவாள் செய்யாதவற்றையும் செய்யும். அரசனின் வாளைவிட நாவின் தாக்குதல் மிகப் பலம் வாய்ந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இமாம் அபூ ஹனீபாவின் நடத்தை அவர் கொள்கை ரீதியாக இப்பிரச்சினையில் கொண்டிருந்த கருத்துக்கு உடன்பாடாக உள்ளது. இமாம் ஸைத் கூபாவில் இருந்து புரட்சியை ஆரம்பித்தார். கூபா மக்களின் மனோநிலையையும் அவர்கள் அலி (ரழி) அவர்களோடு நடந்து கொண்ட முறையையும் இடைநடுவே ஹுஸைன் (ரழி) அவர்களை கைவிட்டமையையும் இமாம் அபூஹனீபா நன்கறிந்திருந்தார்.

இமாம் ஸைத் ஆரம்பித்திருந்த இயக்கம் கூபாவில் மட்டுமே பரவியிருந்தது. நன்கு பலம் பெறும் அளவு வேறு பகுதிகளுக்கு அது பரவியிருக்கவில்லை. இயக்கத்தைத் துவங்கி ஆறு மாதங்கள் மட்டுமே சென்றிருந்தது. இக்காலப் பிரிவு பரவலுக்கோ இயக்க முதிர்ச்சிக்கோ போதுமானதல்ல. இக்காரணங்களால்தான் பல அறிஞர்களும் இமாம் ஸைதை எச்சரித்தார்கள். போராட்டத்தை துவங்குவதையும் தடுக்க முயன்றார்கள். இவற்றையெல்லாம் கண்ட அபூஹனீபா இப்புரட்சியின் வெற்றி குறித்து நம்பிக்கை கொண்டிருக்கவில்லை.

அடுத்த போராட்ட முயற்சியை "நப்ஸ் ஜகிய்யா" என அழைக்கப்பட்ட முஹம்மத் இப்னு அப்துல்லாஹ்வும் அவரது சகோதரர் இப்றாஹீமும் ஆரம்பித்தனர். இவர்கள் ஹுஸைன் (ரழி) அவர்களின் பிள்ளைகளாவர். இப்போராட்டம் ஹிஜ்ரி 145இல் நடைபெற்றது. அப்போது இமாம் அபூஹனீபா சமூகத்தில் பெரும் செல்வாக்கும் உயர்ந்த அந்தஸ்தும் பெற்றிருந்தார்.

இம்முறை இமாம் அபூஹனீபாவின் நிலைப்பாடு முன்பை விட முற்றிலும் வித்தியாசமாக அமைந்திருந்தது. அபூஹனீபா இம்முறை இந்த இயக்கத்திற்கு பகிரங்கமாகவே உதவினார். தமது வகுப்புகளில் தாம் இயக்கத்திற்கு ஆதரவளிப்பதாக பகிரங்கமாகப் பேசினார். கலீபா மன்சூரின் தளபதிகள் சிலரை நப்ஸ் ஜகிய்யாவோடு போராடச் செல்வதை தடுத்து நிறுத்தும் அளவுக்கு இமாமின் செல்வாக்கு சென்றது. அப்போது கலீபா மன்சூர் கூபாவில் ஊரடங்கு உத்தரவைப் பிறப்பித்திருந்தார். இமாம் அபூஹனீபாவின் மாணவர்கள் தாம் அனைவருமே கைது செய்யப்பட்டு விடுவோமோ என்று கூடப் பயந்தார்கள்.

இமாம் அபூஹனீபா நப்ஸ் ஜகிய்யாவின் சகோதரர் இப்றாஹீமுக்கு பைஅத் செய்யுமாறு தூண்டி வந்தார். அவரோடு போராட இணைந்து கொள்வது ஸுன்னத்தான ஹஜ்ஜுக்கு செல்வதைவிட உயர்ந்தது என பத்வா வழங்கினார். ஹனபி மத்ஹபின் உயர்ந்த சட்ட அறிஞர்களான இமாம் ஜஸ்ஸாஸ், மக்கீ, 'பத்வா பஜாஜிய்யா' என்ற நூலின் ஆசிரியர் ஆகியோர் இமாம் அபூ ஹனீபாவின் கீழ்வரும் கருத்தை பதிவு செய்துள்ளனர். "முஸ்லிம் சமூகத்திற்கு வெளியே நிராகரிப்பாளர்களோடு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போராடுவதைவிட, முஸ்லிம் சமூகத்தை அதனுள்ளே காணப்படும் நெறிபிறழ்வுகளிலிருந்து விடுதலை செய்யப் போராடுவது சிறந்தது."

அபூபக்கர் அல் ஜஸ்ஸாஸ் தமது 'அஹ்காமுல் குர்ஆன்' என்ற நூலில் கீழ்வருமாறு கூறுகிறார்:"அநியாயங்களோடும் அநியாய ஆட்சியாளர்களோடும் போராடுவது குறித்த அவரது கருத்து பிரபல்யமானது." எனவேதான் இமாம் அவ்ஸாஇ "அபூஹனீபாவின் எல்லா விடயங்களையும் நாம் ஏற்றோம், சகித்துக் கொண்டோம். கடைசியில் அவர் வாள் தூக்குவது பற்றிய கருத்தைக் கொண்டு வந்தார். அந்நிலையில் அவரை எம்மால் ஏற்க, சகிக்க முடியாமல் போய்விட்டது" என்கிறார் *(அஹ்காமுல் குர்ஆன், வா-1, பக்.81).*

நன்மையை ஏவித் தீமையைத் தடுப்பதை வாயால் செய்வது கடமையாகும். அது ஏற்றுக் கொள்ளப்படாவிட்டால் வாளால் தீமையைத் தடுக்க வேண்டும் என்பது அவரது கருத்தாக இருந்தது *(அஹ்காமுல் குர்ஆன், வா-1, பக்.81).* அதாவது உபதேசமும் நற்போதனைகளும் பயன்படாதபோது பரிகாரம் என்ற கருத்தை அபூஹனீபா கொண்டிருந்தார்.

இது இமாம் அபூஹனீபா மட்டும் கொண்டிருந்த கருத்தல்ல. இப்னு ஹஜர் பத்ஹுல் பாரியில் குறிப்பது போன்று இது ஆரம்பகால அறிஞர்களின் கருத்தாகவும் இருந்தது. ஹிஜ்ரி முதலாம் நூற்றாண்டில் வாழ்ந்த அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஅத்தைச் சேர்ந்த பேரறிஞர்களின் கருத்தாகவும் இருந்தது.

அபூபக்கர் *(ரழி)* அவர்கள் கலீபாவாக பைஅத் செய்யப்பட்ட பின்னர் நிகழ்த்திய முதலாவது உரையில் கீழ்வருமாறு குறிப்பிடுகின்றார்: "அல்லாஹ்வுக்கும் அவனது தூதருக்கும் நான் வழிப்பட்டு நடக்கும் வரை எனக்குக் கட்டுப்படுங்கள். நான் அல்லாஹ்வுக்கும் அவனது தூதருக்கும் மாறு செய்தால் எனக்குக் கட்டுப்பட்டு நடப்பது உங்களுக்கு கடமையன்று" *(ஸீரா: இப்னு ஹிஷாம் வா-4, பக்-211)* உமர் *(ரழி)* அவர்கள் கீழ்வருமாறு கூறுகின்றார்: "யார் முஸ்லிம்களின் ஆலோசனையின்றி ஒரு தலைவருக்கு பைஅத் செய்கின்றாரோ அந்த பைஅத் செய்யப்பட்டவருக்கு பைஅத் செல்லுபடியாகாது. அத்தோடு பைஅத் செய்தவர்களின் பைஅத்தும் நிறைவேறாது *(முஸ்னத் அஹ்மத் வா-1, பக்-391).*

ஹுஸைன் இப்னு அலி *(ரழி)* அவர்கள் யஸீதுக்கு எதிராக போர்ப் பிரகடனம் செய்தபோது அதிகமான நபித் தோழர்கள் உயிர் வாழ்ந்தனர். தாபிஈ சட்ட அறிஞர்கள் எல்லோருமே அப்போது உயிர் வாழ்ந்தார்கள். ஆயினும், எந்த ஸஹாபியும் தாபிஈயும் ஹுஸைன் *(ரழி)* அவர்களின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்பாட்டை ஹராம் என்று சொன்னதாகத் தெரியவில்லை. ஆனால், ஹுஸைன் (ரழி) அவர்கள் போராடச் செல்வதை, தடுத்தார்கள். காரணம் ஈராக்வாசிகள் நம்பத் தகுந்தவர்கள் அல்ல. போராட்டம் பல அபாயங்களைக் கொண்டது. அது வெற்றியடையும் சாத்தியம் மிகக் குறைவு என்றுதான் தடுத்தார்கள். அநியாயக்காரர்களுக்கு எதிராக, வழி பிறழ்வோருக்கெதிராக போராடல் சட்டரீதியானது. எனினும், போராட முன்னர், வெற்றி சாத்தியமானதுதானா? குறித்த இலக்கை அடைந்து கொள்ள முடியுமா? வழிபிறழ்ந்த ஆட்சியை அகற்றியதன் பின்னர் சிறந்த ஆட்சியொன்றை அமைப்பது சாத்தியம்தானா? என்பவற்றை உறுதிப்படுத்தலும் திட்டமிட்டுக் கொள்ளலும் மிக அவசியமாகும். இந்த வகையில் ஸஹாபாக்கள் சிலர் ஹுஸைன் (ரழி) அவர்களோடு கருத்து வேறுபட்டிருப்பின் அது திட்டமிடல், விளைவு, சாத்தியப்பாடு என்பன குறித்ததாக அமைந்ததே தவிர, போராட்டம் ஆகுமானதா இல்லையா என்பது குறித்ததல்ல.

ஹஜ்ஜாஜின் அத்துமீறிய ஆட்சியின்போது அப்துர் ரஹ்மான் அல் அஸ்அத்தின் தலைமையில் நடந்த புரட்சியையும் இதற்கு உதாரண மாகக் கூறலாம். இப்புரட்சியின்போது ஸஈத் இப்னு ஸுபைர், ஷஃபி, இப்னு அபீ லைலா, அபுல் புக்துரி போன்ற பல பெரும் சட்ட அறிஞர் களைக் கொண்ட ஓர் இராணுவப் பிரிவு இப்னு அஸ்அதுக்குச் சார்பாக நின்றதாக இப்னு கஸீர் குறிப்பிட்டிருக்கின்றார்.

இப்போராட்டத்தில் கலந்து கொள்ளாது ஒதுங்கிக் கொண்ட எந்த அறிஞரும் இப்புரட்சி ஆகுமானதல்ல எனக் கூறவில்லை. போரில் கலந்து கொண்ட சட்ட நிபுணர்கள் அஸ்அதின் படைமுன் நிகழ்த்திய உரைகள் இது அனுமதிக்கப்பட்டசெயல் என்பதைக் காட்டுகின்றன.

ஹஜ்ஜாஜின் காலப்பிரிவில் மக்காவில் புரட்சி செய்த இப்னு ஸுபைரின் செயற்பாடும் இதற்கு இன்னொரு உதாரணமாகும். இவ் வாறு ஆரம்பகால அறிஞர்கள் அநியாயக்கார ஆட்சிக்கெதிராக ஆயுதப் புரட்சி செய்தல் அனுமதிக்கப்பட்டது என்ற கருத்தைக் கொண்டி ருந்தனர். எனினும், இப்னு அஸ்அதின் புரட்சியின்போது சிறைப்பிடிக் கப்பட்ட ஒரு இலட்சத்து இருபதாயிரம் பேர் பசியிலும் தாகத்திலும் விடப்பட்டு கொலை செய்யப்பட்டனர். இப்னு ஸுபைரின் புரட்சியின் போது 'மன்ஜனீக்' என்ற போர்க் கருவி மூலம் கஃபா தாக்கப்பட்டது. ஆயிரக்கணக்கானோர் கொலை செய்யப்பட்டனர்.

இமாம் அபூ ஹனீபா ஆயுதப் போராட்டத்தின்போது இத்தகைய மோசமான விளைவுகள் உருவாகலாம் என எதிர்பார்க்கவில்லை. ஆயினும், இப்புரட்சிகளின் மூலம் முஸ்லிம் சமூகத்தின் சக்தியை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீணாக அழிப்பதும், பெருந்தொகையானோர் கொல்லப்படலும் மட்டுமே நிகழ்ந்தது. எனவே, மாற்றத்திற்கு வழி ஆயுதப் போராட்டமே என்ற முதலாம் நூற்றாண்டு அறிஞர்கள் கொண்டிருந்த கருத்து மாற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

முதலாம் நூற்றாண்டில் பிறந்த அபூ ஹனீபாவும் அக்கருத்தையே கொண்டிருந்தார்களெனினும், இமாம் அபூஹனீபாவின் சிந்தனைப் பாதிப்புக்குட்பட்ட அபூயூசுப் போன்ற அவரது மாணவர்கள், அபூ ஹனீபாவின் இக்கருத்துப் போக்கினைக் கொண்டிருக்கவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும். புரட்சிகளின் விளைவுகள் தந்த பாடத்தினால் முஸ்லிம் சமூகத்தில் இன்னொரு கருத்து தோன்றலாயிற்று. இக்கருத்தே இப்போது அஹ்லுஸ் ஸுன்னாவின் பொதுக் கருத்து என அழைக்கப்படுகின்றது.

ஆயுதப் போராட்டத்திற்கு மாற்றமான இக்கருத்து தோன்றுவதற்கு முதலாம் நூற்றாண்டின் சட்ட அறிஞர்களுக்கு புரியாமல் போன சில திட்டவட்டமான அல்குர்ஆன் ஸுன்னாவின் ஆதாரங்களே காரணமாயின என்று ஒருபோதும் கூற முடியாது. ஆட்சி மாற்றத்திற்கு பிரயோகிக்கப்பட்ட வன்முறை வழிமுறை அடைந்த தொடர் தோல்விகளும் அதன் விளைவாக உருவான பாரிய உயிர் அழிவும் பல்வேறு குழப்ப நிலைகளுமே இவ்விரண்டாம் கருத்து தோன்றக் காரணமாயின.

இந்த வகையில் புதிய மாற்றங்களுக்கும் புரட்சிகளால் நிகழ்ந்த சமூக விளைவுகளுக்கும் ஏற்ப புதியதொரு கருத்தை முன்வைக்கும் வகையில் இமாம் மாலிக் அடுத்து தோன்றுகின்றார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 02

# இமாம் மாலிக்கும் சமூக மாற்றமும்

இமாம் மாலிக் ஹிஜ்ரி 92இல் பிறந்து 179இல் இறந்தார். 90 ஆண்டு களைக் கொண்ட தனது இந்நீண்ட வளமிகுந்த ஆயுளில் இரு பெரும் அரசுகளைக் கண்டார். இக்காலப் பிரிவில் இஸ்லாமிய ஆட்சி விரிந்து பரந்திருந்தது. அவர் இக்காலப் பிரிவில் நிகழ்ந்த குழப்ப நிலைகளை யும் பாரியளவு மனித உயிர்களைப் பலிகொண்ட புரட்சிகளையும் கண்டார். கவாரிஜ்களும் அலவிகளும் ஆயுதம் ஏந்திய புரட்சிகளையும் அவதானித்தார். இவற்றின் விளைவால் சத்தியம் நிலைநாட்டப் படவோ அசத்தியம் அழிக்கப்படவோ செய்யாது என்பதை உணர்ந் தார். சமூகத்திற்கு ஏற்பட்ட பாரிய இழப்புகளை அவர் அவதானித்தார். தனக்கு முன் வாழ்ந்த தனது ஆசிரியர்களிடம் அப்போது நிகழ்ந்த, அவர்கள் வாழ்ந்து அவதானித்த நிகழ்ச்சிகள் பற்றிக் கேட்டறிந்து கொள்ளும் சந்தர்ப்பத்தையும் இமாம் மாலிக் பெற்றார்.

'ஹர்ரா' யுத்தம் என்றழைக்கப்படும் யுத்த நிகழ்ச்சி பற்றியும் அவ்வேளை இறைதூதர் (ஸல்) அவர்களின் புனிதஸ்தலமான மதீனா எவ்வளவு தூரம் மோசமாக சீரழிக்கப்பட்டது என்பதையும் அதனைக் கண்ட தமது ஆசிரியர்களிடம் இமாம் கேட்டறிந்தார். அப்துல்லாஹ் இப்னு ஸுபைருக்கும் அப்துல் மலிக் பின் மர்வானுக்கும் இடையிலான


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுத்த நிகழ்வையும் இமாம் அறிந்தார். அப்போது அல்லாஹ்வின் புனிதஸ்தலமான கஃபாவும் கூட பாதிக்கப்பட்டதை அறிந்திருந்தார். மன்ஜனீக் என்ற கோபுர வடிவ ஆயுதத் தாக்குதலுக்கு அது உட்பட்டது. முழு ஹிஜாஸ் பிரதேசமும் படைத் தரப்பினரின் வெறித்தனமான, மிக மோசமான செயற்பாடுகளுக்கு உட்பட்டுச் சீரழிந்தது. உண்மையில் அப்பிரதேசம் மக்கள் அமைதி தேடிச் செல்லும் பூமி, புனித வணக்கக் கிரியைகளின் பூமி. ஆனால், கண்மூடித்தனமான குழப்பநிலைகள் இப்படித்தான் எதனையும் விட்டு வைப்பதில்லை. புனிதமும் புனித மல்லாததும் அதற்கு ஒன்றுதான்.

இத்தகையதொரு நம்பிக்கையிழந்த சூழலில் வாழ்ந்தவர், மிகச் சரியான ஷூறா அடிப்படையிலான ஆட்சி தோன்றுவதில் நம்பிக்கை இழப்பது இயல்பே. அபூபக்கர், உமர், உஸ்மான் (ரழி) போன்றோர் கால உன்னத ஆட்சியை உருவாக்குவதற்கான சாத்தியப்பாடு இக்காலப் பிரிவில் மிகக் குறைவு என இச்சூழ்நிலையினை கருதுவது மிக யதார்த் தமானது என்பதில் சந்தேகமில்லை. எனவே இருக்கும் நிலையை அங்கீகரிப்பது தவிர வேறு வழியில்லை. இஸ்லாம் வேண்டுகின்ற அந்த உன்னத ஆட்சி முறை என்பதாலல்ல -யதார்த்தத்தை உணர்ந்து கொண்டதால் வந்த முடிவே இதுவாகும்.

இருக்கும் சமூக நிலையை மாற்ற முற்பட்டால் பெரும் தீமை களுக்கு அது இட்டுச் செல்லும்; பாரிய சீர்கேடுகளைத் தோற்றுவிக்கும்; நல்ல விளைவுகளை எதிர்பார்ப்பது மிகக் கடினம் என்ற யதார்த்த உண்மைகளே இம்முடிவுக்கு வர அவரை நிர்ப்பந்தித்தன. அத்தோடு அதுவரையிலும் நிகழ்ந்த போராட்டங்களும் ஆட்சிக்கெதிரான அனைத்து முயற்சிகளும் இருந்த நிலையை இன்னும் மிக மோசமான நிலைக்கே இட்டுச் சென்றுள்ளன என்ற வ்கையில், இரு விடயங்களில் ஒன்றைத் தெரிவு செய்ய முற்படும்போது குறைந்த பாதகம் கொண்ட தைத் தெரிவு செய்தலே புத்திசாலித்தனமான செயல் என்பது ஏற்றுக் கொள்ளப்பட்ட உண்மையாகும். எனவே, இமாம் மாலிக் அமைதி நிலையை, சமாதானத்தைத் தெரிவு செய்தார் என்றால் இருந்த நடை முறையை ஏற்றுக் கொண்டார் என்பது அதன் பொருளன்று. அது தவிர்க்க முடியாத ஒரு யதார்த்தம், மாற்ற முடியாத ஒரு நிலை என்பதே காரணமாகும்.

இந்தவகையில் ஆட்சிக்கெதிரான புரட்சி பெரும் குழப்பநிலைக்கும் இரத்தம் சிந்தலுக்கும் இட்டுச் செல்லும் என அனுபவங்களின் அடியாக இமாம் மாலிக் உறுதியாக நம்பினார். எனவே, ஆட்சிக்கெதிரான புரட்சி சரியான நிலைப்பாடு என அவர் காணவில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆட்சிக்கெதிரான புரட்சி குழப்பநிலையை உருவாக்கும்; சமூக ஒழுங்குகளில் சீர்குலைவை ஏற்படுத்தும்; மக்கள் நிலைமைகளைக் குழப்பிவிடும்; உயிருக்கும் மானத்திற்கும் செல்வத்திற்கும் அழிவையும் பாதகத்தையும் ஏற்படுத்தும் என இமாம் கண்டார். திட்டமிட்டு பல வருடங்களில் சாதிக்க முடியாத அநியாயத்தை சில மணித்தியாலக் குழப்பம் ஏற்படுத்திவிடும் என அவர் கருதினார். இந்த வகையில், இமாம் மாலிக் ஆட்சிக்குக் கட்டுப்படாது புரட்சி செய்யும் கருத்தை ஏற்கவில்லை. அப்படியான புரட்சியின் பிரச்சாரகராகவும் இருக்கவில்லை. அத்தகைய புரட்சிக்கு ஒத்துழைக்கவும் இல்லை. அதே வேளை, அவரதுகாலத்தில் வாழ்ந்த கவர்னர்களுக்கோ கலீபாக்களுக்கோ சார்பான பிரச்சாரகராகவோ அவர்களுக்கு உதவுபவராகவோ அவர் இருக்கவில்லை. யாருடைய பிரச்சாரகராகவும் நிற்காது நடுநிலையைக் கடைப்பிடித்தலே சரியான நிலைப்பாடு என அவர் கண்டார். குழப்பநிலைகளை வெறுத்த இமாம் மாலிக்கின் இந்த நிலைப்பாடு, மதீனாவில் அவர்களது காலப்பிரிவில் ஒரு வித்தியாசமான நிலைப்பாடாக இருக்கவில்லை. மதீனாவின் அறிஞர்களும் இதே போக்கையே கொண்டிருந்தார்கள்.

பிரிவினைக்கு வழிவகுக்காது சமூகத்திலிருந்த ஆட்சிக்கு இமாம் மாலிக் கட்டுப்பட்டார்களாயினும், தனது காலத்து ஆட்சியாளர்களின் ஆட்சி இஸ்லாத்தின் சட்டதிட்டங்களுக்கும் அல்குர்ஆனின் வழிகாட்டலுக்கும் முழுமையாக உட்பட்டிருந்தது என அவர் காணவில்லை. ஓரளவான சீர்திருத்தத்திற்கு வழிவகுக்கலாம் என்ற வகையிலேயே ஆட்சிக்குக் கட்டுப்படுதலை இமாம் மாலிக் ஏற்றார். குழப்பநிலைகள், பிரச்சினைகள் நீங்கிய அமைதியான சூழ்நிலையில் மேற்கொள்ளப்படும் சீர்திருத்தம் ஏற்படுத்தும் பாதிப்பு பாரியதாக அமையலாம் என அவர் கருதினார்.

எனவே, நல்லுபதேசத்தினூடாகவும் உரிய இடத்தில் சத்தியத்தைப் பேசுவதனூடாகவும் சீர்திருத்த முயற்சியில் அவர் ஈடுபட்டார். வழிகாட்டும் பொறுப்புகளையும் அவர் ஏற்றார். ஆட்சியாளனை சீர்திருத்துவதிலும் கூடிய கவனம் செலுத்தினார். ஏனெனில், ஆட்சியாளனின் சீரிய நிலை ஆளப்படுவோரின் சீரான நிலைக்கு வழிவகுக்கும் என்பதில் சந்தேகமில்லை.

இந்த வகையில் குழப்ப நிலையின்போது புரட்சியாளனின் பக்கமோ ஆட்சியாளனின் பக்கமோ இமாம் மாலிக் நிற்கவில்லை. இரு பிரிவிலும் யாருக்கும் உதவ முடியாது என அவர் கருதினார். ஏனெனில், இரு பிரிவினரும் பாவத்தில் வீழ்ந்துள்ளனர் என அவர் கருதினார். கலீபாவுக்கு எதிராகப் புரட்சி செய்பவர்களுக்கு எதிராகப் போராடுவது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகுமா? என இமாம் மாலிக்கிடம் வினவப்பட்டபோது "உமர் பின் அப்துல் அஸீஸ் போன்ற ஒருவருக்கு எதிராகப் புரட்சி செய்கிறார்களாயின் ஆகும்" என்றார். "உமர் இப்னு அப்துல் அஸீஸைப் போல் ஆட்சியாளன் இல்லாவிட்டால்" என மீண்டும் இமாம் மாலிக்கிடம் வினவப்பட்டபோது "அப்படியாயின் அல்லாஹ் ஓர் அநியாயக்காரன் மூலம் இன்னோர் அநியாயக்காரனைப் பழிவாங்குகிறான். பின்னர் இருவரையுமே பழிவாங்குவான். விட்டு விடு" என்றார்.

இமாம் மாலிக் இலட்சியவாதத் தோற்றங்களோடு மட்டும் நின்று விடாது யதார்த்த நிலையையும் அவதானிக்கும் போக்குக் கொண்டவர். இந்த வகையில் இப்போக்கை அவர் கடைப்பிடித்தார். ஆட்சியாளர்களுக்கு வழிகாட்டியாக அவர்களுக்கு உபதேசிக்கும் போது அவர்கள் செய்ய முயலும் சில தீய செயல்களை அழித்துவிடலாம். அதேவேளை முழுமையாக அவர்கள் சீர்திருந்தி உமர் இப்னு அப்துல் அஸீஸ் போன்ற ஒருவர் அவர்களில் தோன்றவும் கூடும். எனவே கவர்னர்கள் ஆட்சியாளர்களிடம் இமாம் மாலிக் சென்றார்; அவர்களுக்கு உபதேசித்தார்; வழிகாட்டினார்; நற்செயல்களின் பக்கம் அழைத்தார். அவர் செய்த ஆழ்ந்த உபதேசங்கள் பல இன்றும் காணக் கிடைக்கின்றன.

கலீபா அபூ ஜஃபர் மன்சூர், மஹ்தி, ஹாரூன் ரஷீத் போன்றோர் விடயத்தில் பல சந்தர்ப்பங்களில் இமாம் மாலிக் எடுத்த நிலைப்பாடுகள் மிகுந்த பாராட்டுக்குரியன; மிகுந்த கண்ணியத்திற்குரியன. இமாம் மாலிக் கலீபாக்களை சந்திக்கும்போது தம்மை மிகுந்த கண்ணியத்தோடு வைத்துக் கொள்வார். அது தனது உபதேசத்திற்கு நல்ல பாதிப்பைத் தரும் என்று அவர் கருதினார். ஆட்சியாளர்களைச் சூழ இருப்போர் அவர்களைப் பொய்யாகப் புகழ்வது அவர்களது பிழையான செயல்களையும் சிறந்ததாகக் காட்டும்போக்கு பற்றியே மாலிக் பெரிதும் பயந்தார். ஏனெனில், இந்த நிலையில் எவரின் உபதேசமும் வழிகாட்டலும் அவர்களிடம் பயன்கொடுக்காது போகும் என அவர் உணர்ந்தார்.

இமாம் மாலிக்கின் இத்தகைய சிந்தனைப்போக்கிற்கும் நடத்தைக்கும் அவரது இயல்பான அமைதியான போக்குக் கொண்ட ஆளுமை ஒரு காரணமாக இருந்திருக்கலாம். இந்தவகையில் சமூக ஸ்திர நிலை சிறந்த மாற்றத்திற்கு உரிய சந்தர்ப்பத்தை வழங்கும் என இவர் கண்டார். இந்நிலையில் மோசமான நிலையிலிருந்து நல்ல நிலைக்கும், நல்ல நிலையிலிருந்து மிகச் சிறந்த நிலைக்கும் படிப்படியாகச் செல்ல முடியும் என அவர் கண்டார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 03

# இமாம் ஷாபிஈயும் சமூக மாற்றமும்

இமாம் ஷாபிஈ அப்பாஸிய காலப் பிரிவில் ஹிஜ்ரி 150இல் பிறந்தார். இவ்வாண்டிலேயே இமாம் அபூஹனீபாவும் மரணித்தார். இமாம் ஷாபிஈ இமாம் மாலிக்கிடம் கற்றார். குறிப்பிட்டதொரு காலப்பிரிவில் இமாம் மாலிக்கிடம் கல்வி கற்பதிலேயே ஈடுபட்டிருந்தார். பின்னர் தனது தேவைகளை நிறைவு செய்து கொள்ள நஜ்ரானில் அரச தொழிலொன்றையும் செய்தார். அத்தொழில் மூலம் நீதியை நிலைநாட்டினார் என்பதோடு தனக்கு இழைக்கப்படும் அநீதிகள், தீங்குகளிலிருந்தும் தன்னைக் காத்துக் கொண்டார். குறைஷிக் கோத்திரத்தைச் சேர்ந்தவராகவும் இறைதூதர் (ஸல்) அவர்களின் வம்சாவழியைக் கொண்டவராகவும் இருந்தமையால் 'அலவி' பிரிவினரைச் சேர்ந்தவர் எனக் குற்றம் சாட்டப்பட்டார். அப்போது அப்பாஸியர் அலவி தலைவர்களையும், அவர்களது செயற்பாடுகளையும் தேடித் திரிந்து வந்தமையே இதன் பின்னணியாகும். இந்த வகையில் சூழ்ச்சியாலும் பொய் முறையீடுகளாலும் இமாம் ஷாபிஈ கைது செய்யப்பட்டு பக்தாதுக்கு அனுப்பப்பட்டார். இது ஹிஜ்ரி 184இல் நிகழ்ந்தது.

இமாம் அவர்களுக்கு ஏற்பட்ட இந்தத் துன்பம் அருளாக அமைந்தது எனக் கூறக் கூடியதாக இருந்தது. ஏனெனில், இமாம் பக்தாதில் இமாம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபூஹனீபாவின் மாணவர் முஹம்மத் இப்னு ஹஸனைச் சந்தித்தார். ஏற்கனவே ஹிஜாஸ் பிரதேச சட்ட அறிவு இவரிடம் இருந்தது. இப்போது ஈராக்கிய சட்ட அறிவையும் இமாம் முஹம்மத் இப்னு ஹஸனிடமிருந்து கற்றுக் கொண்டார். இந்த வகையில் அறிவுசார் சட்ட அறிவும், பாரம்பரிய சட்ட அறிவும் இமாமிடம் ஒன்றிணைந்தன.

பின்னர் மீண்டும் மக்கா திரும்பினார். ஹஜ்ஜின்போது பெரும் அறிஞர்களை சந்தித்தார். இமாம் அஹ்மத் இப்னு ஹன்பல் அவர்களில் ஒருவர். இந்த வகையில் பல அறிஞர்களது சிந்தனைப் போக்கையும் இமாம் படித்துத் தேர்ந்தார். அதன் விளைவாக இமாம் அவர்களால் தனியானதொரு சிந்தனைப் போக்கை உருவாக்க முடிந்தது. வித்தியாசமான இருவகை சட்ட சிந்தனைப் போக்கையும் ஆழ்ந்து படித்ததன் பின்னர் மக்காவில் ஏறத்தாழ ஒன்பது வருடங்கள் இமாம் ஷாபிஈ தங்கி இருந்தார். அங்கு பலருடனும் கருத்துப் பரிமாறல்களையும், வாதப் பிரதிவாதங்களையும் நடாத்தினார். வித்தியாசமான பல கருத்துக்களையும், வேறுபட்ட சிந்தனைப் போக்குகளையும் அவற்றினூடே அவதானித்தார்.

இவ்வாறு இமாம் ஷாபிஈ நன்கு கற்றுத் தேர்ந்து அறிவு முதிர்ச்சி பெற்றதன் பின்னர் சட்ட ஆக்கத்திற்கான விதிகளையும், கொள்கைகளையும் வகுக்கத் துவங்கினார். பின்னர் பக்தாதுக்கு இரண்டாம் முறையாக ஹிஜ்ரி 915இல் வந்தார். அப்போது இமாமிடம் இதுவரை காணாத தனியான சட்ட ஆய்வு முறைமை இருந்தது. பக்தாத் வந்த இமாம் கலீபா மஃமூனின் சபையில் பாரசீக செல்வாக்கு இருந்ததை அவதானித்தார். இது இஸ்லாமிய சிந்தனையிலும் பாதிப்பை ஏற்படுத்தியது. பகுத்தறிவுவாதிகளாக அக்காலத்தில் கணிக்கப்பட்ட முஃதஸிலாக்கள் கலீபாவிடத்தில் மிகுந்த செல்வாக்குப் பெற்றிருந்தனர். கலீபாவின் எழுத்தாளர்களாகவும், அவரது நம்பிக்கைக்குரிய காவலாளிகளாகவும், நெருங்கிய அந்தரங்கமானவர்களாகவும் இவர்களே காணப்பட்டனர். தமது கொள்கைப் போக்குடன் ஒத்துவராத அறிஞர்கள் மீது அடக்குமுறையைப் பிரயோகிப்பவர்களாகவும் இவர்கள் காணப்பட்டனர்.

இந்நிலையில் அவமானப்படத்தக்க நாட்டில் நிலைக்க இமாம் ஷாபிஈ விரும்பவில்லை. தனது நம்பிக்கை குறித்து பல வாதங்களை நடத்திய பிறகே இமாம் இம்முடிவுக்கு வந்தார். இமாம் ஷாபிஈயின் கீழ்வரும் கவிதை இந்த உண்மையை விளக்குகிறது.

அவமானம் தரும் நாட்டில் மரியாதைக்குரியோர் இருப்பது
அதனை விட்டு புறப்பட முடியுமானால்
சாத்தியமற்ற ஒன்றே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த நிலையில்தான் அல்குர்ஆன் படைக்கப்பட்டதா? என்ற இஸ்லாமிய வரலாற்றில் பிரசித்தி பெற்ற பிரச்சினை தோன்றியது. சட்ட, ஹதீஸ்துறை அறிஞர்களுக்கு இது ஒரு பெரும் சோதனையாக அமைந்தது. இந்நிலையில் கலீபா மஃமூன் இமாம் ஷாபிஈ அவர்களுக்கு நீதிபதிப் பதவியை அளித்தார். எனினும், இமாம் அதனை ஏற்கவில்லை. இமாமின் சிந்தனைப் போக்குக்கு இதுவே பொருத்தமானதாகும்.

இவ்வகையில் பக்தாதில் தங்கியிருப்பதும் இமாம் ஷாபிஈக்குப் பொருத்தமாக இருக்கவில்லை. அங்கிருந்து பயணப்பட வேண்டிய நிலையே உருவாகியது. பயணப்பட்டுப் போய் வாழ வசதியானதும், பொருத்தமானதுமான இடமாக இமாம் எகிப்தைக் கண்டார். அங்கு பயணப்படும்போது கீழ்வருமாறு பாடினார்கள்.

எனதுள்ளம் எகிப்து செல்ல ஆசை கொள்கிறது.
அதற்கு பாலை நிலங்களையும்
பல பூமிகளையும் கடக்க வேண்டும்
அல்லாஹ்வின் மீது சத்தியமாக
வெற்றிக்கும் செல்வத்திற்கும்
நான் அழைக்கப்படுகிறேனா?!
அல்லது மரணக் குழியை நோக்கித்தான்
அழைக்கப்படுகிறேனா?
எனக்குத் தெரியவில்லை!

மக்களது மனப்போக்குகளை இமாம் ஷாபிஈ ஆழமாகப் புரிந்திருந்தார். புரிந்துகொள்ளும் நுண்ணிய பார்வைத் திறன் அவருக்கிருந்தது. பயணங்கள் செல்வதில் மிகுந்த விருப்புடையவர்களாகவும் இமாம் இருந்தார். எனவே, மக்களது கொடுக்கல் வாங்கல்கள், பழக்க வழக்கங்கள், அவர்களது வாழ்வில் பாதிப்பை ஏற்படுத்தும் விடயங்கள் பற்றியெல்லாம் இமாம் நன்கு அறிந்திருந்தார். கீழ்வரும் இமாமின் கவிதை இக்கருத்தை விளக்குகிறது.

கிழக்காகவும் மேற்காகவும்
நாடுகளெல்லாம் சுற்றித்திரிவேன்.
என்தேவையைப் பெறுவேன்.
அல்லது ஊருக்குப் புதியவனாக இறப்பேன் நான் அழிந்தால்
அல்லாஹ்வே அதனைக் காப்பான் தப்பினால்
அண்மையில் நான் மீண்டு வரலாம்.

உண்மையில் பயணங்கள் ஒரு சட்ட அறிஞனுக்கு நிறைய அறிவைக் கொடுக்கக் கூடியன என்பதோடு பயணம் இயல்பாகவே பல அனுபவங்களையும் தரக் கூடியது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இமாம் அவர்களது காலத்து அரசியல் சூழல் பற்றி இங்கு விளக்கு வது அவசியம். உமையாக்களிடமிருந்து அதிகாரத்தைப் பறிக்க ஆயு தம் தூக்கிப் போராடிய குழுக்கள் இப்போது பலவீனமுற்றிருந்தன. ஷீயா, கவாரிஜ்கள் என்ற இரு முக்கிய பிரிவினரே ஆயுத முனையில் ஆட்சியைக் கவிழ்க்கப் போராடியவர்கள். இக்காலப் பிரிவில் இவர்கள் பலவீனமுற்றுப் போனதால் குழப்பநிலைகள் நீங்கி ஓரளவு அமைதி நிலவியது. இவர்கள் இரு சாராரும் ஆயுதங்களை வைத்துவிட்டு பேனா என்ற ஆயுதத்தைத் தூக்க இப்போது ஆரம்பித்திருந்தார்கள். ஏனெனில் அரசு, ஆயுத மோதலுக்குப் பதிலாக கருத்துப் பரிமாறலொன்றை ஏற்படுத்தும் வகையில் பல அமர்வுகளை ஏற்படுத்திக் கொடுத்தது.

இந்த வகையில் பலசிந்தனைகளை சீர்படுத்துவதற்கான சந்தர்ப்ப மொன்றை அரசு ஏற்படுத்திக் கொடுத்தது. எனவே ஒவ்வொரு பிரிவின ரும் ஆயுதப் போராட்டத்திற்குப் பதிலாக தங்கள் சிந்தனைகளை ஆதாரங்களோடு பதிய முனைந்தனர். கருத்து ரீதியாக தம் சிந்தனைக ளைப் பாதுகாக்க முனைந்தனர். இப்பின்னணியில் மக்கள் பல்வேறு கலைகளிலும், அறிவுத் துறைகளிலும் ஈடுபாடு காட்டலானார்கள்.

மொழி அறிஞர்கள் இலக்கண விதிகளை வகுக்க ஆரம்பித்தார்கள். கலீல் இப்னு அஹ்மத் போன்ற இலக்கிய அறிஞர்கள் யாப்பிலக் கணத்தை வகுக்கலானார்கள். இஸ்லாமிய சட்டம், ஹதீஸ், தப்ஸீர் போன்ற துறைகள் இவ்வகையில் வகுக்கப்படலாயின. அப்போதைய இஸ்லாமிய அரசும் மேற்கே ஸ்பெயினிலிருந்து கிழக்கே சீனா வரை யில் பரந்து விரிந்திருந்தது. எனவே, வளர்ச்சியடைந்த நகரங்கள் பல உருவாயின. ஒவ்வொரு நகரும் பிரசித்தி பெற்ற அறிஞர்கள் பலரால் பிரபல்யம் ஆகியது. விளைவாக அறிவு தேடுவதற்கான பயணங்களும் அதிகரித்தன.

அப்பாஸிய கலீபாக்கள் ஆடம்பரப் பிரியர்களாகவும், வீண் விளை யாட்டுக்களில் சற்று அளவுமீறி ஈடுபாடு கொண்டவர்களாகவும், தடுக் கப்பட்ட, ஹராமான சில செயல்களை நெருங்கிச் சென்றவர்களாகவும் இருந்தார்கள். இத்தகைய சில பலவீனங்கள் அவர்களில் பலரிடம் காணப்பட்டபோதிலும் அவர்கள் மார்க்க உணர்வு கொண்டவர்களாக இருந்தார்கள். அறிஞர்களை நெருக்கமாக்கிக் கொண்டார்கள். அவர் களை உயர்த்தி மதித்தார்கள். அவர்களுக்கு வசதிகளையும் செய்து கொடுத்தார்கள். அத்தோடு அறிவுக்கான வழிகளையும், படிப்பதற் கான வசதிகளையும் நன்கு ஏற்படுத்தினார்கள். மார்க்கத்திற்குப் புறம்பான சிந்தனைகளோடும், முஃதஸிலாக்களோடும் போராட அறிஞர்களின் உதவியையும் பெற்றார்கள். மஃமூன், வாஸித், முஃத ஸிம் போன்ற சிலர் முஃதஸிலாக்களுக்கு ஆதரவாக நின்று அறிஞர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களை ஒதுக்கி அவர்களைத் துன்புறுத்தினார்கள் என்பது உண்மையாயி னும் அப்பாஸிய கலீபாக்களில் ஏனையோர் அவ்வாறிருக்கவில்லை. குறிப்பாக ஹாரூன் ரஷீத் இஸ்லாமிய சட்ட அறிஞர்கள், ஹதீஸ் துறை அறிஞர்கள், உபதேசகர்கள் போன்றோரை தனக்கு நெருக்கமாக வைத்துக் கொண்டார். முஃதஸிலாக்களை அவர் சிறைவைத்ததாக வரலாற்றில் பதிவுள்ளது. கலீபா முதவக்கிலும் முஃதஸிலாக்களை ஒதுக்கி இஸ்லாமிய அறிஞர்களை மீண்டும் பலம் பெற்றவர்களாக மாற்றினார்.

இந்தவகையில் பொதுவாக அப்பாஸிய கலீபாக்கள் சிலபோது கடுமையான வார்த்தைப் பிரயோகங்களைக் கொண்டிருந்தாலும் அறிஞர்களின் உபதேசங்களை செவிமடுத்தார்கள்.

அறிஞர்களுக்குக் கிடைத்த இந்த அந்தஸ்தின் காரணமாக அறிவு தேடும் போக்கு சமூகத்தில் வளர்ந்தது. குறிப்பாக அறிவு மன்றங்கள் கலீபாக்கள், கவர்னர்களின் மாளிகைகளில் தொடர்ந்தமையும் அங்கு கவிஞர்களும், சட்ட அறிஞர்களும், பல்தரப்பட்ட அறிவுத் துறைகளில் தேர்ச்சி பெற்ற நிபுணர்களும் போட்டி போட்டுக் கொண்டு சென்றமை யும் அறிவு தேடுவோருக்கு மேலும் ஊக்கத்தைக் கொடுத்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 04

# இமாம் அஹ்மதும் சமூக மாற்றமும்

அரசியல் பற்றிய இமாம் அஹ்மதின் சிந்தனைகள், அவரது பொது வான சிந்தனைப் போக்கான பாரம்பரிய சிந்தனை முறைமையைக் கொண்டதாக அமைந்திருந்தன.

பெரும்பாலான ஸஹாபாக்களும் தாபியீன்களும் கொண்டிருக்கும் கருத்தை இங்கு இமாம் அஹ்மத் முதன்மைப்படுத்தினார். கிலாபத், பைஅத் போன்ற அம்சங்கள் மட்டுமன்றி பொதுவாக சட்ட சிந்தனை யிலும் இமாமின் போக்கு இவ்வாறு அமைந்திருந்தது. அத்தோடு இமாம் யதார்த்தபூர்வமான பார்வை கொண்டிருந்தார். குழப்ப நிலை

---

இஸ்லாமிய சிந்தனைப் போக்கில் இது ஒருவகையாகும். அல்குர்ஆன், ஸுன்னா, ஸஹாபாக்கள், தாபியீன்களின் பெரும் அறிஞர்களின் கருத்துக்களை முதன்மைப்படுத்தும் போக்கே இதுவாகும். அல்குர்ஆனினதும் ஸுன்னாவின தும் வசனங்களுக்கு காரணங் காணுவதில் இவர்கள் ஆழ்ந்து போக மாட்டார்கள். அல்குர்ஆன் ஸுன்னாவுக்கு அடுத்தபடியாக ஸஹாபாக்களின் கருத்துக்களை முதன்மைப்படுத்துவார்கள், தாபியீன்களின் பெரும் அறிஞர்களின் கருத்துக்கு அல்லது அவர்களில் பெரும்பாலோரது கருத்துக்கு இவர்கள் ஒரு பெறுமானத் தைக் கொடுப்பர். (மொழிபெயர்ப்பாளன்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களைத் தவிர்த்து அமைதியும் சமாதான நிலையும் நிலவ வேண்டும் என்ற கருத்தை இவர் கொண்டிருந்தார். அத்தோடு முஸ்லிம்களின் ஒற்றுமையைப் பேணுவதில் ஆழ்ந்த கவனம் செலுத்த வேண்டும் என்ற போக்கும் இவரிடம் இருந்தது.

அநியாயக்காரனாக இருந்தாலும் தன் பலத்தால் ஆட்சிக்கு வந்த இமாமுக்கு எதிராக ஆயுதம் தூக்குவதைவிட அவருக்குக் கட்டுப்படுவதே கடமையானது எனவும் அவர் கூறினார். ஒரு சர்வாதிகார ஆட்சியாளன் பல வருடங்கள் திட்டமிட்டுச் செய்யும் அநியாயங்களை விட கூடுதலான அநியாயங்களை அவனுக்கெதிரான ஆயுதப் போராட்டம் ஏற்படுத்தும். இது பாரிய குழப்ப நிலையை ஏற்படுத்தி விடும் என இமாம் இக்கருத்திற்கு நியாயம் கூறினார். இக்கருத்து இமாம் மாலிக்கின் கருத்தை ஒத்திருக்கிறது எனக் கூறலாம்.

ஆயினும் இமாம் மாலிக்குக்கும், அஹ்மதுக்கும் இடையே உள்ள வேறுபாட்டை இங்கு அவதானிக்க வேண்டும். இமாம் மாலிக் அரசுக்கெதிரான ஆயுதப் போராட்டத்தின் குழப்பநிலைகளைக் கண்டார். ஆட்சியொன்று கவிழ்வதையும் அதன் பாரிய குழப்ப நிலைகளையும் கண்டார். ஏனெனில், இமாம் மாலிக் இருவேறு கிலாபத்துக்களைக் கண்டவர். இரு காலப்பிரிவுகளிலும் வாழ்ந்தவர். இவ்விரு காலப் பிரிவுகளிலும் போராட்டங்களும் குழப்ப நிலைகளும் வலுத்திருந்தன. அவற்றை இமாம் மாலிக் கண்டதோடு அக்காலப் பிரிவுகளிலேயே வாழ்ந்தார். எனவே, அவற்றால் அவர் பாதிக்கப்பட்டார்.

ஆயினும், இமாம் அஹ்மத் குழப்பநிலைகளை அதிகமாக அவதானிக்கவில்லை. அவரது காலப்பிரிவு குழப்ப காலப்பிரிவை அண்மித்ததாக இருக்கவும் இல்லை. அமீனுக்கும், மஃமூனுக்கும் இடையே நிகழ்ந்த போராட்டத்தையும் அதனால் விளைந்த குழப்பநிலையையுமே இமாம் அஹ்மத் அவதானித்தார். அக்குழப்பநிலையின் விளைவு இறுதியில் மோசமாக அமைந்ததையும் இமாம் கண்டார்.

அதாவது பாரசீக ஆதிக்கம் ஆட்சியில் வேரூன்றியது. பித்அத்கள் பரவின, இஸ்லாத்துக்குப் புறம்பான சிந்தனைகள் அதிகாரபீடத்தில் ஆதிக்கம் செலுத்தின. பித்அத் போக்காளர்கள் ஆட்சியாளர்கள் மீது செல்வாக்குச் செலுத்தினர். அவர்களால் இமாம் சிறைவாசத்திற்கு உட்பட்டார். துன்புறுத்தவும் பட்டார். மஃமூன், முஃதஸிம், வாஸிக் என தொடராக வந்த மூன்று ஆட்சியாளர்களால் அவர் துன்புறுத்தப் பட்டார். எனினும், இவை எதுவும் இமாம் அவர்களது உள்ளத்தில் பழிவாங்கும் உணர்வையோ ஆட்சியாளர்களுக்கு எதிராக போர்க் கொடி தூக்கும் சிந்தனையையோ விதைக்கவில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறையும் அங்கு கிடைத்த சித்திரவதைகளும் சட்டங்களை அவர்களுக்கு உருவாக்கிக் கொடுக்கவில்லை. அப்படி நடந்திருப்பின் அது மனோஇச்சையின் விளைவாகப் போயிருக்கும். அல்லது தமது காலப் பிரிவு ஆட்சியாளர்கள் கொடுத்த துன்பங்களின் விளைவாகப் போயிருக்கும். ஆதாரபூர்வமான ஸுன்னா, இஸ்லாத்தின் ஆரம்ப சந்ததியினரின் நடைமுறை, அவர்களது அனுபவங்கள் என்பவற்றிலிருந்தே கிலாபத் பற்றியும், அதற்கு எதிராக ஆயுதம் தூக்குவது பற்றியுமான சட்டங்களை இமாம் வகுத்தார். அத்தோடு இமாம், சமூக நலன்களையும் கவனத்தில் கொண்டார். சாதாரண எதிர்பார்ப்புக்கு மாற்றமாக இமாம் ஆட்சிக்கு எதிராக ஆயுதம் தூக்குவதை மறுத்தார். ஆட்சியாளர் நிலை எவ்வாறு இருப்பினும் அவருக்கெதிராக ஆயுதம் தூக்குவது அத்துமீறிய நடவடிக்கை என்றே இமாம் கணித்தார். தன்னை சித்திரவதை செய்த ஆட்சியாளர்களுக்கு எதிராக ஆயுதம் தூக்குவதைக் கூட இவ்வாறே இமாம் கருதினார்.

"இமாம் அஹ்மதின் பெருமைகள், சிறப்புகள்" என்ற நூலில் இமாம் இது பற்றி சொன்னவற்றை இப்னு ஜெளஸி கீழ்வருமாறு தருகிறார்:

"தலைவர்களுக்கு, அமீருல் முஃமினீனாக இருப்பவருக்கு அவர் சிறந்தவராயினும், மோசமானவராயினும் கட்டுப்படுதல் கடமையாகும். கிலாபத்தைப் பொறுப்பேற்றவரின் கீழ் மக்கள் ஒன்று திரண்டு அவரை ஏற்றும் இருப்பின் அவருக்குக் கட்டுப்பட வேண்டும். ஆயுத பலத்தால் அதிகாரத்தைப் பிடித்து கலீபாவாகி அமீருல் முஃமினீன் என அழைக்கப்பட்டாலும் அவருக்கும் கட்டுப்படல் வேண்டும். மறுமை நாள் வரையில் நல்லவராயினும் மோசமானவராயினும் அவரோடு சேர்ந்து போர் புரிவது -ஜிஹாத் செய்வது- தொடர்ந்து இருக்கவே செய்யும்.

"யுத்தத்தால் கிடைக்கும் கனீமத் பொருட்களைப் பகிர்வதும், குற்றங்களுக்கான தண்டனையை நிறைவேற்றலும் ஆட்சித் தலைவர்களுக்கு உரியதாகவே தொடர்ந்தும் இருக்கும். இந்த உரிமையில் குறை காணவோ அவ்வுரிமையைப் பறிக்க முனைவதோ கூடாது. ஸகாத் பொருட்களை ஆட்சித் தலைவர்களிடம் -அவர்கள் நல்லவர்களாயினும் கெட்டவர்களாயினும்- கொடுப்பது நிறைவேறும். இத்தகைய ஆட்சித் தலைவர்களுக்கு பின்னால் நின்று ஜும்ஆத் தொழுகையை தொழவும் முடியும். இத்தகைய தலைவர்களின் இமாமத் ஆகுமானதேயாகும். ஜும்ஆத் தொழுகையை இவர்களுக்குப் பின்னால் தொழுது விட்டு அதனை மீட்டுத் தொழுபவர் பித்அத் போக்காளர் ஆகிறார். ஸுன்னாவுக்கு முரண்பட்டவராகவும் ஆகிறார். அவர்களின் பின்னால்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டு ரக்அத்களைத் தொழுது அது பூரணமாக நிறைவேறியது என ஏற்க வேண்டும். அதில் சந்தேகப்பட வேண்டிய அவசியமில்லை. ஒரு முஸ்லிம் ஆட்சியாளர் அவர் முஸ்லிம்களது திருப்தியின் ஊடாகவோ அல்லது ஆயுத பலத்தாலோ ஆட்சிக்கு வந்திருக்கலாம். முஸ்லிம்கள் ஒருமித்து ஏற்றிருக்கும் இவ்வாட்சியாளர் ஒருவருக்கு எதிராக ஆயுதம் தூக்குதல் அவர்களது ஒற்றுமையைக் குலைத்ததாகிறது. இறைதூதர் (ஸல்) அவர்களது ஹதீஸ்களுக்கு முரண்பட்டதாகவும் ஆகிறது. இவ்வாறு ஆயுதம் தூக்குபவர் இறந்தால் அவரது மரணம் ஜாஹிலிய்யத் மரணமாகிறது."

இவ்வாறு தீவிரமாக இக்கருத்தை இமாம் அஹ்மத் வலியுறுத்தினாலும் ஒரு விடயம் இஸ்லாத்திற்கு முரண் பாவம் எனக் காணும்போது ஆட்சியாளர்களுக்குக் கட்டுப்பட வேண்டும் என்ற கருத்தை இமாம் கொண்டிருக்கவில்லை. ஏனெனில், அல்லாஹ்வுக்கு மாறு செய்ய வேண்டி வருமாயின் யாருக்கும் கட்டுப்படல் கூடாது என்பது இஸ்லாத்தின் அடிப்படைக் கருத்தாகும். மஃமூன், முஃதஸிம், வாஸிக் போன்ற ஆட்சியாளர்களது காலப்பிரிவில் அல்குர்ஆன் பற்றிய தனது நம்பிக்கைக்கு மாற்றமானதை ஏற்குமாறு கொடுமைப்படுத்தப்பட்டபோது இமாம் அஹ்மத் கொடுமைகளைச் சகித்துக் கொண்டார். இறைபாதையில் கொல்லப்படுவதையும் ஏற்றுக் கொண்டார். ஆனால், தான் நம்பும் சத்தியத்திற்கு மாற்றமானதை அவர் ஏற்கவில்லை. எனினும், அந்த ஆட்சியாளர்களை முஃமின்களின் தலைவர் -அமிருல் முஃமினீன்- என இமாம் அழைத்தார். அவர்களுக்கு எதிராகப் புரட்சி செய்யுமாறு இமாம் பிரச்சாரம் செய்யவுமில்லை.

ஆட்சியாளனுக்கு அக்குறிப்பிட்ட விடயத்தில் கட்டுப்படாமை, இஸ்லாத்திற்குப் புறம்பான சில சிந்தனைகளை ஏற்காமை அவனுக்கு எதிராகப் புரட்சி செய்வதாகாது. எதிராகப் புரட்சி செய்தல் என்பது ஆயுதப் போராட்டத்தில் ஈடுபடல், அதற்காகத் தூண்டல், ஆட்சிக்குக் கட்டுப்பட வேண்டாமெனப் பிரச்சாரம் செய்தல் என்பவற்றையே குறிக்கும். கலீபாவுக்குக் கட்டுப்படல் என்பதன் பொருள்- சத்தியமாயினும், அசத்தியமாயினும் கலீபா சொல்லும் அனைத்துக்கும் கட்டுப்படல் எனப் பொருள்படாது என இமாம் கருதினார். கலீபா சொல்லும் எல்லாவற்றுக்கும் -சத்தியமாயினும் அசத்தியமாயினும்- கட்டுப்படுவதாயின் அது முகஸ்துதியாகவும், நயவஞ்சகமாகவும் அமையும். இது இமாம் அஹ்மதின் இயல்புக்கு மாற்றமானது.

இமாம் மாலிக்கும் இதே கருத்தையே கொண்டிருந்தார். இருவருக்கும் இடையேயிருந்த வேறுபாடு என்னவெனில் இமாம் மாலிக் ஆட்சியாளருக்கு நீதி வழுவாது ஆட்சி புரியத் தூண்டினார். ஸுன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னாவை நடைமுறைப்படுத்த வலியுறுத்தினார். இதற்காக எந்த முகஸ்துதியும் இன்றி, பாரபட்சமும் காட்டாது அவர்களது சபைக்குச் சென்றார். ஆட்சியாளன் தூய்மையானோருக்கு தனது வாயிலைத் திறந்து விட்டு திறந்த மனதோடு செவிசாய்த்துக் கேட்டால் இவ்வழிமுறை நல்ல பயன்களைக் கொடுக்கும் என்பதில் சந்தேகமில்லை.

எனினும், இமாம் அஹ்மத் ஆட்சியாளர்களுடன் தொடர்பு வைக்க வில்லை. அவர்களுக்கு உபதேசிக்கவோ, சரியான இஸ்லாத்தை எடுத்துச் சொல்லவோ அவர்களிடம் செல்லவில்லை. இமாம் அஹ்மதின் காலப்பிரிவில் பித்அத் சிந்தனைப் போக்குக் கொண்டோர் ஆட்சியாளர்கள் மீது செல்வாக்குச் செலுத்தினர். இமாம் அஹ்மத் போன்றோர் ஆட்சியாளர்களோடு தொடர்புபட்டு பாதிப்பேற்படுத்த இத்தகையோர் தடையாக இருந்தனர். இப்னு அபூதாவூத், ஐயாத், ஹர்தமத் போன்ற முஃதஸிலா சிந்தனைப் போக்குக் கொண்டோர் ஆட்சியாளர்களின் உள்ளங்களிலும் சிந்தனைகளிலும் செல்வாக்குச் செலுத்தினர். இந்நிலையில் இமாம் அஹ்மதின் உபதேசமோ கருத்துக்களோ ஆட்சியாளர்களிடம் அங்கீகாரம் பெறப் போவதில்லை. இமாம் அஹ்மத் ஆட்சியாளர்களோடு தொடர்பு வைக்காமல் இருந்தமைக்கு இத்தகைய சூழ்நிலையே காரணமாக இருந்திருக்கலாம். எனவே, இமாம் இறுதிவரையும் ஆட்சியாளர்களை விட்டு ஒதுங்கி வாழ்ந்து மரணித்தார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 05
# மாற்றத்திற்கான இன்னும் சில முயற்சிகள்

இதுவரை சமூக மாற்றம் குறித்து அஹ்லுஸ் ஸுன்னா சார்ந்த பெரும் அறிஞர்களின் கருத்துக்களைப் பார்த்து வந்தோம். அபூ ஹனீபா வாழ்ந்த முதலாம் நூற்றாண்டில் நிலமை எவ்வாறிருந்தது என்று நோக்கினோம். அநியாயக்கார ஆட்சியாளர்களுக்கு எதிராக ஆயுதம் தூக்கிப் போராட வேண்டுமென்ற அபூஹனீபாவின் கருத்து அப்போது பிரசித்தமாக இருந்தது. "அபூஹனீபாவை நாம் எல்லா நிலைகளிலும் சகித்துக் கொண்டோம். இறுதியில் அவர் வாள் ஏந்துதல் என்ற கருத்தோடு வந்தார். அப்போதுதான் எம்மால் தாங்கிக் கொள்ள முடியாது போயிற்று" என இமாம் அவ்ஸாஈ குறிப்பிட்ட கருத்தை ஏற்கனவே பார்த்தோம்.

ஹாபிழ் இப்னு ஹஜர் பத்ஹுல்பாரியில் குறிப்பிடுவது போன்று இது ஆரம்பகால அறிஞர்களின் கருத்துப் போக்காகும். எனினும், இக்கருத்தின் அடிப்படையில் எழுந்த பல ஆயுதப் போராட்ட பரிசோதனைகள் தோல்வியில் முடிந்தன என ஏற்கனவே விளக்கினோம். ஹுஸைன் இப்னு அலி, இப்னு ஸுபைர், அப்துர் ரஹ்மான் இப்னு அல் அஷ்அத், ஸயீத் இப்னு ஸுபைர், ஷஃபி, இப்னு அபீலைலா என இப்படி தொடராக பல இமாம்கள் போராடியும் அனைத்தும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோல்வியிலேயே முடிந்தன. இமாம் அபூ ஹனீபா தமது பாடங்களில் முஹம்மத் இப்னு அப்துல்லாஹ்வை ஆதரித்து பகிரங்கமாகவே கருத்துத் தெரிவித்தார். இதன் காரணமாக அவர் சிறைப்படவும் பல கொடுமைகளுக்கு உட்படவும் நேர்ந்தது.

இவ்வாறு ஆயுதம் தூக்கிப் போராடலே சமூக மாற்ற வழிமுறை என்பது முதல் நூற்றாண்டு அறிஞர்களின் கருத்தாக இருந்தது. எனினும், இக்கருத்து பின்னர் மாற்றமுற்றது. இக்கருத்து மாற்றத்திற்கு ஆயுதப் போராட்டம் தொடர்ந்து தோல்வியைக் கண்டமையும் அதன் விளைவு வெறும் இரத்தம் சிந்துவதாகவும், பெரும் மனித அழிவாகவும் அறிஞர்கள் கொடுமைப்படுத்தப்படுவதாகவும் முஸ்லிம்களது சக்தி அநியாயமாக சிதறி சீரழிவதாகவும் இருந்தமையே காரணமாக அமைந்தது.

இந்த வகையில்இமாம் மாலிக்கின் கருத்து இதற்கு மாற்றமாக அமைந்தது. ஏனெனில், அவர் அந்நிகழ்ச்சிகளின் சமகாலத்தில் வாழ்ந்தவர். ஆயுதப் போராட்டத்தின் மோசமான விளைவுகளைக் கண்டவர். எனவே, அக்கருத்தை மாற்றியாக வேண்டிய கட்டாயத்திற்கு உட்பட்டார். இந்த வகையில் ஆட்சியாளனுக்கு எதிராக ஆயுதம் தூக்கிப் போராடக் கூடாது என்ற கருத்து அறிஞர்களிடையே நிலைபெறலாயிற்று. இமாம் ஷாபிஈ, அஹ்மத் மற்றும் அவர்களுக்குப் பின்னால் வந்த அறிஞர்களிடையேயும் இக்கருத்து நிலவியது.

ஆயுதப் போராட்டத்தின் நோக்கம் நன்மையை நிலைநாட்டித் தீமையை ஒழிப்பது ஆனால், தொடராக நடந்த ஆயுதப் போராட்டத்தால் மார்க்க நலனோ உலக நலனோ ஏற்படவில்லை என்பது மாத்திரமன்றி, பெரும் சீர்கேடுகளுக்கும் குழப்ப நிலைகளுக்குமே அது வழிவகுத்தது. எனினும், இஸ்லாமிய வரலாற்றின் சில கால கட்டங்களில் நன்மையை ஏவி தீமையைத் தடுக்கும் நோக்கில் தனிநபர்களாகவும் குழுக்களாகவும் சில முயற்சிகள் நடந்துள்ளன. இவற்றின் நோக்கம் அரசுக்கு எதிராக பாரிய ஆயுதப் போராட்டம் ஒன்றை நடத்துவதாகக் காணப்படவில்லை. இமாம் இப்னு கதீர் தமது அல் பிதாயா வன் நிஹாயா என்ற நூலில் அது பற்றித் தந்துள்ள குறிப்புகள் சிலவற்றை கீழே தருகிறோம்:

### ஹிஜ்ரி 202ஆம் ஆண்டு நிகழ்வுகள்

இக்காலப் பிரிவில் ஸஹ்ல் இப்னு சலாமா அல்முதவ்வஃ தோன்றினார். இவரோடு மக்கள் பலரும் ஒன்றிணைந்து நன்மையை ஏவி தீமையைத் தடுக்கும் பணியில் இறங்கினார்கள். ஆட்சியாளர்களின் தீய செயல்களையும் இவர்கள் சுட்டிக்காட்டி மறுக்கலாயினர். அல்குர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனையும் ஸுன்னாவையும் கடைப்பிடித்தொழுகுமாறு இவர்கள் பிரச்சாரம் செய்தார்கள். இவரது வீடு ஓர் ஆட்சியாளனின் வீடு போன்ற தோற்றத்தை எடுத்தது. ஆட்கள் நிறையப் பேர் அவர் வீட்டு வாயிலில் ஆயுதங்களோடு நின்றனர். இவரைப் பின்பற்றுவோர் தொகையும் அதிகரித்தது. இந்நிலையில் வரம்பு மீறிவிட்டதாகக் கருதி படையினர் இவர்களோடு போராடி ஆயுதங்களை கீழே வைக்கச் செய்தனர். இந் நிலையில் அவர் மறைந்து உலாவினார். இறுதியில் அவர் இராணு வத்தினரிடம் பிடிபட்டு இப்றாஹிம் இப்னு மஹ்தி என்ற இராணுவத் தலைவரிடம் கொண்டுவரப்பட்டார். பின்னர் இவருக்கு ஒரு வருட கால சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

## ஹிஜ்ரி 204 தொடக்கம் 231 காலப்பிரிவு நிகழ்வுகள்

இக்காலப் பிரிவிலேயே அஹ்மத் இப்னு நஸ்ர் அல் குதாஈ (ரஹ்) கொல்லப்பட்டார். அவர் கண்ணியமும் மரியாதையும் கொண்டவராக வாழ்ந்தார். இவரது தந்தை நஸ்ர் இப்னு மாலிக்கிடம் ஹதீஸ் துறை அறிஞர்கள் சென்று பாடம் கற்பர். கலீபா மஃமூனின் மறைவின் பின்னர் பக்தாதில் தீமைகள் பரவின. இந்நிலையில் அஹ்மத் இப்னு நஸ்ர் நன்மையை ஏவித் தீமையை ஒழிக்கும் பணியை மேற்கொள்ள ஆரம்பித்தார். அத்தோடு பலரும் இப்பணியில் இணைந்தனர்.

அஹ்மத் இப்னு நஸ்ர் அறிஞராகவும் மார்க்க பக்தி மிக்கவராகவும் நன்மைகள் செய்வதில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டவராகவும் காணப்பட்டார். நன்மையை ஏவி தீமையைத் தடுப்பதில் ஆர்வம் காட்டிய அஹ்லுஸ் ஸுன்னா அறிஞர்களில் ஒருவராகவும் அவர் காணப்பட்டார். அல்குர்ஆன் இறக்கப்பட்ட அல்லாஹ்வின் வார்த்தைகளாகும்; அது படைக்கப்பட்டதல்ல என்ற கருத்தை கொண்டிருந்த இவர் அதனைப் பிரச்சாரம் செய்வதிலும் ஈடுபட்டார். பக்தாதைச் சேர்ந்த ஒரு பெரும் தொகையினர் அவரைச் சார்ந்து நின்றார்கள். ஆயிரக்கணக்கானோர் அவரைச் சூழ்ந்து நின்றார்கள். அபூஹாரூன் ஸர்ரா, தாலிப் என்ற இருவர் இவருக்கு உதவியாளராக நின்று பக்தாத்தின் மேற்கு, கிழக்குப் பிரதேசங்களுக்குப் பொறுப்பாக இருந்து பிரச்சாரம் செய்தார்கள்.

இவ்வாறு பெருந்தொகையினர் அஹ்மத் இப்னு நஸ்ருடன் இணைந்தபோது அவ்வருடம் ஷஃபான் மாதம் அஹ்மத் இப்னு நஸ்ருக்கு இரகசியமாக பைஅத் செய்வதாக ஏற்பாடாகியது. ஆட்சியாளன் பித்அத் சிந்தனைப் போக்கு கொண்டவனாக உள்ளமையாலும், குறிப்பாக அல்குர்ஆன் படைக்கப்பட்டது என்ற கருத்தைக் கொண்டுள்ளமையாலும், அவனும் அவனது பரிவாரத்தினரும் பாவச்செயல்களில்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மூழ்கியுள்ளதாலும் அரசுக்கெதிரான போராட்டத்திற்கான பைஅத் தாக இது அமைந்தது. இந்நிலையில் ஷஃபான் மாதம் 3ஆம் திகதி வெள்ளிக் கிழமை இரவு பறையொன்று அடிக்கப்படும் எனவும் அப்போது பைஅத் செய்த அனைவரும் குறிப்பிட்ட ஓர் இடத்தில் ஒன்று திரண்டு தாக்குதல் மேற்கொள்ள வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது. எனினும், குறிப்பிட்ட நாளுக்கு முதல் நாள் இருவர் மது அருந்திவிட்டு இரவில் பறை அடிக்கலாயினர். எனினும், மக்கள் யாரும் ஒன்று திரளவில்லை.

இந்நிலையில் அது ஒரு குழப்பத்தை ஏற்படுத்திவிட்டது. இது காவலாளிகளால் அவதானிக்கப்பட்டு அரசுக்கு எத்திவைக்கப் பட்டது. பறை அடித்த இருவரும் கைது செய்யப்பட்டு தண்டிக்கப் பட்டபோது அஹ்மத் இப்னு நஸ்ரின் திட்டத்தை அவர்கள் வெளியிட்டனர். உடனே கலீபா வாஸிக்; இப்னு நஸ்ரின் தலைவர்களைத் தேடிக் கண்டு பிடிக்குமாறு கட்டளையிட்டார். அவர்களில் ஏறத்தாழ 29 பேர் கைது செய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்டனர். இவர்கள் மிக மோசமாகத் துன்புறுத்தப்பட்டனர். இரும்புச் சங்கிலிகளால் அவர்கள் விலங்கிடப் பட்டனர். சிறையிடப்பட்டோருக்கு வழங்கப்படும் உணவு கூட இவர்களுக்கு வழங்கப்படவில்லை. இவ்வாறு இவர்கள் மீது பெரும் அநியாயம் இழைக்கப்பட்டது.

அஹ்மத் இப்னு நஸ்ர் (ரஹ்)வை கலீபா வாஸித்தே தம் கையால் கொலை செய்தார். அப்போது அஹ்மத் (ரஹ்) கபன் அணிந்து மணம் பூசி இருந்தார். அவரது தலை பக்தாத் கொண்டு செல்லப்பட்டு அதன் வாயிலில் தொங்கவிடப்பட்டிருந்தது. அத்தலையில் தொங்கவிடப் பட்ட ஒரு பலகையில் "இது அஹ்மத் இப்னு நஸ்ர் குதாஈ என்ற நிரா கரிப்பாளன்(?) இணைவைப்போன்(?) வழிகேடனின்(?) தலை யாகும்" என எழுதப்பட்டிருந்தது.

இமாம் அஹ்மத் இப்னு ஹன்பல் அவர்களிடம்(ரஹ்) இவர்கள் பற்றி ஒருமுறை நினைவு கூறப்பட்டபோது "அல்லாஹ் அவருக்கு அருள்பாலிக்கட்டும்! அவர் எவ்வளவு பெரிய கொடைவள்ளல். தன்னையே அவர் அல்லாஹ்வுக்காக ஈந்தாரே!" என்றார்.

ஜஃபர் இப்னு முஹம்மத் ஸாயிக் கீழ்வருமாறு அஹ்மத் இப்னு நஸ்ர் பற்றிக் கூறுகிறார்: "எனது கண்கள் கண்டவை பொய்யாயின் அவை குருடாய்ப் போய்விடட்டும். எனது காதுகள் கேட்டவை பொய் யாயின் அவை செவிடாய்ப் போகட்டும். அஹ்மத் இப்னு நஸ்ரின் தலை துண்டாக்கப்பட்டபோது அவர் 'லாஇலாஹ இல்லல்லாஹ்' என்றார். அவர் மரக்கிளையொன்றில் தொங்கவிடப்பட்டபோது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'அலிப், லாம், மீம், மக்கள் நாங்கள் ஈமான் கொண்டுவிட்டோம் என்று சொல்லிவிட்டால் போதும், அவர்கள் சோதிக்கப்பட மாட்டார்கள் என நினைக்கிறார்களா?!' என்ற இறை வசனத்தை ஓதுவதை சில மனிதர்கள் கேட்டார்கள்."

### ஹிஜ்ரி 207 நிகழ்வு

இக்காலப் பிரிவில் யெமனின் 'அக்' என்ற பகுதியில் அப்துர் ரஹ்மான் இப்னு அஹ்மத் இப்னு அப்துல்லா இப்னு முஹம்மத் இப்னு உமர் இப்னு அலி இப்னு அபூதாலிப் என்பார் முஹம்மத் (ஸல்) அவர்களின் சந்ததியினரை ஏற்குமாறு பிரசாரம் செய்தார். கவர்னர்களின் நடத்தை சீர்கெட்டு குடிமக்களுக்கு அநியாயம் செய்யும் நிலை தோன்றியபோதே இப்பிரசாரமும் தலையெடுத்தது. இந்நிலையில் கலீபா மஃமூன்; தீனார் இப்னு அப்துல்லாஹ்வை ஒரு பெரும் படையுடன் அனுப்பி வைத்தார். அத்தோடு உயிர்ப் பாதுகாப்பு அளிப்பதாக ஒரு கடிதமும் கொடுத்தனுப்பினார். அப்துர் ரஹ்மானும் தனது கருத்தை மாற்றிக் கொண்டு கட்டுப்பட்டுப் போனார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 06
## அஹ்லுஸ்ஸுன்னா - வல்ஜமாஆவின் சமூக மாற்றத்திற்கான கொள்கை

ஆரம்ப கால அறிஞர்கள் சமூக மாற்றத்திற்காகக் கடைபிடித்த கொள்கையை இதுவரை ஆராய்ந்தோம். அது எவ்வாறு தொடர்ந்து தோல்வியை ஏற்படுத்தியது எனவும் கண்டோம். வன்முறையால் நல்ல நிலை உருவாக முடியும் என்ற எதிர்பார்ப்பைப் பின்னால் வந்தவர்களிடமிருந்து அத்தோல்விகள் அகலச் செய்தன எனவும் கண்டோம். இமாம் இப்னு தைமியா இக்கருத்தைத் தமது மின்ஹாஜுஸ் ஸுன்னா என்ற நூலில் விளக்கம் தேவையில்லாத அளவு தெளிவாகவும், விரிவாகவும் விளக்குகிறார். அதனைக் கீழே சுருக்கித் தருகிறோம்:

ஸுன்னா சிந்தனை சார்ந்தோர் "உங்களால் முடிந்தளவு அல்லாஹ்வைப் பயந்து கொள்ளுங்கள்" என்ற இறை வசனத்திற்கிணங்க அல்லாஹ்வுக்கும், அவன் தூதருக்கும் பணிந்தொழுக ஆழ்ந்து முயற்சிப்பர். அல்லாஹ், மனிதர்களின் உலக, மறுமை வாழ்வை சீர்படுத்திக் கொடுக்க முஹம்மத் (ஸல்) அவர்களை அனுப்பி வைத்தான் என அவர்கள் அறிவர். அல்லாஹ் நலன் பயப்பதை ஏவியுள்ளான். தீங்கு விளைவிப்பதைத் தடுத்துள்ளான் என்பதையும் அவர்கள் அறிவர். ஒரு குறிப்பிட்ட செயலில் நன்மையும் தீமையும் இருக்குமாயின், அவற்றில் எது மிகைப்பட்டுக் காணப்படுகிறது என அவர்கள் நோக்குவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீமையை விட நன்மை மிகைப்பட்டுக் காணப்படின் அக்குறிப்பிட்ட விடயத்தை செய்ய வேண்டும் என முடிவெடுப்பர். நன்மையை விட தீமை மிகைப்பட்டிருக்குமாயின், அக்குறிப்பிட்ட செயலை செய்யாது விட்டு விட வேண்டும் என்ற கருத்தை உறுதிப்படுத்துவர். ஏனெனில், அல்லாஹ் தன் தூதரை நலன்களைப் பெற்றுக் கொடுக்கவும் பூரணப் படுத்தவும் தீமைகளை ஒழிக்கவும், குறைக்கவும் அனுப்பி வைத்தான்.

யஸீத், அப்துல் மலிக், மன்ஸூர் போன்ற யாரோ ஒருவர் கலீபா பதவியை ஏற்கும்போது ஒன்று இவர்களுக்கு இப்பதவியைக் கொடுக் கக் கூடாது; அவர்களோடு போராடி ஆட்சியை விட்டு அவர்களை நீக்குவது கடமை எனக் கூறலாம். இது வன்முறையாளர்களது கருத் தாகும்; இக்கருத்து தவறானது. ஏனெனில், இதனால் விளையும் தீங்கு நலன்களைவிட அதிகம்.

ஆட்சியாளனுக்கு எதிராகக் கிளம்பியோரில் மிக அதிகமானோர் அதனால் விளைவித்த நன்மைகளை விட தீமைகளை விளைவித்த மையே அதிகம். மதீனாவில் யஸீதுக்கு எதிராகப் போராடியோர், ஈராக்கில் அப்துல் மலிக்குக்கு எதிராக இப்னு அஷ்அத்தோடு சேர்ந்து போராடியோர், குராஸானில் அப்துல் மலிக்கின் மகனுக்கு எதிராகப் போராடிய இப்னுல் முஹல்லப், அப்பாஸிய பிரச்சாரகனாக குராஸா னில் போராடிய அபூமுஸ்லிம், மதீனாவிலும், பஸராவிலும் மன்ஸூ ருக்கு எதிராகப் போராடியோர் எனப் பலரை இதற்கு உதாரணமாகக் கூறலாம்.

இவர்கள் வெற்றியடையலாம் அல்லது தோல்வியுறலாம். ஆனால், இறுதியில் இவர்களது ஆட்சியும் அழிந்து எந்த நல்ல விளைவும் இல்லாமல் போவதையே காணக் கூடியதாக உள்ளது. அப்துல்லாஹ் இப்னு அலியும், அபூ முஸ்லிமும் பெரும் தொகையினரைக் கொன்றார் கள். அவர்கள் இருவரையுமே அபூஜஃபர் மன்ஸூர் கொன்றார். மதீனாவில் போராடியோர், இப்னுல் அஷ்அத், இப்னுல் முஹல்லப் போன்றோர் தோற்றனர். அவர்களுக்குச் சார்பாக நின்று போராடி யோரும் தோற்றனர். அவர்களால் மார்க்கத்தை நிலைநாட்டவும் முடியவில்லை. மார்க்க நலனோ, உலக நலனோ தராத ஒன்றை அல்லாஹ் கட்டளையாக இடமாட்டான்.

இத்தகைய ஆயுதப் போராட்டங்களை மேற்கொண்டவர்கள் அல் லாஹ்வின் தக்வா மிக்க இறைநேசர்களாயினும், சுவர்க்கம் செல்லக் கூடியவர்களாயினும் உண்மை நிலை இதுவேயாகும். இவர்கள் அலி, ஆயிஷா, தல்ஹா, ஸுபைர் போன்றவர்களை விட உயர்ந்தவர்க ளல்லர். எனினும், இந்த ஸஹாபாக்கள் மேற்கொண்ட போராட்டங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறந்தது என ஏற்கப்படவில்லை. நிச்சயமாக இந்த நபித்தோழர்கள் அல்லாஹ்விடத்தில் உயர்ந்த அந்தஸ்துடையவர்கள். ஏனையோரை விட தூய்மையான எண்ணம் கொண்டவர்கள் என்பதில் சந்தேகமில்லை.

மதீனாவில் யஸீதுக்கெதிராகப் போராடியோரிலும் அறிஞர்கள் பலர் இருந்தனர். இப்னு அஷ்அத்தோடு சேர்ந்து அப்துல் மலிக்குக்கு எதிராகப் போராடியவர்களில் மார்க்க உணர்வும், அறிவும் படைத்தவர்கள் நிறையப் பேர் இருந்தனர். அல்லாஹ் அவர்கள் அனைவரையும் மன்னித்து விடுவானாக!

இப்னுல் அஷ்அத்தின் புரட்சி பற்றி ஆமிர் அஷ்ஷஃபியிடம் உங்களது நிலை அப்போது எவ்வாறிருந்தது என வினவப்பட்டது. அதற்கு அவர் அளித்த பதில் கீழ்வருமாறு அமைந்திருந்தது:

"எனது அப்போதைய நிலையை கீழ்வரும் கவிதை சொல்கிறது.

ஓநாய் ஊளையிட்டது,
ஓநாயோடு நான் உறவாடினேன்,
மனிதன் ஒருவன் சத்தமிட்டான்,
அங்கே பறந்து செல்லப் பார்த்தேன்

ஒரு குழப்ப நிலையில் நாம் வீழ்ந்தோம். அப்போது நாம் மிக சிறந்தவர்களாகவும் இருக்கவில்லை, பலமிக்க அயோக்கியர்களாகவும் இருக்கவில்லை."

ஹஸனுல் பஸரி இதுபற்றிச் சொன்ன கருத்து வருமாறு:

"ஹஜ்ஜாஜ் ஓர் இறை தண்டனை. உங்கள் கைகளால் அத்தண்டனையைத் தடுக்க முயலாதவர்கள். அல்லாஹ்விடம் சரணடைந்து அவனுக்கு முற்றிலும் பணிந்து பிரார்த்தித்து அதனைத் தடுக்க முயலுங்கள். ஏனெனில், அல்லாஹ் கூறுகிறான்: "அவர்களை நாம் துன்பத்திற்குள்ளாக்கினோம். அப்போது அவர்கள் தம் இறைவனுக்கு சிரம்தாழ்த்தவோ, பணிவை மேற்கொள்ளவோ இல்லை" (ஸூரா முஃமினூன்:76).

முஸ்லிம் பெரியோர்கள் குழப்பநிலையின்போது போராட்டத்தைத் தடுத்து வந்தார்கள். அப்துல்லாஹ் இப்னு உமர், ஸஈத் இப்னு முஸய்யப், அலி இப்னு ஹுஸைன் போன்ற பலர் மதீனாவில் நிகழ்ந்த ஹர்ரா போராட்டத்தின்போது யஸீதுக்கு எதிராகக் கிளம்புவதைத் தடுத்தமையை இதற்கு ஓர் உதாரணமாகக் கூறலாம். ஹஸனுல் பஸரி, முஜாஹித் போன்ற இன்னும் பலர் இப்னுல் அஷ்அத்தின் குழுப்ப நிலையின்போது போராடச் செல்வதைத் தடுத்ததையும் இன்னொரு உதாரணமாக இங்கு குறிப்பிடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த வகையில் ஆதாரபூர்வமான ஹதீஸ்களின் அடிப்படையில் குழப்பநிலையின்போது போராடலைத் தவிர்க்க வேண்டுமென்ற கருத்து அஹ்லுஸ் ஸுன்னாக்களைப் பொறுத்தவரையில் தீர்மானமான முடிவாகியது. நம்பிக்கைகள் பற்றிய தமது விளக்கங்களின்போது அவர்கள் இதுபற்றிக் குறிப்பிட்டு விளக்கலானார்கள். ஆட்சித் தலைவர்களின் அநியாயங்களைச் சகித்து, பொறுத்துக் கொள்ளுமாறும் அவர்கள் கருத்துத் தெரிவித்தனர்.

எனினும், பல அறிஞர்களும், மார்க்க பக்தி கொண்டோரும் குழப்ப நிலைகளின்போது போராடியுள்ளார்கள் என்பது உண்மையே. புரட்சியாளர்களுக்கு எதிராகப் போராடல், நன்மையை ஏவித் தீமையைத் தடுத்தல், குழப்ப நிலையில் போராடல் என்ற இந்த நிலைகளை பிரித்து அறிந்து கொள்ள முயற்சிப்பது சிக்கலானவை என்பதும் உண்மையே. எனினும், இப்பகுதியில் வந்துள்ள ஆதாரபூர்வமான ஹதீஸ்களை ஆழ்ந்து நோக்கினால், இறைதூதர் (ஸல்) அவர்களிடமிருந்து வந்த அக்கருத்துக்களே சிறந்தவை என்பதைப் புரிந்து கொள்ள முடியும்.

இப்பின்னணியில்தான் ஈராக்கியர் ஹுஸைன் (ரழி) அவர்களுக்குப் பல கடிதங்கள் எழுதி அழைத்தபோது அங்கு செல்ல வேண்டாமென பலர் தடுத்தார்கள். இப்னு உமர், இப்னு அப்பாஸ், அபூபக்கர் இப்னு அப்துர் ரஹ்மான் போன்றோர் அவ்வாறு தடுத்தவர்களில் சிலராவர். ஹுஸைன் (ரழி) அவர்கள் பெரும்பாலும் கொல்லப்படலாமென அவர்களில் சிலர் கருதினர். "கொலை செய்யப்பட இருப்பவரே, உங்களை அல்லாஹ்வின் பாதுகாப்பில் விடுகிறேன்!" என அவர்களில் சிலர் சொல்லவும் செய்தனர். "ஷபாஅத் என்பது மட்டும் இல்லையாயின், உம்மைப் பிடித்து நிறுத்தி அங்கு செல்வதைத் தடுப்பேன்" என்று வேறு சிலர் கூறினர்.

அவர்கள் உண்மையில் தூய்மையான முறையில் ஹுஸைன் (ரழி) அவர்களுக்கு உபதேசம் செய்தார்கள். அவரது நலனையும், முஸ்லிம்களது நலனையுமே நாடினார்கள். அல்லாஹ்வும் அவனது தூதரும் நலனையே நாடுவர்; சீர்கேட்டையன்று. எனினும், மனித அறிவின் முடிவுகள் சிலவேளை சரியாகவும் சிலவேளை பிழையாகவும் அமைந்து விடுவதுண்டு.

ஹுஸைன் (ரழி) அவர்களைப் போக வேண்டாமென தடுத்தோரது கருத்தே சரியானது என்பது பின்னர் தெளிவாகியது. ஹுஸைன் (ரழி) அவர்கள் போராடச் சென்றமையால் உலக நன்மையும் விளையவில்லை; மார்க்க ரீதியான நன்மைகளும் ஏற்படவில்லை. அந்த அநியாயக்காரர்கள் இறைதூதர் (ஸல்) அவர்களின் பேரரை அநியாய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாகக் கொலை செய்தமையே நிகழ்ந்தது. அவர் அநியாயமாக ஷஹீ தாக்கப்பட்டார். அவர் தமது ஊரிலேயே இருந்திருந்தால் நிகழ்ந்திராத பல தீங்குகள், சீர்கேடுகள் போராடச் சென்றமையால் நிகழ்ந்தது. அவர் நினைத்த, நாடிய நன்மைகளோ தீங்கைத் தடுப்பதுவோ எதுவும் நிகழவில்லை. மாற்றமாக, அவரது போராட்டத்தாலும் அவர் கொலை செய்யப்பட்டமையாலும் தீமை அதிகரிக்கவே செய்தது; இருந்த நன்மை குறைந்தது. பெரும் தீங்கு உருவாகக் காரணமாகவும் அமைந்தது. அவர் கொலை செய்யப்பட்டமையால் பல குழப்ப நிலைகள் ஏற்படுவது தவிர்க்க முடியாததாகியது.

ஆட்சித் தலைவர்களின் அநியாயங்களைச் சகித்துக் கொள்ளுங்கள், அவர்களுக்கெதிராகப் போராடுவதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள் என இறைதூதர் (ஸல்) அவர்கள் ஏவியதே உலகிலும் சரி, மறுமையிலும்சரி மிகப் பொருத்தமானது என்பது இதிலிருந்து தெளிவாகிறது. இறைதூதர் (ஸல்) அவர்களது இக்கட்டளைக்கு விரும்பியோ அல்லது தவறுதலாகவோ மாற்றம் செய்தோர் தமது செயல்களால் நலன் விளைவிக்கவில்லை தீங்கையே கொண்டு வந்தனர் என்பதும் தெளிவாகிறது. இதன் காரணமாகவே இறைதூதர் (ஸல்) அவர்களை கீழ்வருமாறு புகழ்ந்தார்கள்:

"எனது இந்த மகன் தலைவராவார், அவர் மூலம் அல்லாஹ் இரு பெரும் முஸ்லிம் பிரிவினருக்கிடையே சமாதானத்தை ஏற்படுத்துவான்."

இது அவரது மிகப்பெரும் பெருமைக்குரிய விடயமாகியது.

இறைதூதர் (ஸல்) அவர்கள் குழப்ப நிலையில் போராடியவரையோ, அல்லது ஆட்சித் தலைவருக்கெதிராகப் போர்க் கொடி தூக்கியவரையோ அல்லது ஆட்சிக்குக் கட்டுப்படுவதை விட்டு விலகிக் கொண்டவரையோ அல்லது முஸ்லிம் சமூகத்தை விட்டு ஒதுங்கிக் கொண்டவரையோ -இவர்களில் யாரையுமே புகழவில்லை.

இந்நிலைகளில் போராடுவது கடமையாக இருந்திருந்தால் அல்லது ஏற்கத்தக்க ஒரு விடயமாக இருந்திருந்தால் அதனை விட்டமைக்காக இறைதூதர் (ஸல்) அவர்கள் யாரையும் புகழ்ந்திருக்க மாட்டார்கள். ஆட்சிக்கெதிராக ஆயுதம் தூக்கியோரை இறைதூதர்(ஸல்) அவர்கள் புகழ்ந்ததாக அவர்களிடமிருந்து எக்கருத்தும் வரவில்லை.

இத்தகைய குழப்பநிலைகளுக்கான காரணங்கள் பொதுவானவையாக இருப்பதுண்டு என்பது இங்கு உணரப்பட வேண்டும். இந்நிலையில் சத்தியம் எது? உண்மையான நோக்கம் என்ன? எனப் புரிந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்வதைத் தடைசெய்யும் வகையிலான எண்ணக் கருத்துக்கள் உள்ளங்களில் தோன்ற இடமுண்டு. ஏனெனில், சில ஆட்சியாளர்கள் மிகுந்த சுயநல நோக்கோடு ஆட்சியை தன்னிடம் வைத்திருக்கும் போக்கில் பல அநியாயங்களைச் செய்வர். அந்நிலையில் உள்ளங் களால் அந்த அநியாயங்களைச் சகித்துக் கொள்ள முடியாது போகும். அந்த அநியாயங்களைத் தடுக்க வேண்டுமாயின் அதனைவிடப் பெரிய சீர்கேட்டை விளைவிக்க வேண்டிய நிலையும் ஏற்படும்.

எனினும், தன் உரிமையைப் பெறுவதிலுள்ள மனிதனின் ஆசை யாலும், தனக்கு நிகழும் அநியாயத்தை நீக்க வேண்டும் என்ற எண் ணத்தாலும் தனது செயலால் நிகழப்போகும் தீமையை அறியவோ அவதானிக்கவோ முடியாது போகிறது. இப்பின்னணியில்தான் இறை தூதர் (ஸல்) அவர்கள் கீழ்வருமாறு கூறினார்கள். "எனக்குப் பின்னால் நீங்கள் ஆட்சியைத் தன்னிடமே பிடிவாதமாக வைத்துக் கொள்ளும் போக்கைக் காண்பீர்கள். என்னை சுவர்க்கத் தடாகத்தில் சந்திக்கும் வரையில் நீங்கள் பொறுமையாகவே இருங்கள்."

ஆட்சியாளர்களுக்கு எதிராகப் போராடிய அநேகர் அல்லது பெரும் பாலோர் ஆட்சியை அவர்கள் தமக்குத் தராது அவர்களிடமே வைத்துக் கொண்டனர் என்பதற்காகவே போராடினர். எனினும், குழப்ப நிலையை ஒழிக்கவும் அடிபணிதல் அல்லாஹ்வுக்கு மட்டுமே இருக்க வேண்டும் என்பதற்காகவுமே தாம் போராடுவதாக அவர்கள் கருதிக் கொண்டார்கள். ஆனாலும் அவர்களை இயக்கிவிட்ட முதன்மையான காரணம் ஆட்சியை பெறல் அல்லது செல்வத்தை அடைதல் என்ற நோக்கமேயாகும்" (இப்னு தைமியாவின் விளக்கம் சுருக்கித் தரப் பட்டுள்ளது).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 07

# கிலாபத்தும் மன்னராட்சி முறையும்

"நுபுவ்வத்தின் அடிப்படையிலமைந்த கிலாபத் முப்பது வருடங்கள் இருக்கும். பின்னர் அல்லாஹ் முடியாட்சியை தான் விரும்புவோருக்குக் கொடுப்பான்" என இறைதூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள் (ஸுனன் ஹதீஸ் நூல்கள்). இந்த ஹதீஸ் கூறியதற்கேற்ப ஹஸன் இப்னு அலி (ரழி) விட்டுக் கொடுத்து இரு முஸ்லிம் பிரிவினரிடையே சமாதானத்தை ஏற்படுத்தியதோடு ஆட்சி கிலாபத் ஆட்சியிலிருந்து முடியாட்சியாக மாறியது. அந்த ஆண்டு முஆவியா (ரழி)வை மக்கள் ஏகோபித்து ஏற்றதன் காரணமாக சமூக ஒற்றுமை ஆண்டு என அழைக்கப்படலாயிற்று. இந்த வகையில் முஆவியா முதல் முடி ஆட்சி ஏற்ற மன்னரானார். அவரது ஆட்சி முடியாட்சியாகவும் அதேவேளை அருள் கொண்டதாகவும் அமைந்தது என விவரிக்கப்பட்டது.

பின்னர் அநியாயம் நிறைந்த ஆட்சி உருவாகியது. இறுதியில் அது அடக்குமுறை நிறைந்த ஆட்சியாக மாறியது. இறைதூதர் (ஸல்) அவர்கள் தமக்குப் பின்னால் உருவாகப் போகும் இத்தகைய கருத்து வேறுபாடுகள் குறித்து இவ்வாறு உணர்த்தினார்கள் :

"எனக்குப் பின்னால் யார் வாழ்கிறாரோ அவர் நிறையக் கருத்து வேறுபாடுகளைக் காண்பார். அவர்கள் எனது வழிமுறையையும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்குப் பின்னால் வரும் நேர்வழி செல்கின்ற கலீபாக்களின் வழி முறையையும் பற்றிப் பிடித்துக் கொள்ளட்டும். நன்கு உறுதியுடன் அவற்றின்மீது நிலைத்திருக்கட்டும். புதிதாக உருவாகும் விடயங்கள் குறித்து உங்களை எச்சரிக்கிறேன். ஏனெனில், புதிதாக உருவாக்கப் படும் விடயங்கள் வழிகேடாகவே அமையும்."

சமூக நிலமை கருத்துவேறுபாட்டில் போய்ச் சேர்ந்தது. ஆட்சியாள னிடத்திலும், குடிமக்களிடமும் காணப்பட்ட குறைபாடுகளே அதற்குக் காரணமாகியது. "நீங்கள் எவ்வாறிருக்கிறீர்களோ அவ்வாறே உங்க ளுக்கான நிலமையும் உருவாகும்" என்ற கருத்திற்கேற்ப அது அமைந் தது. அல்லாஹ் கூறுகிறான்:

"அவ்வாறுதான் அநியாயக்காரர்களை -சிலரை சிலர் மீது அவர்கள் சம்பாதித்தவற்றின் காரணமாக- பொறுப்புதாரர்களாக ஆக்குவோம்" *(ஸூரா அன்ஆம்: 129).*

இறைதூதர் (ஸல்) அவர்கள், கிலாபத்தின் பின் தோன்றும் முடி யாட்சியைத் தீங்கானது என்றே கண்டார்கள். நன்மையை ஏவி தீமை யைத் தடுத்தல், தண்டனைகள் நிறைவேற்றப்படல், பாதுகாப்பான வழிப்போக்குவரத்து, எதிரிகளோடு போராடல், செல்வம் பகிரப்படல் போன்ற மார்க்கக் கடமைகளில் குறைபாடுகள் தோன்றும் என்பதே அதற்குக் காரணமாகும்.

செல்வத்தையும் தலைமையையும் விடாப்பிடியாகத் தம்மிடம் வைத்துக் கொள்ளல், செல்வப் பகிர்வில் பாரபட்சம் காட்டல், ஜிஹா தின்போது நிதானமின்றி நடத்தல், கருத்து வேறுபாடு கொண்டோரை கடுமையாக நசுக்குதல் என்பன மன்னர் பலரிடத்தில் சாதாரணமாகக் காணப்படும் பண்புகள். இவற்றின் காரணமாகவே சமூகத்தில் பல் வேறு குழப்ப நிலைகளும் உருவாயின.

சமூகம் தலைமையின்றி இருத்தல் சாத்தியமில்லை. கிலாபத் சாத்தியமற்றதாகி, முடியாட்சி முறைக்கு சமூகம் மாறிவிட்டதெனின் ஷரீஅத்தைப் பொறுத்தவரையில் அது பற்றிய நிலைப்பாடென்ன? நுபுவ்வத்தின் அடிப்படையிலான கிலாபத் சிறந்தது -முடியாட்சி முறையை விட உயர்ந்தது. எனவே, அது நிலைநாட்டப்படுவது வாஜி பானது என்பதா? அல்லது நியாயமான காரணத்தால் அது நிலைத்தி ருப்பது கடினமாகியதால் முடியாட்சி முறை தோன்றியது- ஏனைய கடமைகள் சில விடப்படுவது போல்தான் இதுவும் அமைந்தது என் பதா? அறிஞர்கள் இது பற்றி விரிவாக விளக்கியுள்ளனர். இங்கு அதனை சுருக்கமாகத் தருகிறோம்:


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியாட்சி முறை எமக்கு முன்பிருந்த ஷரீஅத்துகளில் அனுமதிக்கப் பட்டிருந்தது. அல்லாஹ் முடியாட்சி கொடுக்கப்பட்ட மூன்று நபி மார்கள் குறித்து அல்குர்ஆனிலே விளக்குகிறான். தாவூத் (அலை) அவர்கள் குறித்து அல்லாஹ் கீழ்வருமாறு கூறுகிறான்:

"அல்லாஹ் தாவூதுக்கு ஆட்சியதிகாரத்தையும், ஞானத்தையும் அருளினான். தான் விரும்பியவற்றையும் கற்பித்தான்" (ஸூறா பகரா: 251).

(இங்கு 'முடியாட்சி' என்ற பொருள்படும் 'முல்க்' என்ற சொல்லை அல்குர்ஆன் பாவித்துள்ளது)

ஸுலைமான் (அலை) குறித்து அல்குர்ஆன் கீழ்வருமாறு கூறுகிறது:

"இறைவா! என்னை மன்னித்து விடு. எனக்குப் பின்னர் யாருக்கும் தேவைப்படாத ஆட்சியதிகாரத்தை எனக்குத் தந்தருள், நீ பெரும் கொடையாளனாக உள்ளாய்" (ஸூறா ஸாத்: 35).

யூசுப் (அலை) குறித்து அல்குர்ஆன் கூறுகிறது.

"இறைவா! எனக்கு நீ ஆட்சி அதிகாரத்தைக் கொடுத்தாய், கனவுகளுக்கு விளக்கம் சொல்லும் அறிவைத் தந்தாய்..." (ஸூறா யூசுப்: 101).

மேலும், அல்லாஹ் சொல்கிறான்: "இப்றாஹீமின் சந்ததியினருக்கு வேதத்தையும் ஞானத்தையும் கொடுத்தோம். அவர்களுக்குப் பெரும் ஆட்சியதிகாரத்தையும் கொடுத்தோம்."

மேலும் அல்குர்ஆன் கூறுகிறது: தான் விரும்புவோருக்கு அவன் ஆட்சி அதிகாரத்தைக் கொடுக்கிறான். விரும்பியோரிடமிருந்து ஆட்சியதிகாரத்தைப் பறித்துக் கொள்கிறான். தான் விரும்புவோரை கண்ணியப்படுத்துகிறான். தான் விரும்பியோரை இழிவுபடுத்தவும் செய்கிறான். (ஸூறா ஆல இம்ரான் : 26)

(ஆட்சி அதிகாரம் என மொழிபெயர்க்கப்பட்டுள்ள இவ்வனைத்து இடங்களிலும் முடியாட்சி என்று பொருள்படும் 'முல்க்' என்ற சொல்லையே அல்குர்ஆன் பாவித்துள்ளது.)

அரசர்களில் நல்லவர்களும் இருப்பார்கள், மாற்றமானவர்களும் இருப்பார்கள். அல்லாஹ் கூறுகிறான்: "உங்களுக்கு அல்லாஹ் தாலூத்தை அரசனாக அனுப்பியுள்ளான். அப்போது அவர்கள் எங்கள் மீது அவருக்கு எப்படி ஆட்சிப் பொறுப்பு கொடுக்கப்பட முடியும். நாமே அவரை விட ஆட்சிக்குத் தகுதியானவர்கள். அவருக்கு விரிந்த செல்வம் கொடுக்கப்படவுமில்லை என்றனர். அப்போது அல்லாஹ் கூறினான்: "அல்லாஹ் உங்களைவிட அவரையே தெரிவு செய்துள்ளான். விரிந்த அறிவை அவருக்குக் கொடுத்துள்ளான். பலமான


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடம்பையும் கொடுத்துள்ளான். அல்லாஹ் தான் விரும்பியோருக்கு தன் ஆட்சியைக் கொடுக்கிறான். அல்லாஹ் விரித்துக் கொடுப்பவனாக வும், ஆழ்ந்த அறிவுள்ளவனாகவும் உள்ளான். *(ஸூரா பகரா: 247)*

மேலும் அல்லாஹ் கூறுகிறான்:

"துல்கர்னைன் பற்றி அவர்கள் கேட்கின்றனர். அவர் பற்றி சில சில விடயங்களை நான் சொல்கிறேன் என நீர் கூறுவீராக. அவருக்கு நாம் பூமியிலே அதிகாரத்தைக் கொடுத்தோம். அனைத்து விடயங்களுக்கு மான வசதிகளையும் செய்து கொடுத்தோம்" *(ஸூரா கஹ்ப்: 83-84).*

மேலும் அல்குர்ஆன் கூறுகிறது:

"எனது சமூகத்தினரே, உங்கள் மீது அல்லாஹ் புரிந்துள்ள அருள் களை நினைவு கொண்டு பாருங்கள். உங்களிலே அவன் நபிமார்களை ஆக்கினான். உங்களை அரசர்களாகவும் ஆக்கினான். உலகத்தாரில் யாருக்கும் கொடுக்காதவற்றை உங்களுக்குத் தந்தான்."

பொதுவாக அரசர்களின் போக்கு பற்றி அல்குர்ஆன் கீழ்வருமாறு கூறுகிறது:

அரசர்கள் ஒரு பிரதேசத்தில் நுழைந்தால் அதனை அழித்து சீர் கெடுத்து விடுவார்கள். அப்பிரதேசத்தின் கண்ணியமானவர்களை இழிவானவர்களாக ஆக்கிவிடுவார்கள். அவ்வாறுதான் அவர்கள் செய்கிறார்கள் *(ஸூரா நம்ல்: 134).*

மேலும் அல்லாஹ் கூறுகிறான்:

அனைத்துக் கப்பல்களையும் கொள்ளையடித்துக் கொள்ளும் அர சன் ஒருவன் அவர்களுக்குப் பின்னால் உள்ளான்... *(ஸூரா கஹ்ப்: 79).*

ஆட்சித் தலைவர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டும் என்பதைக் கடமையாக்கும் சட்ட வசனங்கள் நிறைய உள்ளன. நுபுவ்வத் அடிப் படையிலான கிலாபத்தை உருவாக்குவதே கடமையானதாகும். அதனைப் பற்றிப் பிடித்து நிற்குமாறே நாம் கட்டளையிடப்பட்டுள் ளோம். அதற்கு மாற்றமாகத் தோன்றும் புதிய புதிய விடயங்கள் குறித்து நாம் எச்சரிக்கப்பட்டுள்ளோம். இறைதூதர் (ஸல்) அவர்களுக்குப் பின்னால் வந்த அபூபக்கர், உமர் (ரழி) இருவரையும் பின்பற்றுமாறும் நாம் கட்டளையிடப்பட்டுள்ளோம்.

எனினும், சமூகத்தில் நிகழ்ந்த கருத்து வேறுபாட்டின் காரணமாக அவ்வுயர்ந்த நிலையை விட்டு ஓரளவு தாழ்ந்த நிலைக்குச் செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. கிலாபத் அமைப்பு கடமையானது என்பது உண்மையே. எனினும், ஆட்சி அதிகாரத்தால் செய்ய வேண்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டியவற்றை கஷ்டமின்றி இலகுவாக நிறைவேற்ற கிலாபத்தை விட்டு முடியாட்சி முறையை ஏற்க வேண்டியாயிற்று. ஏனெனில், அதிகார பீடமின்றி சமூகமொன்று நிலைக்க முடியாது. இந்நிலையில் முரண் பட்ட இரு கருத்துக்களை மக்கள் கொண்டுள்ளனர்:

1. ஒரு சாரார் எல்லா நிலைகளிலும் கிலாபத் ஆட்சி பின்பற்றப்பட வேண்டும் என்றனர். அதாவது எல்லா நிலமைகளிலும், எல்லாக் காலங்களிலும், அனைத்து மக்கள் மீதும் கிலாபத் ஆட்சி அமைப்பைப் பின்பற்றுவது கடமை என இவர்கள் கூறுகின்றனர். நியாயமான காரணங்களுக்காகவோ இல்லாமலோ எந்நிலையிலும் கிலாபத் ஆட்சி முறையை விட்டு வேறு ஒழுங்கைக் கடைப்பிடித்தல் கண்டிக்கத்தக்கது என்ற கருத்தை இவர்கள் கொண்டுள்ளனர். கவாரிஜ், முஃதஸிலா போன்ற பித்அத் சிந்தனைப் போக்குக் கொண்டோர் இக்கருத்தைக் கொண்டுள்ளனர்.

2. இன்னொரு சாரார் நேர்வழியிலமைந்த கலீபாக்களின் வழிமுறை யைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று எந்தக் கட்டுப்பாடுமின்றி பொதுவாகவே முடியாட்சி முறையை அனுமதிக்கின்றனர். இது முர்ஜி ஆக்கள் சிலரது கருத்தாகும். ஒழுக்கக் கட்டுக்கோப்புக்கு அப்பாற்பட் டோரும் அநியாயக்கார ஆட்சியாளர்களும் இப்போக்கைக் கொண்டி ருந்தனர்.

இவ்விடயத்தை ஆழ்ந்து நோக்கினால் கீழ்வரும் நிலைமைகளில் கிலாபத் ஆட்சி ஒழுங்கு மன்னராட்சியாக மாறுவதை அவதா னிக்கலாம்:

(i) நுபுவ்வத்தின் அடிப்படையிலான கிலாபத்தைக் கொண்டு செல்ல மக்களால் இயலாதிருத்தல்.

(ii) ஏற்கத் தக்க ஒரு ஆய்வு (இஜ்திஹாத்) முடிவின் காரணமாக நிகழல்.

(iii) அறிவு ரீதியாகவும், நடைமுறையிலும் கொண்டு வரச் சக்தி யிருந்து நிகழல்.

(அ) அறிவு ரீதியாகவோ நடைமுறை ரீதியாகவோ இயலாத நிலை காணப்படின், மன்னராட்சியைக் கைக்கொள்பவர் நியாயப்படுத்தப்பட லாம். ஏனைய கடமைகளும் கூட இத்தகைய நியாயத்திற்காக விடப்பட முடியும். உமர் இப்னு அப்துல் அஸீஸையும், இஸ்லாத்தைத் தழுவிய நஜ்ஜாஷி மன்னரையும் இதற்கு உதாரணமாகக் கூறலாம். நபி யூசுப் (அலை) அவர்களது நிலையும் சில பகுதிகளில் இதற்கு ஒத்ததாக அமைகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவு ரீதியாகவும் சரி, நடைமுறையிலும் சரி, கிலாபத் ஆட்சியைக் கொண்டு வரல் சாத்தியம். ஆயினும், கிலாபத் ஆட்சி முறை கடமையானது அன்று. அது ஸுன்னத்தானது. மன்னராட்சி முறை முன்பு வாழ்ந்த சமூகங்களில் அனுமதிக்கப்பட்டது போன்று எமது சமூகத்திலும் அனுமதிக்கப்படுகிறது என்பது இன்னோர் இஜ்திஹாத் முடிவு. இது அனுமதிக்கத் தக்க ஓர் ஆய்வு (இஜ்திஹாத்) முடிவே. சில இஸ்லாமிய சட்ட அறிஞர்கள் இக்கருத்தைக் கொண்டுள்ளனர் என்ற வகையில் மன்னராட்சியைக் கடைப்பிடிக்கும் ஒரு நீதியான ஆட்சியாளன் குற்றவாளியாக மாட்டான்.

இக்கருத்தை இமாம் அபூயஃலா கொண்டுள்ளார். அதாவது, கிலாபத் ஒழுங்கையும் மன்னராட்சி அமைப்பையும் இணைத்துக் கடைப்பிடித்தல் எமது ஷரீஅத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளது. மன்னர் ஆட்சிமுறை நீதியான ஆட்சி முறைக்கு மாற்றமானதல்ல என்ற கருத்தை அவர் கொண்டுள்ளார். எனினும், தூய கிலாபத் ஆட்சிமுறையைக் கடைப்பிடிப்பதே உயர்ந்தது என்பதில் கருத்து வேறுபாடில்லை. அத்தோடு மன்னர் நீதியாளனாக இருக்க வேண்டும் என்பது மன்னராட்சி முறையைக் கடைப்பிடிக்க அடிப்படையான நிபந்தனையாகும்.

நுபுவ்வத்தின் அடிப்படையிலான கிலாபத் ஆட்சிமுறை கடமையானது. அதேவேளை, அது சாத்தியமானதாகவும் இருப்பின் அதனை விடுவது பாவமாகவே அமையும். அப்பாவம் பெரும் பாவமா சிறு பாவமா என்ற கேள்வியும் இங்கு எழுகிறது. இங்கு இது பற்றி ஒரு கருத்தைக் கூறமுடியும். முடியாட்சியை மேற்கொள்வோன் இறை கட்டளைகளை நடைமுறைப்படுத்தி நன்மைகளை அதிகம் செய்து தீமைகளைத் தவிர்த்துக் கொண்டு சிறந்த முறையில் ஆட்சி செய்யும் போது அவர் செய்த பாவத்தை விடவும் நன்மைகள் கூடிவிட முடியும். ஒவ்வொரு மனிதனின் செயல்களும் அவற்றில் அதிகமாக அமையும் நன்மைகள் அல்லது தீமைகளைப் பொறுத்தே அமைந்து விடுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

08

## அரசியல் சிந்தனைகள்: பகுதி ஒன்று

முந்திய அத்தியாயத்தில் முடியாட்சி குறித்தும், அது பற்றிய அறிஞர்களின் கருத்துக்கள் குறித்தும் விளக்கினோம். நபித்துவத்தின் அடிப்படையில் அமைந்த கிலாபத்தைத் தொடர முடியாமல் போன தன் காரணமாக சமூகம் இன்று வரை முடியாட்சியிலே தொடர்ந்து இருந்து வந்துள்ளது. சமூகம் இதுவொரு நடைமுறை யதார்த்தம் என்ற வகையில் அதனை ஏற்கவும், அதனோடு உறவாடவும் நிர்ப்பந்திக்கப் பட்டது. இந்த வகையில் இன்றுவரை பல நூற்றாண்டுகளாகத் தொடர்ந்த, இவ்வரசுகள் அநியாயங்கள் பல காணப்பட்ட முடி யாட்சியின் தொடரேயாகும்.

இறைதூதர் (ஸல்) அவர்கள் ஆட்சித் தலைவன் காய்ந்த முந்திரிகைப் பழம் போன்ற தலை அமையப் பெற்ற ஹபஷி அடிமையாக இருந்தா லும் அல்லாஹ்வின் அல்குர்ஆனின் அடிப்படையில் ஆட்சியிருக்குமா யின் அதற்கு வழிப்படுமாறு கட்டளையிட்டுள்ளார்கள். அவ்வாறு ஆட்சியாளனுக்குக் கட்டுப்படல் தனக்குக் கட்டுப்படலாகும் எனவும் அவர்கள் விளக்கியுள்ளார்கள். இப்பகுதியில் ஆதாரபூர்வமான நிறைய ஹதீஸ்கள் வந்துள்ளன. "ஒரு முஸ்லிம் தான் விரும்பினும், வெறுப்பி னும் தலைமைக்குக் கட்டுப்பட வேண்டும். தீமையை ஏவினால் மட் டும் அதனை ஏற்கவோ, வழிபடவோ கூடாது."


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“நியாயமான காரணமின்றி யார் ஆட்சித் தலைமைக்குக் கட்டுப்படுவதிலிருந்து விலகி சமூகத்தை விட்டுப் பிரிந்து மரணித்து விடுகிறாரோ அவரது மரணம் ஜாஹிலிய்யத் மரணமாகிறது.”

“நாம் விருப்பத்தோடு இருக்கும் நிலையிலும், வெறுப்போடு இருக்கும் நிலையிலும், கஷ்டத்திலும், இலேசான நிலையிலும், எமக்குப் பங்கு தராது முழு அதிகாரத்தையும் தன்னிடமே வைத்துள்ள ஆட்சி அமைப்பிற்கு நாம் கட்டுப்படல் வேண்டும். ஆட்சித் தலைமைகளோடு ஆட்சிக்காக சண்டையிடக் கூடாது. எனினும், வேறு எந்தக் கருத்தையும் கொடுக்க முடியாத வகையில் ஆட்சியாளர்களிடம் நாம் தெளிவான இறை நிராகரிப்பை (குப்ரை)க் காணல் என்ற நிலை மாத்திரம் இதற்கு விதிவிலக்காகும்.” (இங்கு தரப்பட்டுள்ளவை ஹதீஸ்களே. ஆசிரியர் ஹதீஸை முழுமையாகத் தரவில்லை. அதன் கருத்தைத் தந்துள்ளார். அதற்கேற்ப மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.)

இறைதூதர் (ஸல்) அவர்கள் கூறுகிறார்கள்: “உங்கள் மீது சில தலைவர்கள் நியமிக்கப்படுவார்கள். அவர்களது செயல்கள் சிலவற்றை நீங்கள் ஏற்கக் கூடியதாகவும் இருக்கும். வேறு சிலவற்றை மறுக்க வேண்டியதாகவும் இருக்கும். யார் ஏற்க முடியாத அவற்றை வெறுக்கிறாரோ அவர் குற்றமற்றவராகிறார். யார் அவற்றை மறுத்து எதிர்க்கிறாரோ அவர் குற்றத்திலிருந்து தப்பித்துக் கொள்கிறார். ஆனால், யார் அவற்றை ஏற்றுப் பின்பற்றுகிறாரோ அவரே குற்றவாளியாகிறார். அப்போது தோழர்கள் ‘அவர்களோடு நாம் போராட வேண்டுமா?’ எனக் கேட்டார்கள். ‘இல்லை! அவர்கள் தொழுது கொண்டிருக்கும் வரையில் நீங்கள் போராட வேண்டாம்’ என இறைதூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

மேலும் இறைதூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ‘சிறந்த தலைவர்கள் யாரெனில், நீங்கள் அவர்களை விரும்புவீர்கள். அவர்கள் உங்களை விரும்புவார்கள். அவர்கள் உங்களுக்காகப் பிரார்த்தனை செய்வார்கள். நீங்களும் அவர்களுக்காகப் பிரார்த்தனை செய்வீர்கள். உங்களின் மோசமான தலைவர்கள் யாரெனில் நீங்கள் அவர்களை வெறுப்பீர்கள். அவர்களும் உங்களை வெறுப்பார்கள். நீங்கள் அவர்களைச் சபிப்பீர்கள். அவர்களும் உங்களைச் சபிப்பார்கள். அப்போது நாம் “அல்லாஹ்வின் தூதரே! அந்நிலையில் அவர்களை விட்டு நாம் ஒதுங்கிக் கொள்ள வேண்டுமா? எனக் கேட்டோம். இல்லை! அவர்கள் உங்களிடையே தொழுகையை நிலைநாட்டிக் கொண்டிருக்கும்வரை அவ்வாறு செய்ய வேண்டாம்! எனினும், ஓர் ஆட்சியாளன் நியமிக்கப்பட்டு அவன் அல்லாஹ்வுக்கு மாறு செய்தால் அவன் செய்யும் தீமையை வெறுக்கட்டும். அவனுக்கு வழிபடலை விட்டு நீங்கிக் கொள்ள வேண்டும்” என்றார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைதூதர் (ஸல்) அவர்கள் கூறுகிறார்கள்: எனக்குப் பின்னால் சில ஆட்சித் தலைவர்கள் வருவார்கள். அவர்கள் எனது நேர்வழியைப் பின்பற்ற மாட்டார்கள். எனது ஸுன்னாவை ஏற்று நடக்க மாட்டார்கள். உங்களுக்கு மத்தியில் மனித உடலும் ஷைத்தானிய உள்ளமும் கொண்ட சிலர் தோன்றுவார்கள். அப்போது ஒருவர் 'அல்லாஹ்வின் தூதரே, அந்நிலையில் நானிருந்தால் என்ன செய்யவேண்டும்' என்று கேட்டார். அதற்கு தூதர் (ஸல்) அவர்கள் 'நீ அடிக்கப்பட்டாலும், உன் செல்வம் பறிக்கப்பட்டாலும் கட்டுப்பட்டே இரு' என்றார்கள்.

இப்பகுதியோடு தொடர்பான நிறைய ஹதீஸ்கள் வந்துள்ளன. அவ்வனைத்தையும் இங்கு தருவது சாத்தியமில்லை. இத்தகைய பல ஹதீஸ்களின் காரணமாகவே அஹ்லுஸ் ஸுன்னாக்களில் மிக அதிக மானோர் அநியாயக்கார ஆட்சியாளர்களுக்கெதிராக அவர்கள் இறை நிராகரிப்பு (குப்ர்) நிலைக்கு வராதவரை ஆயுதமேந்திப் போராடல் தடுக்கப்பட்ட (ஹராமான) ஒன்றாகும் என்ற கருத்தைக் கொண்டுள்ள னர். இது ஸஹாபாக்களில் ஒரு பிரிவினரதும், பொதுவாக ஹதீஸ் துறை சார்ந்தோரதும் கருத்தாகும். இமாம் நவவி ஸஹீஹ் முஸ்லி முக்கு எழுதிய விரிவுரையில் கீழ்வருமாறு கூறுகிறார்:

ஆட்சியாளர்களோடு அவர்களது ஆட்சி குறித்து சண்டையிடாதீர் கள். அவர்களை எதிர்க்காதீர்கள். எனினும், அவர்கள் தீமை ஒன்றை செய்கிறார்கள். அது தீமையென இஸ்லாத்தின் அடிப்படைகளின் ஊடாக உங்களுக்குத் தெரிகிறது. அந்நிலையில் அதனை நீங்கள் எதிர்த்துப் பேசுங்கள். எங்கிருந்தபோதும் சத்தியத்தைச் சொல்லுங்கள். ஆனால், அவர்களுக்கெதிராகப் போர் தொடுப்பது ஹராம் என்பது முஸ்லிம்களின் ஏகோபித்த (இஜ்மாவான) முடிவாகும். அவர்கள் பெரும்பாவிகளாக, அநியாயக்காரர்களாக இருந்தபோதிலும் சரியே.

இக்கருத்தை விளக்கும் ஹதீஸ்கள் மிக அதிகமாக உள்ளன. ஆட்சி யாளன் பெரும்பாவி என்ற காரணத்தால் நீக்கப்படக் கூடாது என்பது அஹ்லுஸ் ஸுன்னாக்களின் கருத்தாகும். ஆட்சியாளனை நீக்க முற் படுகையில் அல்லது அவனுக்கெதிராகப் போராட முற்படுகையில் பெரும் குழப்ப நிலையும், சமூகப் பிளவும், பெரும் இரத்தம் சிந்தலும் நடைபெறல் தவிர்க்க முடியாததாகும். இந்நிலையில் ஆட்சியாளன் நிலைத்திருப்பதால் ஏற்படும் தீமையை விட நீக்குவதால் ஏற்படும் தீமை மிக அதிகமாக இருக்கும். பெரும் பாவத்தின் காரணமாக ஆட்சி யாளன் நீக்கப்படக் கூடாது என்பதற்கான காரணம் இதுவேயாகும். காழி இயாழ் கீழ்வருமாறு கூறுகிறார்:

நிராகரிப்பவன் -காபிர்- ஆட்சித் தலைமையை ஏற்க முடியாது என்பது இஸ்லாமிய அறிஞர்களின் ஏகோபித்த முடிவாகும். இடையில் அவன் நிராகரிப்பாளனானால் அவனை ஆட்சியிலிருந்து நீக்க வேண்டும். அவ்வாறே தொழுகையை விட்டாலும், தொழுகைக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழைப்பதை விட்டாலும் அவன் நீக்கப்பட வேண்டும். பெரும் பாலான சட்ட அறிஞர்களது கருத்துப்படி பித்அத் போக்குடைய ஆட்சி யாளர்களது நிலையும் இதுவேயாகும்.

காழி இயாழ் மேலும் விளக்குகிறார்: ஆட்சியாளன் இடையிலே இறைநிராகரிப்பாளனாகி ஷரீஅத்திலும் மாற்றங்கள் செய்தால் அல் லது பித்அத் சிந்தனை ஒன்றைக் கொண்டவனானால் அவன் தலை மைக்குத் தகுதியற்றவனாகிறான். அவனுக்குக் கட்டுப்பட வேண்டிய கடப்பாடும் சமூகத்திற்கில்லை. முஸ்லிம்கள் அவனுக்கெதிராகப் போராடி முடியுமானால் அவனை நீக்கிவிட்டு இன்னொரு நீதியான ஆட்சியாளனை நியமிக்க வேண்டும்.

இந்நிகழ்வு முஸ்லிம்களின் ஒரு பிரிவினருக்கு நிகழினும் அவர்கள் நிராகரிப்பாளனாகி விட்ட ஆட்சியாளனுக்கெதிராகப் போராடி அவனை ஆட்சியிலிருந்து அகற்றுவது கடமையாகும். பித்அத் சிந்த னைப் போக்கைக் கொண்டவனாக ஆட்சியாளன் இருப்பின் அவ னோடு போராடி அகற்ற சக்தியிருந்தால் அவ்வாறு செய்வது கடமை யாகும். சக்தி இல்லை என்பது உறுதியாயின் எதிராகப் போராடுவது கடமையல்ல. தன் மார்க்க உணர்வைக் காத்துக் கொள்ள அப்பூமியிலி ருந்து ஹிஜ்ரத் செய்வதே அப்போது ஒரு முஸ்லிம் செய்யக் கூடிய தாகும்.

ஒரு பெரும்பாவி ஆட்சித் தலைவராக நியமிக்கப்படக் கூடாது. ஆனால், ஆட்சியாளன் இடையிலே பெரும்பாவியானால் குழப்ப நிலையோ, யுத்த நிலைகளோ உருவாகாது எனின் அவனை ஆட்சியிலி ருந்து அகற்ற வேண்டும் என்றனர் சிலர். ஆனால், பெரும்பாலான அஹ்லுஸ் ஸுன்னா சட்ட அறிஞர்கள், ஹதீஸ் துறை அறிஞர்கள் பெரும்பாவம், அநியாயம், கடமைகளை நடைமுறைப்படுத்தாது விடல் என்பவற்றுக்காக ஆட்சியாளன் அகற்றப்படவோ அவனுக் கெதிராகப் போர் தொடுக்கவோ கூடாது: அவனுக்கு உபதேசம் செய்தலே எப்போதும் கடமையாகிறது என்கின்றனர். இது பற்றி பல ஹதீஸ்கள் வந்திருக்கின்றமையே இதற்கான காரணமாகும்.

காழி கூறுகிறார்: அபூபக்கர் இப்னு முஜாஹித் இது ஏகோபித்த (இஜ்மாவான) முடிவு என வாதிடுகிறார். ஹுஸைன் இப்னு அலி, இப்னு ஜுபைர், மதீனாவாசிகள் போன்றோர் உமையாக்களுக்கெதிராக கிளம்பியமையை ஆதாரம் காட்டி சிலர் இது இஜ்மாவான முடிவு என்பதனை மறுத்தனர். ஹஜ்ஜாஜுக்கு எதிராக தாபியீன்களின் ஒரு பெரும் தொகையினர் கிளர்ந்தெழுந்து போரிட்டமையையும் இன் னொரு ஆதாரமாக அவர்கள் முன்வைத்தனர். "ஆட்சியாளர்களோடு போராட வேண்டாம்" என்ற ஹதீஸுக்கு நீதியான ஆட்சியாளனையே அது குறிக்கும் என அவர்கள் விளக்கம் கூறினர். ஹஜ்ஜாஜுக்கு எதி ராகப் போராடியோர் பெரும் பாவத்திற்காகவன்றி ஷரீஅத்தின் சில


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வற்றை மாற்றியமைத்தமை, தெளிவாகத் தெரிந்த சில நிராகரிப்பு (குப்ர்) செயற்பாட்டிற்கும் எதிராகவே போராடினர் என பெரும்பாலான சட்ட அறிஞர்கள் வாதிடுகின்றனர். ஆட்சியாளனுக்கு எதிராகப் போரிடுவது பற்றிய கருத்து வேறுபாடு ஆரம்பத்தில் காணப்பட்டது. பின்னரே அவர்களுக்கெதிராகப் போராடல் கூடாது என்ற ஏகோபித்த முடிவு உருவாகியது என காழி இயாழ் இது பற்றி விளக்கம் கூறுகிறார்.(1)

போராடி ஆட்சியைக் கைப்பற்றிக் கொள்ளும் ஆட்சியாளனுக்கு அவர் தொழுகைக்கான ஜமாஅத்தையும், ஜிஹாதையும் நிலை நாட்டினால் கட்டுப்பட வேண்டும். தெளிவாக குப்ர் -இறைநிராகரிப்பு- நடவடிக்கைகள் அவனிடம் தென்படின் அவனுக்குக் கட்டுப்படல் கூடாது. முடியுமானவர்கள் அவனுக்கு எதிராகப் போராடவும் வேண்டும். (2)

குழப்ப நிலைகளின்போது போராட்டத்தைத் தவிர்த்தல் என்ற கருத்து பின்னர் சட்ட அறிஞர்கள் எடுத்த உறுதியான முடிவாக அமைந்தது. இதற்குப் பல ஹதீஸ்களும் ஆதாரமாக அமைந்தன. "அநியாயக்கார ஆட்சியாளர்களுக்கு எதிராகப் போராடல், ஆரம்ப ஸஹாபாக்கள், தாபியீன்களின் கருத்தாக இருந்தது. எனினும், அதனால் ஏற்பட்ட விளைவுகள் மிக மோசமாக அமைந்தமையால் போராட்டத்தைத் தவிர்ப்பது என்ற கருத்து நிலைப்பட்டது. மதீனாவின் 'ஹர்ரா' போராட்டம், இப்னுல் அஷ்அதின் புரட்சி என்பவற்றை ஆய்வோருக்கு இந்த உண்மை தெளிவாகும். (3)

இந்தப் புதிய ஏகோபித்த முடிவு -இஜ்மா - பிற்பட்ட காலப் பிரிவு தாபியீன்களுக்கு உரியதாகும் என்பது இதிலிருந்து தெளிவாகிறது.

இப்பகுதியில் முஸ்லிம்கள் கொண்ட கருத்து வேறுபாடு மிகப் பாரியதாகும். அதாவது அநியாயக்கார ஆட்சியாளர்களுக்கு எதிராக ஆயுதம் தாங்கிப் போராடலாமா? என்ற விடயத்தில் தோன்றிய கருத்து வேறுபாடு, கருத்து வேறுபாடு சம்பந்தமான பிரச்சினைகளில் தோன்றிய மிகப் பாரிய கருத்து வேறுபாடாகும் என அறிஞர்கள் கருதுகின்றனர். விளைவாக உயிர் அழிவும், பொருள் அழிவும், குழப்ப நிலைகள் அதிகரிக்கவும் இப்பகுதியில் கொண்ட முடிவு காரணமாக அமைந்தது. "சமூகத்தில் காணப்படும் பெரும் கருத்து வேறுபாடு ஆட்சித் தலைமை பற்றிய கருத்து வேறுபாடாகும். இஸ்லாத்தின் எக்காலப்பிரிவிலும் சரி ஆட்சித் தலைமை விடயத்தில் வாள் தூக்கிப் போராடியது போன்று வேறெந்த விடயத்திற்காகவும் போராடப்பட்டதில்லை. (4)

1. ஷரஹ் முஸ்லிம் 12/229
2. இப்னு ஹஜர் - பத்ஹுல் பாரி 7/13
3. இப்னு ஹஜர் - தஹ்தீப் அத்தர்கீப் 2/288
4. ஷஹருஸ்தானி - அல் மிலல் வன் நிஹல் 1/12


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இன்று வரை இக்கருத்து வேறுபாடு தொடர்கிறது. எனினும், ஆட்சியாளர்கள் விடும் தவறுகள் இங்கு பிரித்து நோக்கப்பட வேண்டும். அவர்கள் விடும் சில பாவங்கள் அவர்களுக்கு மட்டும் தீங்கு விளைவிக்கும் தனிப்பட்ட வகையிலான பாவங்களாக இருக்கலாம். வேறு சில இஸ்லாமிய ஒழுங்கு, சட்ட ஒழுங்குகளை விட்டு பிறழச் செய்யும் பாவங்களாகவும் இருக்க முடியும். அதாவது நம்பிக்கை, ஒழுக்கங்கள், ஷரீஅத் சட்டங்கள் என்பவற்றில் அல்லாஹ்வின் வழிகாட்டலை விட்டும் தூரக் கொணரும் செயற்பாடுகளாக இருக்க முடியும்.

இந்நிலையில் அல்லாஹ் காட்டித் தந்த வாழ்க்கை முறைக்குப் பதிலாக வேறு வாழ்க்கை முறையை நடைமுறைப்படுத்தலாகவும் அது அமையும்:அல்லாஹ்வின் ஷரீஅத்தோடு எந்த சம்பந்தமுமில்லாத சட்ட ஒழுங்குகள் முலம் சமூகத்தை ஆள்வதாகவும் அது அமைய முடியும்: மக்களை பாவச் செயல்கள், இறைமார்க்கத்திற்கு மாற்றமான கொள்கைகளின் அடிப்படையில் பயிற்றுவிப்பதாகவும் அது அமைய முடியும்: நயவஞ்சகர்களை ஆட்சியின் பக்கம் நெருக்குவதாகவும், இறை நம்பிக்கையாளர்களை ஒதுக்குவதாகவும், அது அமைய முடியும்: நிராகரிப்பாளர்களோடு நெருங்கி உறவு கொண்டாடுவதாகவும், முஸ்லிம்களை மார்க்கத்தை விட்டு அப்புறப்படுத்தும் செயற்பாடாகவும் இன்னொருவகையில் அது அமையலாம்.

இத்தகைய நிலையில் ஆட்சியாளனுக்கு எதிராகப் போராட வேண்டும், ஆட்சியாளனை அகற்ற வேண்டும் எனக் கூறுபவரை தீவிரவாதி எனக் கூற முடியாது. எனினும், சமூகத்திற்கு அப்போராட்டத்திற்கான சக்தி இருக்க வேண்டும். போராட்டத்தால் பெரும் குழப்ப நிலையொன்று உருவாகிவிடக் கூடாது. இமாமுல் ஹரமைன் அல் ஜுவைனி தமது 'கியாததுல் உமம்' என்ற நூலில் கீழ்வருமாறு கூறுகிறார்:

"ஆட்சியாளன் அநியாயம் செய்து அந்த அநியாயங்களும் வெளிப்படையானவையாக அமைந்து பரந்துபடும்போது, பேச்சின் மூலமாக அவனைத் தடுத்து நிறுத்துவதும் சாத்தியமில்லையெனின் ஆட்சி நிர்வாகத்தின் பொறுப்பில் உள்ளவர்கள் ஆட்சியாளனை அகற்றும் பொது உடன்பாட்டுக்கு வர முடியும். அவ்வாறு ஆட்சியிலிருந்து அவனை அகற்ற ஆயுதமேந்த வேண்டும், யுத்தத்தில் ஈடுபட வேண்டும் என்ற நிலை ஏற்படினும் சரியே." அவன் ஆட்சியில் இருப்பதால் ஏற்படும் தீங்கைவிட போராடுவதால் -ஆயுதம் தூக்குவதால் ஏற்படும் சீர்கேடுகள் அநியாயங்கள் அதிகரிக்காது என்றிருந்தால் மட்டுமே ஆட்சியாளனுக்கு எதிராகப் போராடல் அனுமதிக்கப்படுகிறது என்பதனைக் கவனத்திற் கொண்டு இமாம் ஜுவைனியின் கருத்து புரிந்து கொள்ளப்பட வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 09

# அரசியல் சிந்தனைகள்: பகுதி இரண்டு

ஜிஹாத் என்ற சொல்லை மக்கள் அளவு மீறிப் பயன்படுத்தத் துவங்கி விட்டார்கள் போல் தெரிகிறது. பொருத்தமில்லாத இடங்களில் எல்லாம் அச்சொல்லைப் பயன்படுத்துவதும் காணப்படுகிறது. ஷரீஅத்தில் இதன் பிரயோகம் பற்றிய தெளிவின்மையால் இப்பாரிய சொற்பிரயோகம் மிகப் பிழையாகப் பயன்படுத்தப்படுவதை காண முடிகிறது. எனவே, ஒரு முஸ்லிம் தமக்குள்ளேயும், வெளியிலும் மேற்கொள்ளும் யுத்தங்களின்போது இச்சொல்லின் உண்மையான பொருளைக் கொடுக்கும் யுத்தங்களை வேறுபடுத்திப் பிரித்து நோக்குவது மிக அவசியமானதாகும்.

இஸ்லாத்தின் அதி உயர்ந்த அந்தஸ்தைப் பெற்றது என்று சொல்லப்படும் இந்த ஜிஹாத் என்ற சொற்பிரயோகம் அப்போராட்டங்களில் எவற்றுக்குப் பொருந்தும்? எவ்வகையான போராட்டங்கள் ஜிஹாத் என்ற சொல்லுக்கு, அந்த சிறப்பைப் பெறப் பொருத்தமற்றது என்பதும் புரியப்பட வேண்டும். போராட்டங்களில் எது சட்டரீதியானது, எது சட்டரீதியற்றது என்பது பற்றிய குழப்ப நிலை இளைஞர்களுக்கு மத்தியில் காணப்படுகிறது. அது பற்றி ஓரளவு முந்தைய அத்தியாயத்தில் விளக்கினோம். இங்கு விடயம் தெளிவு பெறுவதற்காக அதனை ஓரளவு விரிவாகவே தருகிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லாஹ் தந்த வாழ்க்கை உலகில் உயர்ந்து நிற்க; முடியுமானளவு சக்தியை செலவிடுவதே ஜிஹாதாகும். அது இஸ்லாத்தின் அதி உயர் அந்தஸ்தைக் கொண்டதாகும். இஸ்லாத்தின் கொள்கைகளைக் காக்கும் வேலியும் அதுவே. முஸ்லிம் நாடுகளையும், முஸ்லிம்களையும் காப்ப தற்கான வழியும் அதுவேயாகும். ஜிஹாதை ஒரு சமூகம் விட்டு விடுமா யின் அது இழிவுபடும். எதிரிகள் முஸ்லிம்களினது நாட்டினுள்ளேயே நுழைந்து ஆதிக்கம் செலுத்தத் துவங்கி விடுவார்கள். மிக மோசமான வர்களும், இழிந்தவர்களும் முஸ்லிம்கள் மீது ஆதிக்கம் செலுத்தும் நிலையும் உருவாகும்.

இந்நிலையில் எந்தவகைப் போராட்டத்தை ஜிஹாத் என அழைக்க லாம்? அல்லாஹ்வின் பாதையில் அமைந்த போராட்டம் எனச் சொல்ல லாமா? மதம் மாறியோருக்கு எதிராகப் போராடல் தான் உண்மையான ஜிஹாதா? அல்லது புரட்சியாளர்களுக்கு எதிரான போராட்டமா? அல் லது சமூக அமைதிக்குப் பங்கம் விளைவிக்கும் வகையில் வழிப்பறிக் கொள்ளைகள், பொதுச் சொத்துக்களுக்கு நாசம் விளைவித்தல் போன்ற அழிவு வேலைகளில் ஈடுபடுவோருக்கு எதிராகப் போராடு வதா? அல்லது தனிப்பட்ட சொத்துக்களைக் காக்கவும், மானத்தைப் பாதுகாத்துக் கொள்ளவும் நடைபெறும் போராட்டம் ஜிஹாதா? அல்லது வழி பிறழ்ந்த ஆட்சியாளனுக்கு எதிராகப் போராடுவதா? அல்லது இஸ்லாமிய அரசொன்றை நிலைநாட்டப் போராடுவதை ஜிஹாத் என அழைக்கலாமா? அவ்வாறில்லையாயின் முஸ்லிம் நாடு களை ஒற்றுமைப்படுத்த துவங்கப்படும் போராட்டத்தை ஜிஹாத் என அழைக்கலாமா? இவற்றில் எமது காலப் பிரிவில் மிக முக்கியமாகக் காணப்படும் போராட்டத்தை மட்டும் நோக்குவோம். அதுதான் இஸ் லாமிய அரசொன்றை உருவாக்க ஆயுதத்தை உபயோகித்தல், போராடு தல் என்பதாகும்.

இக்கருத்துப் போக்கைக் கொண்டவர்கள் வன்முறைப் புரட்சி மூலம் சமூக மாற்றமொன்றை உருவாக்க முயல்கின்றனர். பிரசாரத்திற்கான, கருத்து வெளியீட்டிற்கான வழிகள் எதுவும் காணப்படாமையால் சமூக மாற்றத்திற்கான படிமுறை ஒழுங்குகள் எதனையும் கடைப்பிடிக்காது வன்முறைப் புரட்சியே வழி என இவர்கள் காண்கின்றனர்.

இவர்களில் ஒரு சாரார் தாம் பலவீனக் கட்டத்தில் இருப்பதனால் சமூகத்திலிருந்து ஒதுங்கி ஹிஜ்ரத் செய்து வாழ்ந்து பின்னர் சக்திகளைத் திரட்டிக் கொண்டதன் பின்னர் தம் கருத்தை ஏற்காதோர் கையிலிருந்து அதிகாரத்தைக் கைப்பற்ற வன்முறை மோதலொன்றை ஏற்படுத்த வேண்டும் எனக் கருதுகின்றனர். இன்னொரு சாரார் தற்போதுள்ள சீர்கெட்ட அரசியல் ஒழுங்கை அழிக்க வேண்டும், இறை நிராகரிப்பின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசை ஒழிக்க வேண்டும். அதற்கு ஆயுத மோதலே சரியான வழி எனக் கருது கின்றனர். பாராளுமன்ற ஜனநாயகம், கட்சி ஒழுங்கின் ஊடான அரசியற் போராட்டம் என்பவற்றை இவர்கள் பிழையான வழிமுறை எனக் கருதுகின்றனர். ஏனெனில், அவைஇறை நிராகரிப்பின் அரச மைப்புக்கு உதவுவதாகவும், அல்லாஹ் அனுமதிக்காத வகையில் சட்டமியற்றுவதில் பங்கு கொள்ளுவதாகவும் முடியும் என இவர்கள் வாதிக்கின்றனர்.

இவ்வரசுகளின் சட்டங்கள் மூலம் ஆட்சி புரியும் அரசும் ஆட்சி யாளர்களும் இறை நிராகரிப்புக்கு உட்பட்டு விட்டார்கள். இவர்கள் தொழுதாலும், நோன்பு பிடித்தாலும் முஸ்லிம் என்பதற்கு இவர் களிடம் பெயர் மட்டுமே இருக்கின்றது என இவர்கள் கூறுகின் றனர். இறை நிராகரிப்பினரின்சட்டங்கள் ஓங்கியுள்ள இவர்களது நாடும் அங்கு முஸ்லிம்கள் பெரும்பான்மையாக இருந்தாலும் தார் அல் குப்ர் -இறை நிராகரிப்பு நாடாகிவிட்டது என இவர்கள் வாதிடுகின்றனர்.

எனவே, நாட்டில் வாழும் முஸ்லிம்களோடு சமாதானமாகப் போனாலும் அரசுக்கும் அதன் வளங்களுக்கும் எதிராகப் போர் தொடுக்க வேண்டும். அவர்களுக்குப் பாதுகாப்பாக நிற்கும் பொலிஸ், இராணுவத்திற்கு எதிராகவும் போர் தொடுத்தல் தவிர்க்க முடியாது என்கின்றனர். முஸ்லிம் பொது மக்கள் இம்மோசமான நிலையை மாற்ற நடக்கும் இப்போராட்டத்திற்கு உதவுதல் அவசியமாகும். இந்த வகையில் இஸ்லாமிய அரசொன்றை உருவாக்கல் யுத்தத்தின் மூலமே சாத்தியமாகிறது. எனவே, போராட்டம் கடமையாகிறது. ஒரு கட மையை நிலைநாட்டல் பிரிதோன்றில் தங்கியிருக்குமானால் அந்தப் பிரிதொன்றைச் செய்தல் கடமை என்பது இஸ்லாமிய சட்ட விதியாகும் என விளக்கம் தருகின்றனர்.

இவர்களின் கண்ணோட்டத்தில் முஸ்லிம்களின் கருத்தைப் பெறா மல் அவர்களது தெரிவு இன்றி முஸ்லிம் தலைமையைப் பறித்துக் கொண்ட இந்த ஆட்சித் தலைவர்களே எதிரிகளாவர். அவர்களுக் கெதிராகப் போராடல் பர்ளு ஐன் -தனிப்பட்ட ஒவ்வொருவரதும் கடமையாகிறது. மேலும், இவ்வாட்சியாளர்கள் தெளிவான இறை நிராகரிப்பின் வட்டத்தினுள்ளும் நுழைந்து விட்டனர் என இவர்கள் கருதுகின்றனர். எனவே, இவர்களுக்கு முஸ்லிம்கள் கட்டுப்படக் கூடாது எனவும் அவர்கள் வாதிடுகின்றனர்.

இஸ்லாமிய உலகினதும், முஸ்லிம் அல்லாத உலகினதும் கவ னத்தை ஈர்த்துள்ள இளைஞர்களின் சக்தியை அழித்துக் கொண்டிருக் கின்ற இத்தீவிர இயக்கங்களின் சுருக்கமான சிந்தனைகளே இவை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாகும். முஸ்லிம் பொதுமக்கள் இந்த இயக்கங்களுக்கு சிலபோது ஆதரவாகப் பேசுகிறார்கள் எனின் நிலவும் சமூகத்தின் மோசமான நிலைபற்றி கருத்து வெளியிடும் ஒரு வழிமுறையே அதுவாகும். ஆனால், உண்மையில் இத்தகைய இயக்கங்களின் இந்த வழிமுறை யால் சமூகத்தில் குழப்ப நிலை உருவாகியமையும், பொருளாதார அழிவும் சிறை வாழ்வை பெருந்தொகையானோர் அனுபவிக்கின்றமை யும், நிறைய உயிர் அழிவு நேர்ந்தமையும் மிகத் தெளிவான விடயங்க ளாகும்.

இந்நிலையில் இவர்கள் இருவகையாகப் பிரிந்தனர். நிகழ்ந்த தவறுகளை ஒரு சாரார் நியாயப்படுத்துகின்றனர். இன்னொரு சாரார், போராட்டத்திற்கான காரணங்களையும், வழிமுறைகளையும் ஆரா யாது, ஷரீஅத்தின் கண்ணோட்டத்தில் இது ஜிஹாதாகக் கொள்ளப் படுமா என்பதையும் நோக்காது, எல்லோரோடும் உணர்ச்சிவசப்பட்டு வன்முறையில் நாம் ஏன் குதித்து விட்டோம் என தம்மைத் தாமே விமர்சித்துக் கொள்ளுகின்றனர்.

சமூக மாற்றத்திற்கான செயற்பாட்டில் மிகுந்த தீவிரத்துடன் இறங்குவோருக்கு இமாம் மௌதூதி தரும் கீழ்வரும் கருத்துக்களை முன்வைக்கிறோம்:

"கண்ணியத்திற்குரிய சகோதரர்களே! இறுதியில் உங்களுக்கு நான் ஓர் உபதேசம் செய்ய விரும்புகிறேன். சமூக நிலைகளை மாற்ற வன் முறைகளைக் கையாள்வதை, ஆயுதந் தூக்குவதைத் தவிர்த்துக் கொள் ளுங்கள். ஏனெனில், இவ்வழிமுறை அவசர செயற்பாடுகளில் ஒரு வகையாகும். அது நல்ல விளைவைக் கொடுக்காது. மிகக் குறுகிய வழியில் இலக்கை அடைய முயல்வதாகவும் இது அமையும். சீரான புரட்சி எதுவெனில், உங்களது கொள்கைகளைப் பகிரங்கமாகப் பரப்பு தலும் மக்களது அறிவையும் உள்ளங்களையும் மிக விரிந்த அமைப்பில் சீர்திருத்த முயலுவதும் ஆகும். ஆனால், நீங்கள் அவசரப்பட்டு வன்முறை யைக் கையாண்டு அதன் மூலம் ஓரளவு வெற்றி கண்டபோதும் அது கதவால் நுழைந்த காற்று ஜன்னலால் வெளியேறுவது போன்ற தொரு நிலையையே ஏற்படுத்தும். இஸ்லாமியப் பிரசாரத்தில் ஈடுபடும் எல் லோருக்கும் நான் சொல்ல விரும்பும் உபதேசம் இதுவேயாகும்." (1)

மாற்றத்தை நோக்காகக் கொண்டு பாடுபடுவோர் உணர வேண்டிய ஓர் உண்மை உள்ளது. அதாவது, அல்லாஹ்; அபூபக்கர், உமர் போன்ற ஆட்சியாளர்களை அவர்களைப் போன்ற தரத்தில் உள்ள குடிமக்கள்

1. இன்றைய முஸ்லிம் இளைஞர்களின் கடமை பக்,26


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீதே ஆட்சியாளர்களாக ஆக்குவான். எப்போதும் செயல்களுக் கேற்பவே கூலியும் அமைந்திருக்கும். நீங்கள் எவ்வாறிருக்கிறீர்களோ அவ்வாறுதான் உங்கள் மீதான ஆட்சியாளர்களும் அமைவர். மக்கள் தமது பொது வாழ்விலும் தனிப்பட்ட வாழ்விலும் மார்க்கத்தை விட்டும் மார்க்க ஒழுக்கங்களை விட்டும் தூரமாக இருக்கிறார்கள்; அவர்களிடையே பொறாமை, குரோதம், உலக ஆசை, பிறர் பொருளை அநியாய வழியில் அனுபவித்தல், நன்மையை ஏவாமை தீமையைத் தடுக்காமை போன்ற தீமைகள் அனைத்தும் நிலவுகின்றன எனக் கொண் டால் இத்தகைய மனிதர்கள் ஒரு சிறந்த மனிதரால் ஆளப்படுவது பொருத்தமானதுதானா? அவ்வாறு ஆளப்படும் தகுதி இத்தகைய மனிதர்களுக்கு உண்டா? அல்லாஹ் இப்படி ஒரு நிலையை உருவாக்கு வானா? ஆனால் சமூக மாற்றத்திற்கான அல்லாஹ்வின் விதி இதனை ஏற்காது. இந்த அடிப்படை உண்மை மீறப்படும்போது அது தோல்வி யாகவே முடியும்.

நன்கு ஒழுங்குபடுத்தப்பட்ட இராணுவம், பெரும் செல்வம், சூழ்ச்சியும் சாணக்கியமும் மிக்க தலைமைத்துவம் என்பவற்றைக் கொண்டும் அத்தோடு பொதுமக்கள் பெருந்தொகையின் ஆதரவால் ஸ்திர நிலையடைந்திருந்த அந்தப் பலமிக்க அரசுகளை அகற்றுமளவு அந்த இயக்கங்கள் பலம் பெற்றவையாக இருக்கவில்லை. எனவே தான் அந்த இயக்கங்கள் தோல்வி மேல் தோல்வியடைந்தன: பெரும் துன்பங்களையும் இழிவையும் சந்தித்தன. இந்த இயக்கங்கள் ஏதாவது நன்மை செய்தனவா? என்ற கேள்வி எழுப்பப்படுமிடத்து, "ஆம், அநி யாயத்தையும் அட்டூழியங்களையும் எதிர்க்கும், நன்மையை ஏவித் தீமையைத் தடுக்கும் முயற்சியில் சில மனிதர்களை தொடர்ந்து அளித்து, தியாகம் புரியவும் செய்ததன் மூலம் இந்த சமூகத்தின் உயி ரோட்டத்தை அது காத்திருக்கிறது" என சிலர் பதில் கூறலாம். உண்மை தான், எனினும், இந்த இயக்கங்கள் பாதை தவறிவிட்டன என்பதுவும் உண்மையே, இந்த இயக்கங்கள் அவற்றின் அனுகூலங்கள், பிரதி கூலங்களோடு முஸ்லிம்களது வரலாற்றில் ஒரு பகுதியாகி விட்டன. அவற்றை ஆய்வதன் மூலம் பல பயன்களைப் பெற்றுக் கொள்ள முடியும். (2)

2. ஹரகத் அந்நப்ஸ் அல் ஸகிய்யா பக்-149



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10
# அரசியல் சிந்தனைகள்: பகுதி மூன்று

முஸ்லிம்களின் நிலத்தையும், மானத்தையும் காக்கப் போராடுதல் கடமை என்பதில் சந்தேகமில்லை. உலகப் பற்றில் மூழ்கி அக் கடமையை விட்டவர் அதற்கு எந்த நியாயத்தையும் காட்ட முடியாது. அல்லாஹ்வின் எதிரிகளிடமிருந்து முஸ்லிம்களின் நாடுகளை விடு தலை செய்தல் கடமையாகும். அவ்வாறு விடுதலை செய்ய ஒவ் வொரு முஸ்லிமும் ஜிஹாதில் சேர்வது அவனது புனிதக் கடமை, தனிப் பட்ட கடமை -பர்ளு ஐன்- ஆகும். எம்மிடம் போதுமானளவு சக்தி இருந்தாலும் இல்லாவிட்டாலும் முஸ்லிம் நாடுகளின் சுதந்திரத்திற் காகப் போராடல் கடமையாகிறது. நிலத்தை அபகரித்துக் கொண்ட எதிரிக்கு எதிராக ஆயுதந் தாங்கிப் போராடல் அடிப்படையில் சட்ட ரீதியான செயற்பாடாகும். அல்லாஹ்வின் பாதையில் அமையும் ஜிஹாத் ஆகும். அந்நிலையில் யார் தூய எண்ணத்துடன் போராடு கிறாரோ அவருக்கு முஜாஹித்களின் நன்மை கிடைக்கும், ஷஹீது களின் கூலியை அவர் பெறுவார்.

ஆனால், இதே வழிமுறையை, பல்வேறு விடயங்கள் ஒன்றோ டொன்று கலந்து குழம்புகின்ற இஸ்லாமிய நாட்டினுள் கையாள்வது பெரும் கருத்து வேறுபாட்டுக்கு வழிகோலுகிறது. இஸ்லாமிய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடுகள் இஸ்லாமிய கொள்கைகள் மூலமே ஆட்சி செய்யப்பட்டு வந்தன. பின்னர் இஸ்லாம் அல்லாத கொள்கைகள் மூலம் ஆளப்படும் நிலைக்கு அவை மாறத் துவங்கின. அந்நாடுகளின் நிலைமைகள் படிப் படியாக மாற்றமுற்றன. இஸ்லாமிய ஆட்சியமைப்பு அகற்றப்படும் காலப் பிரிவில் அங்கு வாழ்ந்த முஸ்லிம் தலைமுறையினரிடத்தில் தெளிவான இறைநிராகரிப்பு தோன்றலாயிற்று. இஸ்லாத்திற்கு முற்றி லும் மாற்றமான கொள்கைகளையும், சட்ட ஒழுங்குகளையும் இந்நாடு களில் கடைப்பிடிக்கப்படலாயின. இந்தத் தெளிவான இறைநிரா கரிப்பு -குப்ர்- நிலையில் பல தலைமுறைகள் பிறந்து வளரலாயின. இந்நிலையில் அது சாதாரண ஒரு ஒழுங்காக பழக்கப்பட்டு போயிற்று. இவ்வாறு படிப்படியாக இந்த நிலைமை வாழும் யதார்த்தமாக மாறி விட்டது.

இந்த நீண்ட பல ஆண்டுகளில் இத்தெளிவான இறை நிராகரிப்பு பூமியில் வேரூன்றிப் போய்விட்டது. இந்நிலையில் இறைதூதர் (ஸல்) அவர்கள் இஸ்லாமிய சமூகமொன்றை உருவாக்கவும் இஸ்லாமிய அரசொன்றை நிறுவவும் என்ன வழிமுறையைக் கையாண்டார்களோ அதே வழிமுறையைக் கையாண்டால் மட்டுமே இத்தீமையை நீக்கு வது சாத்தியம் என்ற நிலைமை காணப்படுகிறது.

இதற்கு மாற்றமான கருத்துக் கொண்டோர் கீழ்வருமாறு வாதிப்பர்: மார்க்கத்தினதும், நாட்டினதும் துரோகிகள் என்ற வகையில் அத்தகைய நபர்களை படுகொலை செய்வதும், களைபிடுங்குவதும், ஆயுதம் சுமந்து அவ்வரசுகளோடு போராடுவதுமே இஸ்லாத்தை விட்டு வில கிச் சென்று இறை நிராகரிப்பில் -குப்ரில்- வீழ்ந்து விட்ட அரசுகளை ஒழித்து இஸ்லாமிய அரசை நிறுவ வழியாகும். ஏனெனில், இஸ்லா மிய நாடுகளில் காலனித்துவ ஆதிக்கம் நிலைக்கக் காரணம் இந்த ஆட்சியாளர்களே. இந்த வகையில் காலனித்துவத்தை ஆரம்பத்தில் ஒழிக்க முயலல் பயன் எதையும் தராது. அது நேரத்தை வீணாக்குவதாக முடியும். அல்லாஹ்வின் ஷரீஅத்தை நிலைநாட்டல் என்ற எமது அடிப்படைப் பிரச்சினையில் நாம் கவனம் செலுத்த வேண்டும். அது குப்ர் தலைமைத்துவங்கள் அகற்றப்படுவதன் ஊடாகவே சாத்திய மாகும்.

இவர்களுக்கு நாம் சொல்லும் பதில் இதுதான்: மேற்கூறப்பட்ட சூழ்நிலைகளில் சமூகத்தில் பிறந்து வளர்ந்து விட்ட இச்சீர்கேடுகளை சீர்திருத்த படுகொலைகளோ, வன்முறைகளோ பயன்தராது. அது முஸ் லிம் சமூகத்தை உருவாக்க உழைத்தல், முஸ்லிம் சமூகத்தை வழி பிறழச் செய்ய அரசோ அல்லது வேறு யாருமோ எடுக்கும் முயற்சி களிலிருந்து அதனைப் பாதுகாத்தல் என்பதன் ஊடாகவே சாத்திய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாகும். அம்முயற்சி நன்மையை ஏவித் தீமையைத் தடுத்தல், பொறுப்பு தாரர்களை விசாரணைக்கு உட்படுத்தல், பொதுசன அபிப்பிராயத்தைத் திரட்டுவதன் ஊடாக அரசையும் பொறுப்புதாரர்களையும், இஸ்லாமிய ஷரீஅத்தை கண்ணியப்படுத்தவும் நடைமுறைப்படுத்தவும் செய்தல் என்பவற்றின் ஊடாகவே நடைபெற வேண்டும். இத்தகைய முயற்சி களே நிகழ்ந்திருக்கும் வழிபிறழ்வையும், சீர்கேடுகளையும் சீர்திருத்து வதற்கான சரியான வழிமுறையாகும். அல்லாஹ் கூறுகிறான்: "அவர் தங்கள் எதிரியின் சமூகத்தைச் சேர்ந்த ஒருவனை தாக்க விரும்பியபோது அவன் கூறினான். மூஸாவே, நீர் நேற்று ஒருவனைக் கொலை செய்தது போல இன்று என்னையும் கொலை செய்யலாமென்று கருதுகிறீரோ? நீர் இந்த நாட்டில் அடக்குமுறையாளராக இருக்க நினைக்கின்றீரே தவிர சீர்திருத்தவாதியாய் இருக்க விரும்பவில்லை(ஸூரா கஸஸ் 19).

இந்த வசனத்தில் பாவிக்கப்பட்டுள்ள அடக்குமுறையாளர் என்ற பொருள் தரும் 'ஜப்பார்' என்ற சொல்லுக்கு குர்ஆன் விரிவுரையாளர்கள் பொருள் கூறும்போது: "விளைவுகளை நோக்காது, மிகச் சிறந்த முறையில் தீமையைத் தடுக்க முயலாது அநியாயமான முறையில் தான் விரும்பிய போக்கில் தாக்குதலிலும் கொலையிலும் ஈடுபடுபவர் எனக் கூறுகின்றனர்.

அல்குர்ஆன் கீழ்வருமாறு கூறுகிறது:

"நகரின் கோடியிலிருந்து ஒரு மனிதர் ஓடிவந்து கூறினார்: மூஸாவே, தலைவர்கள் உம்மைக் கொலை செய்வதற்குத் திட்டம் தீட்டிக் கொண்டிருக்கிறார்கள். எனவே, நீர் இங்கிருந்து வெளியேறிவிடும். நான் உமக்கு தூய்மையாகவே இதனைச் சொல்கிறேன்." (இச்செய்தியைக் கேட்டதும்) மூஸா அஞ்சியவராய் முழு எச்சரிக்கையோடு வெளியேறிவிட்டார். இறைவா, என்னை அநியாயக்காரர்களிடமிருந்து காப்பாற்றுவாயாக எனவும் மூஸா இறைஞ்சினார் (ஸூரா கஸஸ் 20,21).

இறைநிராகரிப்பாளர்களின் தலைவர்கள் சிலரைக் கொலை செய்ய இறைதூதர் (ஸல்) அவர்கள் சிலரை அனுப்பி வைத்தார்கள் என வரும் சம்பவங்கள் அனைத்தும் இஸ்லாமிய அரசை நிறுவிக் கொண்டிருக்கும், அதனைப் பலப்படுத்திக் கொண்டிருக்கும் சந்தர்ப்பங்களில் நிகழ்ந்தவைதான். அச்செயற்பாடுகள் அனைத்தும் இஸ்லாத்திற்கும் அதன் அரசுக்கும் எதிராக யுத்த முயற்சிகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்த இறைநிராகரிப்புத் தலைமைகளுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட யுத்த நடவடிக்கைகள் என்றே கொள்ளப்பட வேண்டும். ஒருபோதும் இத்தகைய நடவடிக்கைகள் அரசுகள் தோன்ற முன்னரான பிரசார காலப் பிரிவில் நிகழவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்ரீஜ் "இம்தாஉல் அஸ்மா" என்ற தமது நூலில் கீழ்வருமாறு எழுது கிறார்: சுப்யான் இப்னு காலித் அல் ஹுதலி அரனாவிலும் அதனைச் சூழவுள்ள பகுதிகளிலும் சிலரோடு வந்திறங்கி யுத்தத்திற்காக ஆள் திரட்டுவதாகவும், அவரோடு அரபுக் கோத்திரங்களைச் சேர்ந்த பலர் சேர்ந்து வருவதாகவும் இறைதூதர் (ஸல்) அவர்கள் கேள்வியுற்றார் கள். அப்போது அப்துல்லாஹ் இப்னு அனீஸை மட்டும் சுப்யான் இப்னு காலிதைக் கொலை செய்ய அனுப்பி வைத்தார்கள்.

பின்னர் அப்துல்லாஹ் இப்னு அதீகின் தலைமையில் ஒரு சிறு படைப்பிரிவு அபூ ராபிஃ இப்னு அபூ ஸலாம் இப்னு அபூ ஹகீக் என் பாரை நோக்கி அனுப்பப்பட்டு அவர் கொல்லப்பட்டார். அதற்கான காரணம் அபூ ராபிஃ அத்பான் கோத்திரத்தையும் அதனைச் சூழ இருந்த அரபுக் கோத்திரங்களையும் திரட்டினார். இறைதூதர் (ஸல்) அவர் களோடு போராட பெருந்தொகை செல்வத்தையும் அவர்களுக்கு வழங்கினார்.

அபூ சுப்யானைக் கொலை செய்ய அம்ர் இப்னு உமைய்யா அல் ளமரி என்பாரை அனுப்பியமையும், முஹம்மத் இப்னு மஸ்லமாவை, கஃபு இப்னுல் அஷ்ரபைக் கொலை செய்ய அனுப்பியதுவும் இவ் வகை சார்ந்ததுதான்.

இத்தகைய அனைத்து நடவடிக்கைகளுக்குமான காரணம் எதிரி களுக்குப் பாரிய இழப்பை ஏற்படுத்தி முஸ்லிம்களுடன் அவர்கள் போராடுவதைத் தவிர்ப்பதாகும்.

ஆனால், இவ்வழிமுறையை ஆட்சியாளர்களிடையே பீதியை உண்டுபண்ண வேண்டும் என்ற நோக்கில் பாவித்தால் இளைஞர்கள் மேலும், கொடுமைப்படுத்தப்படலுக்கும், பெருந்தொகையானோர் சிறை செய்யப்படலுக்கும் இஸ்லாத்திற்காக உழைக்கும் எல்லா வகையான உழைப்புக்களும் சுற்றி வளைக்கப்படும் நிலைக்கும் அது இட்டுச் செல்லும். போதாமைக்கு பல துறைகளிலும் போராடுவார்கள் என சமூகம் எதிர்பார்க்கின்ற இளைஞர்கள் பலர் கொல்லப்படலும் இதன் விளைவாக நடக்க முடியும்.

இஸ்லாமிய பிரசாரப் பாதையில் தடையென அவர்கள் நினைக்கும் எத்தனை பேரை ஒழித்துக் கட்டினாலும் அவர்களை விட மோசமான வர்கள் பலர் அதே இடத்திற்கு வரும் சந்தர்ப்பமிருக்கிறது. இந்நிலை யில் இத்தகைய செயற்பாட்டால் சமூகம் பெரும் அழிவுகளையும் நாசங்களையும் விளைவாகப் பெறும். எம்மைச் சூழ நடந்து கொண் டிருக்கும் எத்தனையோ நிகழ்வு கள் இதற்குச் சான்றாக அமைகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிர்த் தியாகம் செய்தல் குறிப்பிட்ட சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கு ஏற்ப அமைய வேண்டும். பொருத்தமான சந்தர்ப்பங்களில் அமையும் போதுதான் அது வீரச் செயலாகிறது; வீர மரணமாகவும் அமைகிறது. அப்படியின்றி நிலைமைகள் சந்தர்ப்பங்களை நோக்காது உயிர் அழிவை ஏற்படுத்துவது இஸ்லாத்திற்குச் செய்யும் அநியாயமாக அமைந்து விட முடியும். ஜிஹாதின் வரம்புகளை மீறிய செயற்பாடாக வும் அமைய முடியும்.

எனினும் இத்தகைய வன்முறைப் போராட்டங்களில் ஈடுபடும் இளைஞர்களை நாம் அனுதாபத்தோடு பார்க்க வேண்டியுள்ளது. ஏனெனில், அவர்கள் பக்கமும் சில நியாயங்கள் உள்ளன. இஸ்லாமிய நாடுகளில் இஸ்லாமிய ஷரீஅத் ஆளவில்லை. அது அப்புறப்படுத்தப் பட்டு அந்நிய சட்டங்கள் அவ்விடத்தை ஆக்கிரமித்துள்ளன. இந்நிலை யில் இஸ்லாம் அதன் சொந்த நாட்டிலேயே அந்நியமாகப் போய் விட்டுள்ளது. போதாக்குறையாக பொருளாதாரம், அரசியல், கல்வி, ஒழுக்கம், நடத்தை போன்றவற்றில் அல்லாஹ்வின் எதிரிகளுக்கு அடிமைப்பட்டுள்ள நிலை காணப்படுகின்றது. மேற்கத்திய மயமாத லுக்கும், மதச்சார்பற்ற சமூக நிலைக்கும் இஸ்லாமிய நாடுகள் உட் படுத்தப்பட்டு வருகின்றன. அங்கு தொடர்ந்தேர்ச்சியான அரசியல், இராணுவத் தோல்விகளை அவதானிக்க முடிகிறது. முஸ்லிம் நாடு களின் இறைமையைப் பாதிக்குமளவுக்கு மேற்கத்திய நாடுகளின் கை அங்கு ஓங்கியுள்ளது.

எதிர்ப்புறத்தில் இஸ்லாமியப் வாதிகளுக்கு எதிராக வன்முறை பிரயோகிக்கப்படுகிறது. அவர்கள் அடக்கி ஒடுக்கப்படுகிறார்கள். சித்திரவதைக்கு உட்படுத்தப்படுகிறார்கள். அவர்கள் மீது பொய்யான குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படுகின்றன. அவர்களது சுதந்திரம் பறிக்கப் படுகிறது. ஆனால், மதசார்பற்ற சிந்தனைப் போக்குடையோருக்கு எல்லா வகையிலும் கதவு திறந்து விடப்பட்டுள்ளது. அத்தோடு கடும் பொருளாதார வீழ்ச்சியும், நெருக்கடியும் சேர்ந்து இந்நாடுகளில் நிலவுகிறது. இந்நிலை மக்களை வெறுப்புக்கும் விரக்திக்கும் இட்டுச் செல்கிறது. இது வன்முறைக்கு வழிகோலுகிறது. சமூகம் ஜாஹிலிய் யத்திலும் இறை நிராகரிப்பிலும் வீழ்ந்துள்ளது என்ற கருத்துப் போக்குக் கும் இவர்களை இந்நிலை கொண்டு செல்கிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 11
# களவு போன ஜிஹாத்

இந்த சமூகத்தின் மீது இஸ்லாம் கொண்டுள்ள அசல் தன்மையை யாரும் மறுக்க மாட்டார்கள். முஸ்லிம் சமூகங்கள் இஸ்லாத்தின் மீது கொண்டுள்ள பற்று பற்றியும் யாரும் கேள்வி எழுப்ப முயல மாட்டார்கள். இஸ்லாத்துடன் அச்சமூகங்கள் கொண்டுள்ள ஆழ்ந்த தொடர்பும் அப்படியானது. எனினும், முஸ்லிம் சமூகத்தில் காணப்படும் கவனயீனமும் அவதானமற்ற தன்மையும்தான் முஸ்லிம் சமூகத்தை இந்நிலைக்குக் கொண்டு வந்து சேர்த்துள்ளது. வெறுமனே ஒரு கொள்கையில் கொண்டுள்ள நம்பிக்கையும், அக்கொள்கைக்குக் கொடுக்கும் உயர்ந்த கண்ணியமும் மாத்திரம் தவறிழைப்பதிலிருந்தும், அக்கொள்கையிலிருந்து பிறழ்வதிலிருந்தும், ஏமாற்றப்படுவதிலிருந்தும் அக்கொள்கையைச் சார்ந்தோரைப் பாதுகாக்கப் போதுமானவையல்ல.

இச்சமூகத்தில் நேர்ந்த தவறுகள் பல, தவறி வீழ்ந்த இடங்கள், அவற்றில் பெற்ற அனுபவங்கள் பல. எனினும், அந்த நிகழ்வுகளால் பெறவேண்டிய நிறையப் படிப்பினைகளை, பாடங்களை முஸ்லிம் சமூகம் பெற்றதாகத் தெரியவில்லை. ஆழ்ந்த உபதேசமோ, எச்சரிக்கும் உரைகளோ இச்சமூகத்தில் அதிகமானோரைப் பொறுத்தவரையில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரயோசனமளித்ததாகத் தெரியவில்லை. அல்குர்ஆன், ஸுன்னாவின் பாரம்பரிய ஆதாரங்களையோ, பகுத்தறிவு ரீதியான ஆதாரங்களையோ அவர்கள் நோக்குவதாகத் தெரியவில்லை. முஸ்லிம்கள் மீது பெருந் துன்பங்கள், அழிவுகள் நிகழவே செய்கிறது. ஆனால், முஸ்லிம் சமூகம் தனது விளையாட்டுப் போக்கிலேயே உள்ளது.

"ஒரு வருடத்தில் ஒருமுறை அல்லது இருமுறை அவர்கள் சோத னைக்கு உட்படுத்தப்படுகிறார்கள். ஆனாலும் அவர்கள் பாவமன்னிப் புக் கேட்கிறார்களுமில்லை. உணர்வு பெறுகிறார்களுமில்லை" *(ஸூறா தவ்பா: 126).*

ஒரு பெரும் பொய்யன் -தஜ்ஜால்- அவர்களுக்கு மத்தியில் தோன் றும்போதெல்லாம் அவனைப் பின்பற்றுகிறார்கள். அல்குர்ஆனிலும் ஸுன்னாவிலும் அவன் மார்க்கப் புனரமைப்பாளன் -முஜத்தித்- என அவர்களைத் திருப்தியுறச் செய்யும் ஆதாரங்களைத் தேடுகிறார்கள். முஸ்லிம் சமூகத்தின் மீது நிகழ்ந்து விட்ட கைசேத நிகழ்வுகள்தான் எத்தனை! அயோக்கியர்கள் இச்சமூகத்தை எத்தனை முறை வஞ்சித்துள் ளார்கள்? நயவஞ்சகர்கள் எத்தனை முறை ஏமாற்றியுள்ளார்கள். ?!

"அவர்கள்தான் எதிரிகள்! அவர்கள் பற்றி எச்சரிக்கையாயிரு! அல் லாஹ் அவர்களை அழிக்கட்டும், அவர்கள் எங்கே திரும்பிச் செல்கி றார்கள்" *(அல் முனாபிகூன்: 4).*

இந்த சமூகம் இராணுவ, கலாசாரக் காலனித்துவங்களிலிருந்து உறுதிமிக்க இஸ்லாமியப் போராட்டத்தின் ஊடாகவே வெற்றி பெற் றது. அப்போராட்டம் பல பகுதிகளாக அமைந்திருந்தது. அதில் ஒரு முக்கிய பகுதி ஜிஹாத் ஆகும். அரபு, இஸ்லாமிய விடுதலைப் போராட் டங்கள் தூய்மைமிக்க இஸ்லாமிய அறிஞர்களின் தலைமையில்தான் நடந்தன என்பதை நாம் அங்கு காண முடிகிறது. நெப்போலியனின் படை எகிப்து மண்ணில் கால் வைத்தபோது எகிப்திய சமூகத்தை விடுதலை செய்தவர்கள் யார்? ஷெய்க் ஷர்காவி, ஷெய்க் முஹம்மத் ஸாதாத், ஷெய்க் முஹம்மத் கரீம், பிரான்சிய தளபதி கிளைவருக்கு எதிரான புரட்சியை நடாத்தியவரும், போராட்டத்தின் உயிரோட்டமாக நின்றவருமான ஷெய்க் உமர் முகர்ரம் போன்ற இஸ்லாமிய அறிஞர் களே அப்போராட்டத்தை நினைவில் கொண்டுவரும் பொழுது முன்ன ணியில் வருகிறார்கள்.

ஒராபி பாஷாவின் புரட்சியும் இஸ்லாமியப் போக்கைக் கொண்ட தாகும். ஷெய்க் முஹம்மத் அப்துஹு, ஷெய்க் அப்துல்லாஹ் நதீம் ஆகியோரே அவரது ஆலோசகர்களாக இருந்தனர். அவ்வாறே ஆங்கி லேயருக்கு எதிரான தேசியப் போராட்டத்தை முஸ்தபா கமால்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துவக்கிவிட்டார். எனினும் புரட்சிகளின் விளைவு யார் கையில் போய்ச் சேர்ந்தது? கம்யூனிசம் பேசிய கள்வர்கள், இரத்த வெறிபிடித்தவர்கள், பெரும் அயோக்கியர்கள் கையில்தான் அது போய்ச் சேர்ந்தது. அவ்வாறே பலஸ்தீனில் போராடி, சுயஸ் கால்வாய் யுத்தத்தில் போராடி நாட்டைக் காக்க முயன்ற அந்த வுழூச் செய்த தூய கைகளிடமிருந்து போராட்டத்தின் விளைவுகளை அவர்கள் பறித்துக் கொண்டனர். அவர்களோ சிறைக்கூடங்களில் கொடுமைப்படுத்தப்பட்டார்கள். தொடர்ந்து முஸ்லிம்களின் மீது தோல்விகளும், நாசங்களுமே விளைந்தன.

அல்ஜீரியாவில் அமீர் அப்துல் காதிர், பஷீர் அல்-இப்றாஹீம், ஒரு இஸ்லாமியத் தலைமுறையையே உருவாக்கிய ஷெய்க் அப்துல் ஹமீத் இப்னு பாதீஸ் போன்ற அறிஞர்களே புரட்சிகளைப் போராட்டங்களைக் கொண்டு சென்றனர். ஷெய்க் அப்துல் ஹமீத் இப்னு பாதீஸின் கோஷம் கீழ்வரும் கவிதையாக அமைந்திருந்தது:

அல்ஜீரியக் குடிமக்கள் முஸ்லிம்கள்
அரேபிய மொழி சார்ந்தவர்கள்
அதன் இந்த அசல் நிலை விட்டு
அவர்கள் விலகினர், அல்லது இறந்தனர்
என யாரும் சொன்னால்
அது பொய்.
அச்சமூகத்தை கலந்து கரைக்க
யாரும் விரும்பினால்
சாத்தியமற்ற ஒன்றை அவர் தேடுகிறார்.
யாரும் எமது உறவை வேண்டின்
கண்ணியத்தோடு திறந்த மனதோடு
அதனை ஏற்கிறோம்.
ஆனால், எம் இழிவை யாரும் விரும்பினால்
அது அவருக்கு இழிவாக, அழிவாக முடியும்.
நான் இறந்தால் எனது ஒரே குரல்...
அல்ஜீரியா வாழ்க! அரபிகள் வாழ்க!!

என்றே இருக்கும்.

அல்லாஹ் அந்த அறிஞர்களுக்கு அருள்பாலிக்கட்டும். அவர்கள் பிரான்சிய மயப்பட்டு அழிந்து போக இருந்த அல்ஜீரிய வரலாற்றுப் பக்கத்தை மூடிவிட்டார்கள். எனினும், 130 வருட கால காலனித்துவ ஆட்சியின் பின்னர் விடுதலை பெற்ற அல்ஜீரியாவின் அந்தப் போராட்டத்தின் விளைவை யார் பறித்துக் கொண்டார்கள்? அந்த தரித்திரம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிடித்த போலித் தலைவர்களே அதனை அபகரித்துக் கொண்டார்கள். எனினும், அல்ஜீரியாவுடைய எரிந்து கொண்டிருக்கும் சமூக நிலை, அந்த மார்க்கம் திரும்பவும் தன்னிடத்தைப் பெற முயல்கிறது என்பதையே காட்டுகிறது.

அல்ஜீரியாவின் அப்போராளிகளை -முஜாஹிதுகளை- நினைவு கூறும்போது மொரோக்கோவின் அப்துல் கரீம் அல் கத்தாபியையும், தூனிசியாவின் அப்துல் அஸீஸ் தஆலாபியையும், சூடானின் முஹம் மத் அஹ்மத் அல் மஹ்தியையும், சோமாலியாவின் முஹம்மத் அப் துல்லாஹ் ஹஸன் அல் முல்லாவையும், லிபியாவின் உமர் முக்தாரை யும், சிரியாவின் பத்ருத்தீன் ஹஸனி, அலி அல்-தகர், யூசுல் அல் அலமா என்போரையும், பலஸ்தீனின் இஸ்ஸுத்தீன் கஸ்ஸாம், அப்துல் காதிர் ஹுஸைனியையும் நாம் ஞாபகப்படுத்தாது விட முடியாது. பத்ஹ் இயக் கத்தின் ஸ்தாபகர்கள் இஸ்லாமியவாதிகளாக இருந்தார்கள். அவ்வியக் கத்தின் போக்கும் இஸ்லாமியப் போக்காகவே அமைந்திருந்தது. பின்னரே சந்தர்ப்பவாதிகள் அதன் தலைமையைக் கள வாடினர்.

இவ்வாறு படிப்படியாக நயவஞ்சகர்கள் இடம்பிடித்தார்கள். படை கள் மீது ஆதிக்கம் செலுத்தலானார்கள். இரகசிய இயக்கங்களைத் துவங்கினார்கள். சிறுபான்மையினரும் பல்வேறு மதங்களும் காணப் பட்டமையை பயன்படுத்திக் கொண்டார்கள். இறுதியில் ஆட்சியையே பிடித்தார்கள். மதச்சார்பற்ற சிந்தனைப் போக்கும், அரபு தேசியவாத சிந்தனையும், சோஷலிசப் போக்கும், கொண்டவர்கள் அனைத்து நாடுகள் மீதும் பூரண ஆதிக்கம் செலுத்தலானார்கள்.

இஸ்லாமியப் போக்குக் கொண்டோரும், இஸ்லாமிய சிந்தனை யைச் சுமந்தோரும் தவிர்க்க முடியாத இந்த யதார்த்த நிலைக்குப் பணிந்தார்கள். இஸ்லாத் திற்காக உழைப்போர் நெருக்குதலுக்கு உட்பட்டார்கள். அவர்களில் ஒரு கணிசமான தொகையினர் இந்நாடு களை விட்டு வெளியேறினார்கள். தமது உயிரைக் காத்துக் கொள்ள சில அரபு நாடுகளிலும் ஐரோப்பிய நாடுகளிலும் அவர்கள் சிதறினார்கள். இஸ்லாமிய சிந்தனையினதும், கலைகளினதும் கோட்டைகளாகக் கணிக்கப்பட்ட இந்நாடுகள் இந்தவகையில் பல உயர்ந்த அறிஞர்களை எழுத்தாளர்களை, இலக்கிய கர்த்தாக்களை, சிறந்த இராணுவத் தளபதி களை இழந்தது. நாட்டின் பெரும் அரசியற் தலைவர்களும், பெரும் மார்க்க அறிஞர்களும் சிறைப்பட்டார்கள். கர்வம் பிடித்த இளைஞர் கூட்டமொன்றின் கையில் நாட்டின் ஆதிக்கம் சென்றது.

விளைவாக பொருளாதாரம் சீரழிந்தது; நாட்டு நிலைமைகள் வீழ்ச்சி கண்டன. கடன்கள் பாரியளவு கூடின. மதச்சார்பின்மையும் நாஸ்திக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மும் சிந்தனைகளை ஆளத் துவங்கின. எத்தகைய வரலாறும், தனித் தன்மையுமற்றதொரு பரம்பரை தோன்றியது.

இவ்வாறு முஸ்லிம்களுடைய ஜிஹாதின் விளைவுகள் களவாடப் பட்டமைக்கு அவர்களின் மேற்போக்கான, ஆழமற்ற பார்வையும், எதிரிகளின் திட்டங்கள் பற்றிய அறிவின்மையும், நயவஞ்சகர்களின் சூழ்ச்சிகள் பற்றிய கவனயீனமும் காரணங்கள் என நான் கருதுகிறேன்.

போராட்டத்தின் போது ஒற்றுமையாக நின்ற அவர்கள் பின்னர் அதன் விளைவுகளைப் பகிரும்போது கருத்து வேறுபாடு கொண்டமை யும் இதற்குக் காரணம் எனலாம். இன்னொரு வகையில் சொன்னால் இந்த இஸ்லாமியவாதிகள் போராடுவதில் திறமைசாலிகள். மிகுந்த சகிப்புத் தன்மையோடு அவர்கள் போராடுவர். ஆனால், போர் முகாம் களிலிருந்து நாட்டை ஆள, நிர்வகிக்க மாளிகைகளுக்கும், அலுவலகங் களுக்கும் போனால் அவர்கள் நிலைமை மாறிப் போய்விடுகிறது. கருத்து வேறுபாடு கொண்டு விடுகிறார்கள்.

அவர்களில் பலர் அரசியல் தூரநோக்கு அற்றவர்களாகவும் எதிரி களின் தந்திரோபாயங்கள், சூழ்ச்சிகள் பற்றி அறிவற்றவர்களாகவும் உள்ளனர். இவையும் இஸ்லாமியவாதிகளின் கைகளிலிருந்து போராட் டத்தின் விளைவுகள் பறிக்கப்பட்டமைக்கு இன்னும் சில காரணங்கள் எனலாம்.

அத்தோடு இஸ்லாமிய இயக்கம் இஸ்லாமிய சமூகத்தை அழுத்து கின்ற பொருளாதார, சமூகப் பிரச்சினைகளை விட்டும் தனிமைப்பட்டு உள்ளமையும், முஸ்லிம் சமூகத்தை காக்கும், பாதுகாப்பை உறுதிப் படுத்தும் இராணுவ சக்தியை உருவாக்குவதில் இஸ்லாமிய இயக்கத் திற்கு எப்பங்கும் இல்லாமற் போனமையும் இந்நிலைக்கு முக்கியமான காரணங்கள் எனலாம். அல்குர்ஆன் முஸ்லிம் சமூகப் பாதுகாப்பு குறித்துக் கீழ்வருமாறு கூறுகிறது:

"உங்கள் ஆயுதங்கள், பொருட்கள் குறித்து நீங்கள் கவனயீனமாக இருந்து விட்டால் உங்கள் மீது ஒரேயடியாகத் திடீர் தாக்குதல் நடாத்த நிராகரிப்போர் தக்க தருணத்தை ஆவலுடன் எதிர்பார்த்திருக்கிறார்கள்" *(ஸூரா அந்நிஸா: 102).*ளள

அத்தோடு குறிப்பிட்ட சந்தர்ப்பங்களில் குறிப்பிட்ட நிலைப்பாடு களை எடுக்க, குறிப்பிட்ட வகையில் இயங்க ஆய்வுகளும், போதிய தகவல்களும் அவசியம். இயக்கங்களிடம் இவை காணப்படவில்லை. எனவே, நிகழ்வுகள் நடந்ததன் பிறகே அவற்றை அவர்கள் உணர் கிறார்கள். பின்னர் நிதானமற்ற, எதிர்விளைவுகள் இயக்கங்களிடமி ருந்து தோன்றுகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் இஸ்லாமிய இயக்கம் இஸ்லாமிய சக்திகளை விட்டும் தனிமைப்பட்டே காணப்படுகின்றது. அந்த சக்திகள் தனிநபர்களாக இருக்கலாம், அல்லது நிறுவனங்களாக இருக்கலாம். அச்சக்திகள் தமக்கிடையே போராடிக் கொள்வதைத் தவிர்த்து ஒரே திட்டத்தின் கீழ் ஒரே போக்கில் அவற்றை இயக்க வைக்கும் சக்தியை இயக்கம் கொண்டிருக்கவில்லை.

சமூகத்திற்கு இஸ்லாமிய இயக்கம் தேவை. இஸ்லாமிய இயக்கத்திற்கு சமூகம் தேவை. ஏனெனில், இயக்கம் சமூகத்தின் கர்ப்பவறையிலிருந்தே பிறந்தது. எனவே, தீவிர சிந்தனைகளாலும், தனிமைப்படுத்தும் கருத்துக்களாலும் சமூக சக்திகளைத் துண்டாடி சிதற விடுதல் இயக்கத்திற்குத் தீங்கையும், தோல்வியையுமே கொண்டு வரும்.

இந்த வகையில் இயக்கம் சமூகத்தின் எல்லா பிரிவினரோடும் கருத்துப் பரிமாறலை நடாத்த வேண்டும். அப்போதுதான் மக்கள் இயக்கத்தின் சிந்தனையை அறிவர். அதன் இயல்பையும், இலக்குகளையும் உணர்ந்து கொள்வர். அத்தோடு இந்த நிலையில்தான் இயக்கத்திற்கு எதிராக எதிரிகளோடு ஒத்துழைக்காமலும் இருப்பார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 12

# இஸ்லாமியவாதிகள் அரசில் பங்கு கொள்ளல்

நவீன இஸ்லாமிய இயக்கம் இஸ்லாம் அல்லாத ஆட்சியமைப்பில் பங்கு கொள்ளல் என்ற பிரச்சினை மிக முக்கியமானதொரு பிரச்சினையாகும். தஃவாக் களத்தில் இயங்கும் பலரது சிந்தனையைக் குழப்புகின்றதொரு பிரச்சினையாக அது உள்ளது. நவீன எமது சிந்தனையாளர்கள் சிலர் இது பற்றி எழுதியுள்ளார்கள். எனினும், அது போதுமானளவு ஆய்வு செய்யப்படவில்லை என்றே கருத வேண்டியுள்ளது. எனவேதான் தஃவாக் களத்தில் ஈடுபடும் பலர் எந்த இறுதி முடிவுக்கும் வர முடியாது அது பற்றிய வாதப் பிரதிவாதங்களிலேயே உள்ளனர். இது தனிநபர்களோடு மட்டும் நின்று விடவில்லை. இஸ்லாமிய இயக்கங்களின் பல்வேறு நிலைப்பாடுகளாகவும் அது மாறியுள்ளது.

அது மட்டுமல்ல, ஒரே இயக்கம் இது குறித்து பல நிலைப்பாடுகளையும், முடிவுகளையும் எடுத்துள்ளமையும் அவதானிக்கத்தக்கது. சில போது அரசில் பங்கு கொள்வது ஆகும் என்ற முடிவுக்கு வந்து அரசில் பங்கு கொள்ள முன்வந்துள்ளது. வேறு சிலபோது பங்கு கொள்ளல் கூடாது என்ற முடிவுக்கு வந்து பின்வாங்கியும் உள்ளது. இது இஸ்லாமியக் களத்தில் உழைப்போரிடையே ஒருவகைக் குழப்ப நிலையையும் உருவாக்கி விட்டுள்ளது. இந்த வகையில் இங்கு மேற்கொள்ளப்படும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த ஆய்வு சிலவேளை நவீன இஸ்லாமிய இயக்கத்தின் தேவையைப் பூர்த்தி செய்யக் கூடும். இஸ்லாமிய வாழ்வை மீண்டும் கொண்டுவரப் பாடுபடுவோர் எதிர்கொள்ளும் பல பிரச்சினைகளில் ஒனறுக்கான தெளிவை இது கொடுக்கக் கூடும்.

இன்றைய இஸ்லாமிய உலகின் அதிகமான சமூகங்களில் நிலவுவது இஸ்லாம் அல்லாத ஆட்சி அமைப்புக்களேயாகும். அத்தகைய ஆட்சி அமைப்புகளில் இஸ்லாமியவாதிகள் பங்குகொள்ளலாமா என்ற கேள்வி ஓர் அடிப்படை உண்மையோடு சம்பந்தப்பட்ட கிளைப் பிரச்சினையாகும். இஸ்லாமிய ஆட்சி உருவாகுவதற்கான, ஷரீஅத்தை நடைமுறையில் கொண்டு வருவதற்கான வழியாக அது கொள்ளப்படு கிறது என்பதுவே அதுவாகும். ஷரீஅத்தை நடைமுறைக்குக் கொண்டு வருவதற்கான ஓர் உத்தி என்ற அடிப்படை உண்மையை விட்டுத் தூர நின்று இப்பிரச்சினைக்கு தீர்வு சொல்லல் சாத்தியமில்லை. இந்த அடிப்படை உண்மையைக் கவனத்திற் கொள்ளாது இப்பிரச்சினை பற்றிப் பேசியமையே அதிகமான குழப்ப நிலைக்குக் காரணமாகிறது. ஏனெனில் முதலில் இவ்விடயமே கவனத்திற் கொள்ளப்பட வேண் டும். விரைவாகவே அதற்கான தீர்வும் கொடுக்கப்பட வேண்டும்.

## இஸ்லாமிய ஆட்சி உருவாகியமைக்கான வரலாற்று வடிவம்

அரபு தீபகற்பத்தை அல்லாஹ் இஸ்லாமிய தூதுக்கான ஆரம்பத் தளமாகக் கொண்டான். "அல்லாஹ் தனது தூதை எங்கே ஆக்க வேண்டுமென்பதை நன்கு அறிந்தவனாக உள்ளான்."

ஆழ்ந்து நோக்கினால் இந்தத் தெரிவில் பெரியதொரு இறை ஞானத்தை காண முடியும். அக்காலப் பிரிவில் ரோம், பாரசீகம் என்ற இருபெரும் வல்லரசுகளின் மிக அண்மையில் அரபுத் தீபகற்பம் இருந்த போதிலும் அவ்விரு வல்லரசுகளின் ஆதிக்கத்திற்கு அது உட்பட்டி ருக்கவில்லை.

இந்நிலையில் மக்காவில் தஃவா ஆரம்பமாகியது. குறைஷிகள் இந்த மார்க்கத்தால் தங்கள் நலன்கள் பாதிக்கப்படும் எனக் கண்ட தாலும், அவர்களது செல்வாக்குக்கு அது அச்சுறுத்தலாக இருந்தமை யாலும் அவர்களுக்கிருந்த செல்வாக்கால் தஃவா படிப்படியாக ஸ்தம் பித நிலையை அடைந்தது. இறைதூதர் (ஸல்) அவர்கள் மக்காவுக்கு வெளியே தஃவாவுக்குப் பாதுகாப்பான, அதன் மத்திய நிலையமாக அமையக் கூடிய ஒரு தளத்தைத் தேடினார்கள். இந்த வகையில் பல கோத்திரங்களையும் போய் சந்தித்து எடுத்துச் சொல்லி உதவி வேண்டி னார்கள். அவர்களது தோழர்கள் ஹபஷாவுக்கு ஹிஜ்ரத் செய்தார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயிபுக்கு இறைதூதர் சென்றார்கள். இறுதியில் முதலாம் அகபா உடன்படிக்கையின் பின்னர் தமது எதிர்பார்ப்பை நிறைவு செய்யும் தளமாகமதீனாவைக் கண்டார்கள்.

இஸ்லாமிய தஃவாவை எதிர்த்து நிற்கத் தக்க வகையில் வரையறுத்த, ஒற்றுமையானதொரு நிலைப்பாட்டை எடுக்க மதீனாவில் ஒரு பலமான மத்திய அரசமைப்பு இருக்கவில்லை. சமபலம் கொண்ட அவ்ஸ், கஸ்ரஜ் என்ற இரு அரபுக் கோத்திரங்களும் பல்வேறு யூதக் கோத்திரங்களுமே அங்கு காணப்பட்டன. முதலாம் அகபா உடன்படிக்கைக்கு இரண்டு வருடங்கள் கழிய முன்னரே மதீனா வாசிகளுக்கு மத்தியில் இஸ்லாம் வேகமாகப் பரவியது. அங்கு இறைதூதர் (ஸல்) அவர்கள் தமக்கு முன்னால் பாதை சீராக சிக்கலின்றி இருந்ததைக் கண்டார்கள். மதீனாவை அவர்கள் போய் அடைந்ததும் அங்கு அவர்களுக்கு வாசல்கள் திறந்து வைக்கப்பட்டிருந்தன. அவர்களது பாதையில் தடையாக நிற்கத்தக்க சக்தி எதுவும் அங்கிருக்கவில்லை.

அங்கு பள்ளியை அமைத்ததன் பின்னர் மதீனாவை ஆள்வதற்கான ஒரு அரசியல் யாப்பை இறைதூதர் (ஸல்) அவர்கள் ஆக்கினார்கள். அது வரலாற்றில் மதீனா சாசனம் என அழைக்கப்படுகிறது. அதில் மதீனாவில் முஸ்லிம்களுக்கும் யூதர்களுக்கும் இடையிலான தொடர்புகளை நுணுக்கமாக வரையறுத்தார்கள். இவ்வாறு மத்திய அரசொன்று இல்லாத அச்சூழ்நிலையில் முதல் இஸ்லாமிய அரசு எழுந்தது.

மேலே தந்த விளக்கங்களிலிருந்து கீழ்வரும் உண்மைகளை நாம் பெறலாம்:

1. இறைதூதர் (ஸல்) அவர்கள் மக்களுக்கு அழைப்பு விடுத்தார்கள். முஸ்லிம்களைக் கொண்டதொரு பலமான அடித்தளமொன்றை அதன் மூலம் படிப்படியாக உருவாக்கிக் கொண்டார்கள்.

2. ஜாஹிலிய்யத் இறைதூதர் (ஸல்) அவர்களிடம் ஆட்சியைத் தருவதாகக் கூறியபோது அதனை அவர்கள் ஏற்கவில்லை. ஏனெனில், அப்போது ஜாஹிலிய்யத்தால் நியமிக்கப்பட்ட தலைவராகவே அவர்கள் இருப்பார்கள். ஷரீஅத்தை நடைமுறைப்படுத்த பலமான ஈமானிய அடித்தளமொன்று இல்லாதபோது அவர்கள் மீது எந்த செல்வாக்கும் இறை தூதர் (ஸல்) அவர்களுக்கு செலுத்த முடியாது. "லாஇலாஹ இல்லல்லாஹ்" என்பதை ஏற்காததிலிருந்து ஷரீஆவை நடைமுறைப்படுத்த அவர்கள் அனுமதிக்கப் போவதில்லை என்பதும் தெளிவாகிறது. ஏனெனில், அவர்கள் அக்கலிமா தங்களது அனைத்து வகை செல்வாக்கையும் அழிக்கக் கூடியது எனக் கருதினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. ஜாஹிலிய்யத்தோடு ஒப்பிடும்போது தனது ஆதரவாளர்கள் மிகக் குறைவு என்பதாலும், போதுமானளவு ஆயுத பலம் இல்லாமையாலும் இன்னும் பல காரணங்களாலும் இறைதூதர் (ஸல்) அவர்கள் ஜாஹிலிய் யத்தோடு ஓர் ஆயுதப் போராட்டத்தை ஆரம்பிக்கவில்லை.

4. ஜாஹிலிய்யத்தோடு நேரடியாக மோதுவதை விட ஹிஜ்ரத்தே சிறந்தது என இறைதூதர் (ஸல்) அவர்கள் கண்டார்கள். தன் தோழர் களோடு நிலைப்பட்டுத் தங்க ஒரு புகலிடம் தேடலே பொருத்தமானது எனக் கண்டார்கள். இந்த வகையில் ஜாஹிலிய்யத்தோடு மோத சரி யான சக்தியை உருவாக்கிக் கொள்ள ஹிஜ்ரத் எனும் கொள்கையை இறைதூதர் (ஸல்) அவர்கள் கடைப்பிடித்தார்கள்.

5. ஹிஜ்ரத் மூலம் இறைதூதர் (ஸல்) அவர்கள் எதனை எதிர்பார்த்தார் களோ அது நிறைவேறியது. அம்முறை மூலம் இஸ்லாம் ஆட்சியை அமைத்தது.

இதுதான் இஸ்லாம் ஆட்சி ஏறிய வரலாற்றுத் தோற்றம். இந்த இஸ் லாமிய ஆட்சி பிற்காலத்தில் அதன் இலட்சிய வடிவத்திலோ அல்லது அவ்வடிவத்தை விட்டுத் தாழ்ந்த நிலையிலோ தொடர்ந்தது. இறுதி யில் பெரும் சர்வதேசச் சதி கிலாபத்தை வீழ்த்தியது. முஸ்லிம் சமூகத் தைத் துண்டாடிப் பிரித்தது. பிராந்திய ரீதியான சிறு சிறு தேசிய அரசு களை அது உருவாக்கிவிட்டது. அத்தோடு இஸ்லாத்திற்கு எதிரான கட்சிகளையும், சிந்தனைப் போக்குகளையும் அது உருவாக்கி விட்டது. அவை இஸ்லாத்திற்கென எஞ்சியிருக்கும் சக்திமையங்களை ஒழிப்ப தில் பாடுபட்டு வருகின்றன.

## இஸ்லாமிய இயக்கம் அழைக்கிறது

கிலாபத் அகற்றப்பட்டதன் எதிர்விளைவாக இஸ்லாமிய இயக்கம் தோன்றி இஸ்லாத்திடம் மீண்டு வருமாறும், இஸ்லாமிய ஷரீஆவை நடைமுறைப்படுத்துமாறும் கோரி பிரசாரத்தில் ஈடுபடலாயிற்று. முஸ்லிம்களுக்கு மத்தியில் இஸ்லாம் பற்றிய நம்பிக்கையை மீண்டும் கொண்டு வர இஸ்லாமிய இயக்கத்திற்கு முடிந்தது. இஸ்லாத்திற்கு எதிரான கலாசாரப் படையெடுப்பை தோற்கடிக்கவும் அதற்கு முடிந் தது. அது வெளியிட்ட பத்திரிகைகளும், சஞ்சிகைகளும், மக்களுக்கு நற்பலன் கொடுக்க, அது உருவாக்கிய திட்டங்களும் இதனை சாதித் தன. இஸ்லாத்தின் பக்கம் அழைக்கும் இயக்கத்தையும் இஸ்லாம் பற்றிய பாரிய மக்கள் கருத்தொன்றையும் உருவாக்கியமை இஸ்லா மியவாதிகள் சாதித்த சாதனைகளில் பாரியதாகும். எனினும், இஸ் லாத்தை அரசில் கொண்டு சேர்ப்பதில் இன்று வரை அது தடுமாற்ற


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையிலேயே உள்ளது. அது பற்றிய தெளிவானதொரு தோற்றம் அதனிடம் இருப்பதாகவும் தெரியவில்லை. அல்லது வரையப்பட்ட தெளிவானதொரு திட்டம் இருப்பதாகவும் தெரியவில்லை. அரசியலைப் பொறுத்தவரையில் ஒரு காலை முன்னெடுப்பதாகவும், இன்னொரு காலை பின்வைப்பதாகவுமே இஸ்லாமிய இயக்கத்தின் நிலை உள்ளது. அதன் அரசியல் நிலைப்பாடுகள் சூழ இருக்கும் ஜாஹிலிய்யத்தின் அழுத்தங்களுக்கு எதிர் நிலைப்பாடாகவே உள்ளது. தொடர்ந்து அது விரட்டப்பட்டுக் கொண்டிருப்பதாலும், அதன் மீது பிரயோகிக்கப்படும் கடும் அழுத்தங்களாலும் தனது அரசியல் இலக்குகளை தெளிவான கால கட்டங்களாக அமைந்த திட்டங்களாகவும், அதற்கான தெளிவான வழிமுறைகளாகவும் முன்வைக்க அதனால் முடியவில்லை.

## இஸ்லாமிய இயக்கம் போராடும் சூழல்

ஆட்சியை அடையும் வழிமுறை பற்றிய தோற்றம் தெளிவின்மையே இஸ்லாமிய இயக்கம் பற்றிய முக்கிய விடயமாகும். நாம் ஏற்கனவே விளக்கிக் காட்டிய அரசை அடையப் பின்பற்றிய வரலாற்று வழிமுறைகள் இப்போது சாத்தியமானதாகத் தோன்றவில்லை. ஏனெனில், இஸ்லாமிய பிரதேசங்கள் பலமான மத்திய அரசுகளுக்குப் பணிகின்றன. அதற்கு சர்வதேச சக்திகள் பல உதவியாக உள்ளன. அச் சர்வதேச சக்திகள் பாரிய பௌதீக, மானசீக சக்திகளைக் கொண்டுள்ளன. அவை அனைத்து இடங்களிலும் இஸ்லாமியவாதிகளின் நடமாட்டங்களை அவதானிக்கின்றன.

அச்சக்திகள் இஸ்லாத்தினை சுற்றி வளைக்கின்றன. அவற்றின் முயற்சிகள் வெற்றி பெறாதவாறும் பார்த்துக் கொள்ளுகின்றன. எனவே, குறிப்பிட்ட அந்த வரலாற்று வடிவத்தில் போராட்டத்தைக் கொண்டு செல்லல் தற்போதைய சூழ்நிலையில் -குறைந்தது கிட்டிய எதிர்காலத்தில் - சாத்தியமில்லை என்பது தெளிவு. அத்தோடு ஒரு புறத்தில் அன்றைய தஃவாவுக்கும், தற்போதைய இஸ்லாமிய இயக்க செயற்பாட்டுக்குமிடையேயும்: இன்னொரு புறத்தில் அன்றைய ஜாஹிலிய்யத்திற்கும் நவீன ஜாஹிலியத்திற்கும் இடையேயும் பல வேறுபாடுகள் காணப்படுகின்றன.

ஆரம்ப கால தஃவா அதன் இயக்கக் கட்டமைப்பைப் பொறுத்தவரையில் அனைத்து முஸ்லிம்களையும் அடக்கியிருந்தது. இன்றைய இயக்கம் தனது கட்டமைப்பினுள் முஸ்லிம்களின் ஒரு பகுதியினரையே கொண்டுள்ளது. எனவே, ஆரம்ப கால தஃவா அதுவே இஸ்லாமிய ஜமாஅத்தாக -சமூகமாக - இருந்தது. இன்றைய இஸ்லாமிய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயக்கம் முழு இஸ்லாமிய சமூகத்தின் ஒரு ஜமாஅத்தாக -ஒரு கட்டமைப்பாக - மட்டும் உள்ளது. இந்நிலையில் ஆரம்பகால தஃவா ஜாஹிலிய்யத்தை மட்டும் எதிர்கொள்ளும் வகையில் இயங்கியது. ஆனால், நவீன இஸ்லாமிய இயக்கம் நவீன ஜாஹிலிய்யத்தை எதிர் கொள்வதோடு, தனது தலைமைக்குப் பணியாத முஸ்லிம்களை எதிர் கொள்ளும் சிக்கலான நிலைக்கும் தள்ளப்பட்டுள்ளது. இத்தகைய சூழ்நிலை மூலம் ஜாஹிலிய்ய அமைப்புக்கள் போராட்டத்தில் சாதக நிலைகளைப் பெற்றுக் கொள்ளல் சாத்தியம்.

இஸ்லாமிய இயக்கம் முஸ்லிம்களில் ஒரு பிரிவினராக மட்டும் இருப்பதன் காரணமாக ஆட்சிக்கு இஸ்லாத்தைக் கொண்டு வர வேண்டுமாயின் அப்போராட்டத்தில் விரும்பியோ, விரும்பாமலோ தன்னை கட்சிப் போக்கில் வைத்துக் கொள்ள வேண்டிய நிலை உள்ளது.

இஸ்லாமிய இயக்கத்தால் ஓர் இராணுவப் புரட்சியை செய்வதும் சாத்தியமற்றதாக உள்ளது. ஏனெனில், இராணுவ பலத்தை இஸ்லாமிய நாடுகளின் இராணுவத்திலே பெறும் பாதைகள் அனைத்தும் இஸ் லாமியவாதிகளுக்கு முன்னே மூடப்பட்டுள்ளன. அதிகமான முஸ்லிம் நாடுகளில் நிலவும் சர்வாதிகாரப் போக்கின் நிழலில் மக்கள் ஆயுதப் போராட்டமொன்றை நடாத்துவதும் சாத்தியமற்றுள்ளது. ஏனெனில், அதற்கு நுணுக்கமான பயிற்சியும், கட்டமைப்பும் தேவை. இந்த அரசமைப்புகளின் மூலம் அதனை சாத்தியப்படுத்தல் மிகக் கடினமான விடயம். அவ்வாறு மக்கள் ஆயுதப் போராட்டமொன்றை செய்ய முயலும்போது அதிகமாகப் பகிரங்கப்படுத்தப்பட்டு விடுவது மிகவும் சாத்தியம். அவ்வாறு பகிரங்கப்படுத்தப்படல் முஸ்லிம்கள் மீதே பெரும் தீங்காக வந்து விழுவதுண்டு.

இஸ்லாமிய இயக்கத்திற்கு இனி எஞ்சி இருப்பது மூன்றாவது பாதை ஒன்றே. அதுவே அரசியற் கட்சிப் போராட்ட ஒழுங்கு. இப் போராட்ட ஒழுங்கு இஸ்லாம் அல்லாத ஆட்சியமைப்பில் பங்கு கொள்ளும். நிலைக்கு இட்டுச் செல்லும். இஸ்லாமிய நாடுகளில் எங்கெல்லாம் ஜனநாயகம் நிலவுகிறதோ அங்கு இஸ்லாம் எழுச்சி பெறுகிறது, இஸ்லாமிய இயக்கமும் பலம் பெறுகிறது. இஸ்லாத் திற்கு எதிராக நிற்கும் கட்சிகளுக்கு கடும் போட்டியாகவும் அமைகிறது என்பதை நாட்டின் உள்ளேயும் வெளியேயும் இஸ்லாத்தின் எதிரிகள் அவதானித்தார்கள். எனவே, பாராளுமன்ற ஜனநாயகத்திற்குப் பதிலாக சர்வாதிகார ஆட்சியை நிலவ விடுவதில் அவர்கள் கவனமாக இருக்கி றார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவீன முஸ்லிம்கள் வாழும் இச்சீர்கெட்ட நிலையே இஸ்லாமிய இயக்கத்திற்கும் அதன் சிந்தனையாளர்களுக்கும் முன்னே உள்ள யதார்த்தமாகும். அவர்களில் சிலர் ஆரம்ப இஸ்லாமிய அரசின் வடிவத்தை நோக்கி, அதனை ஒப்பு நோக்கி அது உருவாவதற்கு சென்ற பாதையை நவீன இஸ்லாமிய இயக்கமும் பின்பற்ற வேண்டும் எனக் கருதுகிறார்கள். இவ்வாறு அவர்கள் கருதுவதன் மூலம் ஆரம்ப கால இஸ்லாமிய தஃவா சூழலுக்கும் நவீன இஸ்லாமிய இயக்கம் எதிர் கொள்ளும் சூழலுக்குமிடையே நாம் ஏற்கனவே சுட்டிக் காட்டிய பல வேறுபாடுகளை கவனத்திற் கொள்ளுகிறார்களில்லை.

இன்னொரு புறத்தில் அவர்கள் வரையறுத்த அதிகாரம் மட்டும் கொண்டிருந்த அக்கால ஜாஹிலிய்யத்திற்கும், எல்லா இடங்களிலும் தனது அதிகாரத்தை விரித்துப் பரத்தி இருக்கின்ற தற்கால ஜாஹிலிய்யத் திற்கும் இடையிலான வேறுபாட்டையும் கவனத்தில் எடுக்கவில்லை. அதேவேளை நவீன அறிவியற் புரட்சி ஏற்படுத்தி விட்டுள்ள பெரும் மாற்றங்களையும் அவர்கள் மறந்து விடுகின்றனர். இந்த அறிவியற் புரட்சி நவீன ஜாஹிலிய்யத்திற்கும் ஆரம்ப ஜாஹிலிய்யத்திற்கும் இடையே மிகப் பாரிய வேறுபாட்டை ஏற்படுத்தியுள்ளது என்பதை அவர்கள் காணத் தவறுகின்றனர். ஆரம்ப கால அதே வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டும் எனக் கூறும் அவர்கள் இந்த பாரிய வேறுபாடு களுக்கும், மாற்றங்களுக்கும் மத்தியில் அது எவ்வாறு சாத்தியமாகும் என்பதை விளங்கத் தவறிவிடுகின்றனர்.

இஸ்லாமிய அரசை அடைவதற்கான அந்த வரலாற்று வடிவம் இப்போதும் சாத்தியமாயின் அதைவிட இன்னொரு வடிவத்தை அதனோடு இணைத்து நோக்க முடியாது. ஏனெனில், மிக இலகுவான முறையில் பிரதிகூலங்கள் குறைந்த நிலையில் அடையக் கூடிய வழிமுறை அது என்பதில் சந்தேகமில்லை. ஆனாலும், எமது ஆசையும் எதிர்பார்ப்பும் ஒன்று. யதார்த்தம் வேறல்லவா?!

இந்த ஒரே வரலாற்று வழிமுறையை விட்டு சற்றேனும் விலகாது அதனையே நோக்குபவர் இனனொரு வழிமுறையை ஆகுமானதாகக் காண மாட்டார். ஏனெனில், வேறு வழிமுறைகள் மூலம் சில நன்மை களையும், சில குறுகிய கால இலக்குகளையும் அடைந்து கொள்ள முடியுமாயின் பல பிரதிகூலங்களையும் அவை தரும். இப்பின்னணி யில்தான் இஸ்லாம் அல்லாத ஆட்சியில் பங்குகொள்ளல் கூடாது என்ற பத்வா தோன்றுகிறது.

வேறு சில இஸ்லாமியவாதிகள் அந்த வரலாற்று இலட்சிய வடி வம் நவீன உலகில் நடைமுறையாவது சாத்தியமில்லை; எனவே,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியுமான ஏனைய வழிமுறைகளைக் கையாண்டு இஸ்லாமிய அரசை உருவாக்க வேண்டும் என வாதிக்கின்றனர். அவ்வாறில்லையாயின் இந்தப் போராட்டத்திலிருந்து ஒதுங்கும் எதிர்மறை நிலைப்பாட்டையே எடுக்க வேண்டும். அது நவீன உலகில் பாதிப்பு ஏற்படுத்தும் வட்டத்திலிருந்து வெளியேறச் செய்யும், முடியுமான மாற்றத்தையும் செய்யாது ஒதுங்கச் செய்யும், பெரிய தீமையை ஒழிக்க சிறிய தீமையைச் செய்யும் நிலையை விட்டு நீங்கச் செய்யும்.

## கிலாபத் அகற்றப்பட்டதால் ஏற்பட்ட பாதிப்பு

இஸ்லாமிய கிலாபத்தை அகற்றியதன் ஊடாக இஸ்லாத்தை ஆட்சி பீடத்திலிருந்து அகற்றியமைதான் இஸ்லாத்தின் இந்த நீண்ட வரலாற்றில் முஸ்லிம்கள் மீது விழுந்த மிகப் பெரிய அடியாகும். முஸ்லிம்கள் அவர்கள் பல்வேறு விவகாரங்களிலும் அனுபவித்து வரும் பிரச்சினைகள் அனைத்துக்கும் இப்பெரும் நிகழ்வே காரணமாகும். இப்பெரும் துன்பத்திலிருந்து முஸ்லிம்கள் மீண்டு இஸ்லாமிய அரசொன்றை உருவாக்குவதில் வெற்றி பெறுவார்களானால் ஏனைய அனைத்துப் பிரச்சினைகளையும் தீர்ப்பதிலே அவர்கள் இலகுவில் வெற்றி காண்பார்கள். மீண்டுமொரு முறை வரலாற்றை இஸ்லாமியப் போக்கில் நெறிப்படுத்துவதும் அவர்களுக்குச் சாத்தியமாகும்.

இஸ்லாமிய இயக்கம் இப்பெரும் இலக்கை முன்னிறுத்தி எழுந்துள்ளது. இந்நிலையில் முரண்படும் கிளைப் பிரச்சினைகளை வைத்து இஸ்லாமிய இயக்கத்திற்கு ஆட்சேபனை தெரிவித்தல் பொருத்தமானதன்று. ஏனெனில், இங்கு முரண்பாடு கிளைப் பிரச்சினைகளிலேயே. அடையவுள்ள இலக்கோ மிகப் பாரியதொரு விடயம். இதற்கு இஸ்லாமிய சட்டப் பகுதியில் காணப்படும் உதாரணங்கள் மிக அதிகம். உண்மையில் தற்காலத்தில் காணப்படும் ஒரே வழிமுறை என்ற வகையில் இஸ்லாம் அல்லாத அரசு ஒன்றில் பங்கு கொள்ளல் என்ற விடயத்திற்கு எதிராக முன்வைக்கப்படும் ஆட்சேபனைகள் இவ்வகையானவையே.

இஸ்லாமிய ஷரீஅத்தின் நெகிழ்ந்து கொடுக்கும் தன்மையை, யதார்த்தத்தை அவதானிக்கும் பண்பை நோக்கும்போது பெரிய இலக்குகளை அடைய இச்சிறு சிறு முரண்பாடுகள் தடையாக அமைய இடமளிக்கும் என எதிர்பார்க்க முடியாது. அத்தோடு இஸ்லாமிய அரசை அடைய குறிப்பிட்ட ஒரு வழிமுறையை மட்டும் காட்டி அது சில சந்தர்ப்ப சூழ்நிலைகளில் நடைமுறைச் சாத்தியமற்ற நிலையிலும் அதனை முஸ்லிம்கள் பின்பற்ற வேண்டுமென முஸ்லிம்களை இஸ்லாம் நிர்ப்பந்திக்கும் என எதிர்பார்க்க முடியாது. ஏனெனில், இஸ்லாம் எல்லாக் காலத்திற்கும் -சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கும்- உவந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே இப்பகுதியில் வந்திருக்கும் சட்டங்கள் பொதுமைப்படுத்தப் படக் கூடாது. அவை, நடைமுறைச் சாத்தியம், அவற்றால் ஏற்படும் நன்மைகள், தீமைகள் என்பவற்றோடு வைத்தே நோக்கப்பட வேண் டும். ஆரம்ப வரலாற்றின் அந்த முதல் வடிவம் நடைமுறைச் சாத்திய மற்றதானால், இரண்டாவது, மூன்றாவது, நான்காவது எனப் பல வழிமுறைகளைத் தேட வேண்டும். அது இடம், காலம், ஒவ்வொரு நாட்டிலும் இஸ்லாமிய இயக்கம் எதிர்கொள்ளும் சூழல்கள் என்ப வற்றை பொறுத்து மாறுபட முடியும். சிலவேளைகளில் நான்கு வழிமுறைகள் இஸ்லாமிய அரசை அடைய காணப்படுகையில் நான் கையுமே குறிப்பிட்டதொரு கட்டத்தில் பின்பற்ற வேண்டி வரலாம். இறுதியில் அவற்றில் ஏதாவதொன்று மிகப் பொருத்தமானதாக அமைய முடியும்.

இஸ்லாம் அல்லாத அரசில் பங்கு கொள்ளலாம் என்று நாம் சொன்ன கருத்திற்கு யூசுப் (அலை) இஸ்லாம் அல்லாத ஆட்சியில் பங்கு கொண்டமையை ஓர் ஆதாரமாகக் கொள்ள முடியும். அவ்வாறே இறைதூதர் (ஸல்) அவர்களது காலப் பிரிவில் மன்னர் நஜ்ஜாஷி ஆட்சியில் தொடர்ந்திருந்தமையையும், இறைதூதர் (ஸல்) அவர்கள் அதற்கு மறுப்புத் தெரிவிக்காமையும் இன்னொரு ஆதாரமாகக் கூற லாம். இதன் விளைவாக நஜ்ஜாஷி இஸ்லாத்தை விட்டு வெளியேறி விட்டார் எனக் கணிக்கப்படவில்லை. அதற்கு மாற்றமாக இறைதூதர் (ஸல்) அவர்கள் அவர் மரணித்ததும் அவருக்காக ஜனாஸா தொழுமாறு கட்டளையிட்டார்கள் என்பது இங்கு அவதானிக்கத்தக்கது.

FAIZAL FAREED
AHATHTHIMURIPPU
140, Rasool Nagar, Nahavillu, Palavi 61280
Tel: 077 0352027, 032 2269077


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1954ல் குவைத்தில் பிறந்த ஷெய்க் நாதிர் நூரி மிகச் சிறந்த இஸ்லாமிய அழைப்பாளர்களுள் ஒருவர்.

வளைகுடாப் பிராந்தியத்திலும் இஸ்லாமிய உலகிலும் மிக முக்கியமான நலன்புரிச் சங்கங்களை உருவாக்குவதில் பாரிய பங்களிப்பை வழங்கியுள்ளார். உலகிலுள்ள முஸ்லிம் சிறுபான்மை சமூகங்கள் பற்றிய ஆழ்ந்த பரிச்சயம் இவருக்குண்டு. இலங்கையில் மேற்கொள்ளப்பட்டு வரும் இஸ்லாமியப் பிரச்சார முயற்சிகளோடு இவர் நீண்டகாலத் தொடர்பு கொண்டவர்.

இந்நூலை எழுதிய ஷெய்க் நாதிர் நூரி ஆழ்ந்த இஸ்லாமிய ஆய்வாளர். சமூக மாற்றத் தளத்தில் நிற்கும் ஒரு போராளியும் கூட. எனவே, அறிவும் ஆய்வும் கள அனுபவமும் இங்கே சந்தித்துக் கொள்கின்றன ; பின்னணியாய் அமைகின்றன. ஆரம்ப கால இஸ்லாமிய வரலாற்று அனுபவங்களின் அடியாக உருவான இமாம்களின் சிந்தனை மற்றும் செயற்பாடுகளின் தொடர்ச்சியில் நவீன காலத்தைப் பொருத்திப் பார்க்கும் ஒரு பெறுமதியான நூலாக இது விளங்குகிறது. இதனை இலங்கை முஸ்லிம்கள் மட்டுமல்ல, சமூக மாற்றத்திற்காக உழைக்கும் அனைத்துத் தமிழ் பேசும் மக்களும் ஈடுபாட்டுடன் படிக்க வேண்டும் - அதனை செயற்பாடுகளாக மொழி பெயர்க்க வேண்டும் என்பதே எமது அவா.

விலை: இலங்கை ரூபா 120.00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org